குருவே துணை

அன்பு நெறியும் ★
★ அருள் நெறியும்

ஆசிரியர்கள்:
பாலகவி. **மீ. கே. வேங்கடராமன்**
வித்துவான். **சு. மங்கையர்க்கரசி**

காஞ்சிபுரம் வித்துவான்
சு. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்களின்
அறுபதாண்டு மணிவிழா நினைவு மலர்

வெளியிடுவோர்:
சற்குருதாசன் டிரஸ்ட்,
11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி
பெரிய காஞ்சிபுரம்-631 502.

1985

ஓம்

குருநாதர் துதி

ஐந்தடக்கி ஒன்ருக்கி
ஆசையறுத் தேய்ந்து
சொந்தமென அவனருளே
எண்ணித்துணி வாயேல்
நந்தமது வினைநீருச்
சுட்டிடுவான் கண்டாய்
எந்தமது மொழியில்லை
ஏற்றமொழி இதுவே.

மணமாலை குலுங்கிடஎன்
மணவாளர் வந்தார்
கணமேனும் நில்லாமல்
கடுகிச்செல் வினையே
குணம்நாடி என்றனையே
குறித்துக்கை பிடித்தார்
மணவாளர் அவர்எனவே
மதித்தேன் என்தோழி.

கைப்பிடித்த மணவாளர்
கண்முன்வந்த பொழுதே
எப்படியென் றுரைத்திடுவேன்
என்புலனும் பொறியும்
இப்படியென் றுரையாமல்
எனைவிட்டகன் றனவே
அப்படியே நான்அவர்தம்
உள்ளமொளித் தனனே.

இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

அன்பு நெறியும் அருள் நெறியும்



ஆசிரியர்கள் :

பாலகவி. மி. கே. வேங்கடராமன்

வித்துவான். சு. மங்கையர்க்கரசி

காஞ்சிபுரம் வித்துவான்

உயர்தவத்திரு. சு. மங்கையர்க்கரசி அம்மையார்

அவர்களின்

அறுபதாண்டு மணிவிழா நினைவு மலர்

வெளியிடுவோர்:

சற்குருதாசன் டிரஸ்ட்,

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி,

பெரிய காஞ்சிபுரம்-631 502.

1985 விலை: 13-00

முதற் பதிப்பு—1985


பிரதிகள்—1000

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

1. பாலகவி. மி. கே. வேங்கடராமன்
இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் அஞ்சல்
(திருநெல்வேலி மாவட்டம்) - 627 904.

2. வித்துவான். சு. மங்கையர்க்கரசி
11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி
பெரிய காஞ்சிபுரம்-631 502.

3. A. வெங்கடாசலம்
உரிமையாளர்: ஸ்மார்ட் பிரிண்டர்ஸ்
161, கோவிந்தப்ப நாயக்கன் வீதி
சென்னை-600 001.



இரெட்டியபட்டி சுவாமிகள்



விநாயகர்　　　　குருநாதர்

ஓ

முன்னுரை

'செந்தமிழ் விளக்க வள்ளலார்', 'ஆட்சிச் சொற்காவலர்'
'சாந்த சீலர்; 'நற்றமிழ் வித்தகர்',
'சிவநெறிக் காவலர்',

அருட்பெருந்திரு. கீ. இராமலிங்கனார், எம்.ஏ.,

அவர்கள்

"**வா**ழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!" என்று மாணிக்க வாசகப் பெருமான், நம் நெஞ்சங்களுக்கே, இடித்துக் கூறிச்சென்றிருக்கிறார் "வாழத் தெரியாதவர் களே! வாழத் தெரிந்தவர்கள் போல, ஆரவாரமான வீண் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றீர்களே! வல்வினைப் பட்டு அவலத்தில் ஆழ்ந்து போகின்றீர்களே! ஆழாமற் காப்பானை ஏத்தத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று அறிவுறுத்துகின்றார் பெருமானார்.

ஆழாமல் காக்க வல்லவன் இறைவன் ஒருவனே; அவன் அன்பு வடிவானவன், அருள் வடிவானவன் என்பதையும், அன்பையும் அருளையும் நாம் போற்றினால் துன்பமாகிய துயரக்கடல் வெள்ளத்தில் வீழ்ந்து விடாமல் நாம் பிழைத்துப் போகலாம் என்பதையும், நாம் கைப் பற்றி ஒழுக வேண்டிய அன்பு வழி எது? அருள்வழி எது? என்பதையும் பற்றியே இந்த நூல் எடுத்தியம்புகிறது. வாழ்வில், நாம் வளமாகவும், மகிழ்ச்சியாகவும், வாழ் வதற்கு அன்பும் அருளும் இன்றியமையாதவை என்னும் உண்மையையும் மிக மிகத் தெளிவாக விளக்குகிறது.

அவாவினால் நாம் உந்தப்பட்டவர்களாகவும், ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரமாகவும் இருக்கின்றோம்.

அவாவினை அகற்றி, ஆசையை ஒடுக்கி, அன்பைப் பெருக்க வேண்டும். நாமே இதைச் செய்து கொள்ள முடியாது. நாம் செய்துள்ள வினை வழி மறிக்கும். வினை உயிரற்ற பொருள், தானே இயங்காது. இறைவன் காலமும் இடமும் அறிந்து, நம்வினைகளை நாம் நுகர்ந்து தீர்க்கும்படி நமக்கு வினைகளை உண்பிக்கின்றான். எனவே இறைவனை இறைஞ்சுவதால், அவன் நம்வினைகளை எப்படி எப்படியோ அகற்றி, ஆசை பாசங்களைக் கடக்கச் செய்து, அன்பினை நாம் கைக்கொள்ளும்படி செய்வான். அவனிடம் நாம் அன்பு பூணும்படி நம்மை ஆட்கொள்வான். அவனிடம் அன்பு கொள்வதற்கு உறுதுணையாக, முதலில் உயிர்களிடத்தில் அன்பு கொள்ளுமாறு நம்மைக் கொண்டு செலுத்துவான். ஏனெனில், அவனே அனைத்து உயிர்களுக்கும் உயிராக உறைகின்றான். உயிர்களிடம் அன்போடு நாம் ஒழுகா விட்டால், அவனுடைய இரக்கத்துக்கு நாம் ஆளாக இயலாது. இச் செய்தி, இந் நூலில் பல அருளாளர்களின் மேற்கோள்களுடனும், அருள்மிகு இரெட்டியப்பட்டி அடிகளாரின் அருளுரைகளுடனும் தெள்ளத் தெளிய விளக்கப் பெற்றிருக்கிறது.

அன்பு வளர வளர, அன்பின் முதிர்ந்த நிலையான அருள் உணர்வு நம் உள்ளத்தில் முகிழ்க்கும். அனைத்து உயிர்களிடத்தும், பற்றற்ற முறையில் அந்த அருள் உணர்வு ஊற்றெடுத்துப் பெருகும். இறைவன், நம்பால் அருள்கனிந்து கடைக்கணிப்பான். ஆசையை ஒழித்து, அன்பினைப் பெருக்கி, நாம் நன்னெறியில் நடந்து வர வேண்டும். ஆண்டவன் அருள் நம்மைப் பிறவிப் பிணியில் இருந்து நீக்கி, முத்தி நிலைக்கு ஆளாக்கிவிடும். இவ்வாறு ஆண்டவனால் அருள்புரியப் பெற்ற அருட்பெருந்தகையார்களின் வரலாறுகளும், பொன்மொழிகளும் பசுமரத்தாணிபோல் நம் உள்ளத்தில் பதிந்து நெஞ்சினை உருக்கி, நாமும் அவர்கள் வழியில் நடக்க நமக்குத் துணைபுரியும் வகையில் சொல் ஓவியங்களாக இந் நூலில் தீட்டப்பெற்றுள்ளன. அருள்மிகு குருபரனாரின் மாணிக்கங்களான அருள் வாக்குகள் பதித்த அணிகலன்களாக அவை மிளிர்கின்றன.

வாழும் வகையறியாமல் திண்டாடித் திகைத்துக் கொண்டுள்ள பலருக்கும் இந்நூல் வழிகாட்டும் வான்

பொருளாகத் திகழ்கின்றது. அன்ருடம் ஓதி, அழுக்கேறிய மனத்தைச் செம்மை செய்து கொள்ளும் செம் பொருளாக மிளிர்கின்றது. பூசையில் வைத்து மலர் தூவிப் போற்றிக் கொண்டாடி எடுத்து, ஓதி வரவேண்டிய உயர் செந் தமிழ்த் திருவருள் நூல் இது. படிக்கப் படிக்கத், தெவிட்டாத அமுதம்போல் சுவைமிகுத்து வரும் பாங்கான பனுவல், படிப்பதில், சொற்சிக்கல் ஏதுமில்லை. பொருளைப் புரிந்து கொள்வதிலும் தட்டுத்தடை எதுவும் கிடையாது. நடை ஆற்றெழுக்காகச் செல்கின்றது. பொருள் தேனெழுக்காக இனிக்கின்றது. மொழிவளமை பெற்றிராதவர்களும் எளிதில் படிப்பதற்குரிய பான்மையது. 130 பக்கங்களே. ஒவ்வொருநாளும் ஒரு முறை ஓதுவது என்னும் உறுதிகொண்டால், சில நாள்களுக் குள்ளேயே மனத்தைத் திருத்தி மாண்பாக்கிவிடும் தன்மை யுள்ளது.

நூலாசிரியர்கள் இருவரும், இளமை முதலே திரு வருள் வயப்பட்டவர்கள். வாழ்க்கைத்தளையில் சிக்குண்டு, உழன்று, உதறியெழுந்து, அன்பைப் பெருக்கி ஆண்டவர் அருளைப்பெற்றவர்கள். இயல்பாகவே புலமைமிக்கவர்கள். திருமதி மங்கையர்க்கரசியார் பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்று, ஆசிரியராகப் பணி புரிந்து ஒய்வு பூண்டிருப்பவர். குருபரனுர் 'இரெட்டியபட்டி அடிகளாரின் முழுமை சான்ற அருளுக்கு அருகரானவர், பலரை, குருதேவரின் அருள் நெறிக்கு ஆளாக்கும் அருள் வளம் பொருந்தியவர், அடியவர்கள் அனைவராலும் "அருள் ஞானச் செல்வத்தாய்" என்று பூசிக்கப்பெறு கிறவர், என் மகளனைய செல்வியார். அவரது-60-அகவை நிறைவின் நினைவாக இந்நூல் வெளிவருவது போற்றற் பாலது.

தவத்திரு பாலகவி மி.கே. வேங்கடராமன் அவர்கள் இளமைப் பருவத்திலேயே அருட்பாடல்பாடும் அருந்தகை யார் ஆவார்கள். குருநாதரின் அருட்சட்ட நெறிக்கு, ஆயிரம் ஆயிரம் அருட்பாடல்களை ஆக்கி அமைத்திருப் பவர்கள். குருபிரானுரின் வழிபாட்டுக்கு இன்றியமையா தனவான மந்திரப் பாக்களை வரைந்தளித்திருப்பவர்கள். குருபெருமானுரின் அருள் வரலாற்றைப் பல்லாயிரம் பாடல் கொண்ட ஒரு பெருங்காப்பியமாகப் படைத்து

அளித்துள்ளார்கள், குரு நாயகனாரின் அருள் மொழிகள் ''வேதம்'' என்றால், இவர்கள் படைத்துள்ள பாடல்கள் ''ஆகமமா''க இலங்கி அருட் சட்டநெறியை வளர்த்து வரும் வளமை மிக்கன.

இந்நூலை ஊன்றிப் படித்துச் சுவைக்கவும், என் உள்ளம் அன்பு நலமும், அருள்நலமும் மலரப்பெறவும் எனக்கு வாய்ப்பளிக்கும் முறையில் இதற்கு ஒரு முன்னுரை வரைந்து தரும் பேற்றினை எனக்கு அளித்த இந்நூல் ஆசிரியர்கள் இருவருக்கும் என் அன்பு சிவணிய நன்றி உணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஏற்கனவே அருட்சட்டநெறியில் ஒழுகுபவர்களேயன்றி, இது வரையில் அந்தப் பேற்றினைப் பெருத பிற, பலரும் இதனைப், படித்து அடியவர்களாகி, இம்மை மறுமை நலங்களை இனிது பூணவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன், குருவருள் துணைநின்று நலம் புரிய இறைஞ்சுகிறேன்,

கீ. இராமலிங்கம்
29—8—1985

'தமிழ்மணம்'
சென்னை-30

நன்றியுரை :

இந்நூலுக்குக் கருணைகூர்ந்து முன்னுரை வழங்கியுதவிய,

'ஆட்சிச் சொற்காவலர்', 'நற்றமிழ் வித்தகர்'
அருட்பெருந்திரு. கீ. இராமலிங்கனார், எம்.ஏ.,
அவர்கட்கும்,

இந்நூலை இனிது அச்சிட்டுத்தந்த காஞ்சிபுரம்
கமலம் பிரஸ் உரிமையாளர் அவர்கட்கும்,

அனைத்துக்கும் காரணமாய் விளங்கியருளும் குருபெருமானின் தனிப்பெருங் கருணைக்கும் எமது உளமார்ந்த பணிவும், நன்றியும் உரியனவாகும்.

வாழ்க குருஅருள்! வளர்க வளமெலாம்!!

இரெட்டியப்பட்டி
30—9—1985.

சற்குருதாசன் டிரஸ்ட்.

பொருளடக்கம்

குருவே துணை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

திரு அவதாரம்:-

பூவுலகிற் பொலிவுமிகும் முத்தும், இனிமைசால் தமிழும், மணம் கமழும் சந்தனமும், மகிழ்வூட்டும் தென்றலும் எழிலுறத்தோன்றும் பாண்டி நன்னாட்டில், நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், நாகலாபுரத்தை அடுத்து இலங்கும் **இரெட்டியப்பட்டி** யெனும் திருத்தலத்தில் திருமிகு வீரபத்திரப் பிள்ளை ஆவுடை அம்மை என்னும் பெற்றோர் ஆற்றிய நற்றவப் பயனாய் உலகத்தை உய்விக்கத்தக்க **சுப்ரமண்யம்** எனும் அருட் குழந்தையாக 1856 நள ஆண்டு புரட்டாசி இரேவதி நன்னாளில் சுவாமிகள் அவதரித்தனர். இளம் வயதிலேயே தெய்விகத் தன்மை மிகுந்து விளங்கினர்.

பள்ளிப்படிப்பு முடிந்ததும், பயிர்த் தொழிற்கு ஏகினர். நிலம் பன்மடங்காக விளைவளித்தது. 'சுப்ரமண்யம் கைராசி உடையவன்' எனப் பெற்றாரும் உற்றாரும் புகழ்ந்தனர். புகழை விரும்பாப் பூரணரான இவர், உழைத்தும் உணவுக்குப் பற்றாமல் தவிக்கும் ஏழை மக்களைக் கண்டிரங்கி, தூத்துக்குடிக்கு வண்டி கட்டிச்சென்று, உணவுப் பொருள்கள் வாங்கி வந்து, கொள் விலைக்கே விற்று உதவினர்.

மதுரை வாழ்க்கை.-

பின்னர் மதுரை சென்று, ஒரு இஸ்லாமியர் கடையில் கணக்குப்பிள்ளையாய் அமர்ந்தனர். நாள்தோறும் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து, வைகை நீராடி, விநாயகர் கோயிலில் வழிபாடாற்றினர். உலக மக்கள் உய்ய உயர்வழி நாடினர்.

மக்கள் மறுபடியும் பிறவாது, வீடுபேறு அடைதற்கு இக்கலிகாலத்தில் கையாளக்கூடிய எளிய முறைகள் யாவை என அவனருளை நினைந்து வேண்டினர். அம்முறைகள் நம்நாட்டு ஏழ்மை நிலைக்கு ஏற்றனவாயும், இம்மை நலங்கள்

அனைத்தையும் இனிது கூட்டுவிக்க வல்லனவாயும் இருத்தல் வேண்டும் என இறைவன் திருக்கருணையையே எண்ணி இறைஞ்சலாயினர். பெற்றோரின் முயற்சியால் இவர்க்குத் திருமணம் நடந்தது.

பரிபூர்ண விநாயகர் அருட் காட்சி:-

ஒருநாள் வைகை நதியின் தென்கரையில் பரிபூர்ண விநாயகர் அருட்காட்சி கண்டு ஆனந்தித்தனர். அம்மூர்த்தி சிலையாக மாற, இவர் எடுத்து அருகிருந்த ஒரு அரசமரத்தடியில் அமர்த்தி வழிபாடாற்றினர். சித்துகள் பல நிகழ்ந்தன. மக்கள் திரண்டு குறை பல தீர்ந்து, பயன் பல பெற்றனர்.

பொதிகைத் தவமும், பூர்ணர் அருளும்:-

இவர் அங்காடியர் விருப்பப்படி பம்பாயில் சென்று தங்கி, கப்பல் வாணிபம் நடத்தினர். ஓராண்டுக்குப் பின் மதுரை திரும்பினர். இவர்க்கு அருள் நாட்டம் மிகுந்தது. பொதிகை சென்று குற்றாலத்தில் பன்னிரண்டு ஆண்டு அருந்தவம் புரிந்து, விநாயகப் பெருமானின் விஸ்வரூப தரிசனம் கண்டனர். உயிர்கள் அனைத்தும் உய்ய எளிய வழியொன்றைத் திருவருளால் பெற்றனர். அதனை உலகுக்களிக்க விநாயகரிடம் அனுமதியும், உறுதிமொழியும் பெற்று, நாடுமுழுதும் சுற்றி, நல்லடியார்களைத் தேர்ந்தெடுத்து, தூய அந்நெறியை "**அருட் சட்டம்**" என்ற பெயரால் அவனிக்குப் பொது நெறியாக வழங்கி அரும் பெருந்துணையா யிருந்து அருளாட்சி புரிந்து வருகின்றனர்.

இனம், மதம், மொழி, நாடு, வயது எனும் பேதமின்றிக் கற்றூர், கல்லார், செல்வர், வறிஞர் என்ற வேறுபாடின்றி, எல்லா உயிர்க்கும் பொதுவான அச்சிறந்த நெறியை - எளிய நெறியைக் - கடைப் பிடித்து அருட்பயன் பெற்று நிறை நலத்தோடு, ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் இனிது வாழ்ந்து வருகின்றனர்.

அந்நெறியின் சுருக்கம் இந் நூலின் இறுதியில் தரப் பெற்றுள்ளது.

சுவாமிகளின் அருள்மயமான தெய்விகத் தோற்றமும், ஞான ஒளிவீசும் திருவிழிகளும், தவத்தின் ஆற்றலைக் காட்டும்

திருமுடியும், நீண்ட தாடியும், உயர்நெறி கூறும் திருவாயும், 'ஏனுனக் கிந்தவாட்டம்' என அபயம் அளிக்கும் திருக்கரங் களும், தம்மை நாடி வரும் உயிர்களைக் கரையேற்றும் திருவடிகளும், அனைவரையும் தம்பால் ஈர்க்கும் தன்மை யுடையன. சுவாமிகள் அமரும் இடமெல்லாம் தெய்வ மணம் கமழும். அவர்களின் பேச்சிலும் மூச்சிலும் கருணை கனிந்திலங்கும். அவர்கள் உரையெலாம் மறைமொழியாகும்.

சுவாமிகள் பலமுறையும் அடியவர் இருப்பிடம் சென்று, கைம்மாறு சிறிதும் கருதாது, அடியவர்க்குற்ற ஐயங்கள் தவிர்த்து, அருட்பயிர் வளர்த்து வந்தனர்.

1923-ல் மார்கழி மாதம் அனுடவிண்மீனில் இரெட்டியப் பட்டியில் தாம் அவதரித்த அதே இடத்தில் அடக்கமாகித் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளனர். தாம் உலகில் உலாவிக் கொண்டிருந்தபோது ஆற்றிய அருளற்புதங்களைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்பாக இன்றும் அருளற்புதங்கள் பலப்பல நடத்திய வண்ணம், தோன்ருத் துணையாயிருந்து, அடியவர் பலர்க்கும் இம்மை மறுமை நலங்கள் அனைத்தும் இனிது பாலித்துப் பேணி வருகின்றனர்.

புதுப்புது அடியவர்கள் ஆயிரக்கணக்கில் சேர்ந்து, குருபெருமானின் திருவருட் செயல்களை அனுபவத்தில் நன்றுணர்ந்து, மேலும் மேலும் உறுதியும் நம்பிக்கையும் மிகுந்து, தாமே பலர்க்குக் குருவருள் துணையால் நல்வழி உணர்த்தக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் பெற்றுத் திகழ் கின்றனர். குறைபல தீர்ந்து, வளம்பல எய்தி இன்பவாழ் வாற்றுகின்றனர்.

எங்கும் நிறைந்த ஆண்டவர் அருளை ஏற்று அனுபவிப் பதற்கு, விழைந்து உழைத்துக் கனிந்து உருகும் அகிலத்துள்ள அனைவர்க்கும் வளமையுடன் வழிகாட்ட வான்பொருளாகிய எந்தை குருநாதர் என்றும் இருந்து வருகின்ருர்.

அருட் சட்டநெறியை அனைவரும் கைக்கொண்டு அருள்நலம் பெறலாம், ஆனந்தம் எய்தலாம். குருபெருமான் அருள்துணை நிச்சயம் காத்தருளும்.

வாழ்க குருநெறி ! வளர்க வளமெலாம் ! !

பிரார்த்தனை

பரம காருண்ய மூர்த்தியே! பரப்ரம்ம சொரூபமே! அடியார்கள் அல்லலைப் போக்கும் அருந் துணையே! இப்புவி மேல் உம் அருட்சட்டம் ஏற்று நடக்கும் அடியார்களான எவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாய், தீமைகளைக்களைந்து, நன்மைகளைப் பேசியும், வளர்த்தும் தேவரீருடைய திருவருட் பணிகளைப் புரிந்தும், நாளும் உம்வழி நடக்க நல்லருள் செய்வீர்!

இறைவா! இறைவா! இறைவா!

எங்கும் நிறைந்த ஆனந்த மயமே! எல்லா உயிர்களையும் ஆட்டுவிக்கும் கருணைக் கடலே! யாங்கள் செய்யும் இச் சிறு பூசையில் ஏதேனும் தவறுகள் இருப்பின், மன்னித்தருளி, எங்கள் இல்லமும் எல்லா அடியார்களின் இல்லங்களும், எல்லா உலகிலும் வாழ்கின்ற எல்லா உயிர்களும், தீமை நீங்கி, நன்மை பெருகி, ஓங்கி வாழ அருள் செய்வீராக!

யாங்கள் உங்கள் அடிமை

யாங்கள் உங்கள் அடிமை

யாங்கள் உங்கள் அடிமை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

அன்பு நெறியும் அருள் நெறியும்

அன்பு நெறி

உயிர்களின் வாழ்வை இனியதாகவும், ஒளிமிக்கதாகவும் தெய்விகப் பொலிவுடையதாகவும் ஆக்கி, பிறவிப் பெரும் பயனை எய்தச் செய்வது அன்பேயாகும் என்பது ஆன்றோர் கண்ட அனுபவ உண்மை. ஐம்புலன்கள், அந்தக்கரணங்கள் போன்றவை உலகில் உள்ள உயிர்களை ஆட்டிப் படைக்கின்றன. நம் வினைக்கு ஏற்ப, மனமும் மற்ற பொறிபுலன்களும் இயங்கு கின்றன.

மூன்று என்ற எண்ணில் தமிழர்கள் மிகவும் விருப்பம் உடையவர்கள். முத்தமிழ், மூவேந்தர், முப்பழம் என அடுக்கிக் கொண்டே போகலாம். ஏன்? தமிழ் என்ற சொல்லே மூன்று எழுத்துக்களால் ஆனதுதான். அன்பு, அருள், காதல், சக்தி இனிமை, அறம், வீரம் போன்ற பல சொற்கள் தமிழில் மூன்று எழுத்துக்களில் அமைந்து நம் வாழ்வில் பங்கேற்கின்றன. அன்பு, அருள், அறிவு முதலிய குணங்கள் கண்ணால் காண இயலாதன. ஆனாலும் உயிர்களைத் தம்வழி இயக்கும் வல்லமை வாய்ந்தவை. அத்தகைய மாண்புமிகு சொற்களில் 'அன்பு' என்பது பற்றியும், அதன் இயல்பு பற்றியும், அன்பு நெறியைப் பற்றியும், இறையருளைப் பெற எவ்வாறு அன்பு உதவுகின்றது என்பது பற்றியும், அன்பிலார் செயல், அன்புடையார் செயல் என்பன பற்றியும் ஆராய்வது நம் ஆன்ம முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் என எண்ணியே இக்கட்டுரை அமை கின்றது.

உலகில் ஆசை, அன்பு, அருள் என்ற மூன்று நிலைகள் உள்ளன. ஆசையும் அன்பும் அனைத்து உயிர்களிடத்திலும் அமைந்து, அவற்றின் வாழ்வை அமைக்கின்றன. அருள், இறை உணர்வு மிக்க சான்றோர்களிடம் சிறப்பாக அமைந்து இலங்கு கின்றது.

ஆசை:-

ஆசை இல்லாத உயிர்களே இல்லை. ஆசை காரண மாகவே பிறவி அமைகின்றது. "அவாவென்ப எல்லா உயிர்க்கு மெஞ் ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து", என்பது திருக்குறள். ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை ஆசைக்கு அடிமைப்படுகிறார்கள். ஆசையின் இயல்பு, காணும் பொருள்கள் அனைத்தையும் தானே அடைய வேண்டும் என்பதாகும். இதனையே மண்ணாசை, பெண்ணாசை, பொன் னாசை என்று மூவகையாகப் பிரித்தனர் நம் முன்னோர்கள். இந்த மூவகை ஆசையின் காரணமாகப் பதவியையும், தவத் தையும், உயிரையும் இழந்தவர்கள் பலர். இது மனிதர்களை மட்டுமன்றி தேவர்களையும் விட்டிலது. நம் புராண, இதிகாசங் களில் உள்ள கதைகளே இதற்குச் சான்றாகும். இந்திரன், விசுவாமித்திரன் மற்றும் பல அரசர்களின் வரலாறுகள் நாம் அறிந்தவையே. ஆசை உடையவன் பொருள்களைச் சேர்த்து, அவற்றைக் காத்து, பின் இழந்து பல அல்லல்களுக்கு ஆளாவான்.

ஆசை முற்றிலும் தன்னலம் உடையது. அதற்குப் பிறர் நலத்தைப் பற்றிய எண்ணம் கிடையாது. எப்படியேனும் தான் வாழ்ந்தால் போதுமானது என எண்ணும். தான் வாழ் வதற்காகத், தன் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற் காக, எத்தகைய கொடுஞ் செயல்களையும் செய்ய அஞ்சாது; பழி பாவங்களுக்குப் பயப்படாது; பிறர் துன்பங்களை உண ராது; இந்த உலகமே அழிந்தாலும் கவலைப்படாது. ஆசை வயப்பட்ட மனிதன் தன் வசமின்றி முற்றிலும் அதன் வசம் ஆகிவிடுகின்றான். பேய் பிடித்தவன் எவ்வாறு தன்வசமின்றி இருக்கின்றானோ அவ்வாறே ஆசை வயப்பட்டவனும் இயங்கு வதால் ஆசையைப் 'பேய்' எனப் பெரியோர்கள் கூறினர். திருவள்ளுவர் இதனை அவா என்று குறிப்பார்.

இந்த ஆசை எதனால் உண்டாகிறது? பிறர் ஆக்கங் கண்டு, கொள்ளும் அழுக்காற்றால் உண்டாவது. அழுக்காறு காரணமாக அவா உண்டாகிறது. அதாவது ஆசை உண்டா கின்றது. அவ்வாசையை நிறைவேற்றப் பாடுபடுகிறான். அது நிறைவேறாதபோது, வெகுளி உண்டாகின்றது. ஆசைப் பிசாசு பிடித்த ஒருவனுக்கு யார் என்ன அறிவுரை கூறினாலும் ஏறாது. வீடணன், கும்பகருணன் மற்றும் பல அமைச்சர்கள்

கூறிய அறிவுரைகள் பெண்ணாசை பிடித்த இராவணன் காதில் ஏறியதா? சிங்கமுகன் மற்றும் பலரின் அறிவுரைகள் பதவி ஆசை கொண்ட சூரபத்மன் காதில் ஏறியதா? இதுபோன்று எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். எனவே ஆசை கொண்டவனை அழித்துவிட்டுத்தான் அகலும். ஆசை வயப்பட்டவன் அழிவது திண்ணம்.

தூண்டிலில் இருக்கும் புழுவாகிய உணவுக்கு ஆசைப் பட்டுத் தன் உயிரையே கொடுக்கும் மீன்; எச்சில் இலையில் உள்ள எலும்புத் துண்டை நக்கும் ஆசையால் தன் பல்லில் இருந்து வரும் நிணநீரையே உண்டு தனக்கு வாய்ப்புண்ணை ஏற்படுத்திக் கொள்ளும் நாய்; ஒளியிடம் உள்ள ஆசையால் தன் உயிரையே அழித்துக் கொள்ளும் விட்டில் பூச்சி; இவ்வாறு ஆசையின் வாய்ப்பட்டுத் தங்களையே அழித்துக் கொள்ளும் உயிரினங்கள் பல.

ஆசை படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்த மாமே.

என்பது திருமந்திரம்.

"இன்பம் இடையறு தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"

என்பது திருக்குறள்

"ஆசை வாய்ப்பட்ட சிந்தைய ராகி"

என்பது பெரியாழ்வார் திருமொழி.

எனவே எல்லாம் அறிந்த ஞானியர், ஆசையை வெறுத் தனர். தம்மை அது ஒட்டவிடாமல் இறையருளால் தடுத்துக் கொண்டனர். நமக்கும் தம் அருட்பாடல்களால் விளக்கி உள்ளனர்.

"ஆசையறுமின் ஆசையறுமின்
ஈசனோ டாயினும் ஆசையறுமின்"

என்பது திருமந்திரம்.

ஆசையை அகற்றுவதற்கு இரெட்டியப்பட்டி சுவாமிகள் தக்கவொரு வழியைச் சொல்லுகிறார். இறைவன் திருவடியை அனுதினமும் நெஞ்சில், இதயத்தில் அமைத்துப் போற்ற

வேண்டும். சதாசர்வ காலமும் இடைவிடாது போற்றிப் பழகி வந்தால் ஆசைப்பிசாசு அகன்று விடும். உண்மையின்பம் கைகூடும் என்கிறுர்.

''ஆசைப் பிசாசைத் துரத்து-ஐயன் அடியை
அனுதினம் நெஞ்சில் இருத்து.''

என்பது இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள்வாக்கு.

இக்கருத்தையே திருவள்ளுவர்,

பற்றுக பற்றற்ருன் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என அருளியுள்ளார். ஆசை விடவேண்டுமானுல், அதாவது நம்மை விட்டகல வேண்டுமானுல், பற்றற்றவனுகிய இறைவனைப் பற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறுர். இறைவனைப் பற்றுவதற்கு நாம் அன்புமயமாய் ஆகவேண்டும்.

இந்த ஆசையானது நம்மைவிட்டு அடியோடு தொலைய வேண்டும். துன்பங்களுக்கெல்லாம் விதையாக விளங்குகின்ற ஆசை நம்மைவிட்டு ஒழிந்தால்தான், நாம்ஆன்ம முன்னேற்றம் அடைய முடியும், ஆசை வலைக்குட்படாமல் இருக்கவே நம் முன்னோர்கள் காட்டிலும் மலையிலும் சென்று கடுந்தவம் ஆற்றினர். ஆனுல் இன்றைய நம்நிலை என்ன? நாம்இல்லறத்தை விட்டுஉடனே காடு, மலைகளை நாடிச்செல்ல முடியுமா? இயலாத செயல் அது. எனவே ஆசையை விட வழி தேடவேண்டும்.

அன்பு:

''அகர முதல எழுத்தெல்லாம்'' என்றபடி, எழுத்துக்களுக்கு முதன்மையாகவும், உயிராகவும் இலங்குகின்ற அகரத்தை முதலிலே கொண்டு, உயிர்மெய் இனத்தின் ஈற்றிலே உள்ள னகரத்தை அடுத்துக் கொண்டு, பதினெட்டு மெய்யெழுத்துக்களிலும் இடையே உள்ளதாகிய பகரத்தை ஈற்றிலே கொண்டு, அகர உகாரங்களே உயிர்களுக்கு முதலும் முடிவுமாய் இருக்கின்றன என்பதை உணர்த்த பகர மெய்யின் மேலேறி வருகின்ற உகரத்தைக் கொண்டு, எல்லா உலகங்களின் முதலிலும் இடையிலும் கடையிலும் இடையருது கலந்து நின்று விளங்குகின்ற தன்மையுடையது அன்பு என்னும் சொல்.

உலக உயிர்கள் அன்பை அடிப்படையாகக் கொண்டு உள்ளன. இந்த அன்பு இன்றேல் உலக வாழ்வே இல்லை, ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்பது வள்ளுவர் வாக்கு, கூடி வாழும் உயிரினங்கள் அன்பால் கட்டுப்பட்டுள்ளன. இப்பரந்த உலகம் அன்பினுல் செயல்படுகின்றது. இறைவனின் அன்பு இல்லையேல் உயிர்களும் உலகமும் இல்லை. குருவின் அன்பு இல்லையேல் சீடர்களுக்குத் தெளிவு இல்லை. பெற்ருேர் தம் அன்பு இல்லையேல் குழந்தைகளின் முழுவளர்ச்சி இல்லை. இவ்வாறு அன்பு எல்லா உயிர்களிடத்தும் பின்னிப் பிணைந்து விளங்குகின்றது.

அன்பின் தன்மை:-

அன்பாவது தன்னுல் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி, அன்பானது குடத்துள் விளக்கு போலவும், உறையுள் இட்ட வாள் போலவும் விளங்கும். பிறருக்கு எடுத்துக்காட்டக் கூடியதன்று. அன்பு உடைமையால் வெளிப்படும் செயல்களைக் காணும்போதுதான் அங்கு அன்பு உண்டென்று அறிந்து கொள்ளலாம். நாயகி, நாயகனது பெயரைக் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பாகும்; அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பாகும்; அவனைக் கூடின உடன் வசமழிதல் கடையன்பாகும்.

அன்புசெய் முறைகள்:-

உயர்ந்தோர் இடம் செய்யும் அன்பு பக்தி எனப்படும். பக்தியினுல் செய்யும்செயல் வழிபாடு ஆகும். அவர்கள் வழிப் பட்டிருத்தல் வழிபாடு எனப்படும். அவர்கள் சொல்லைக் கேட்டல், அவர்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல், அவர்களுக்கு உகந்தவற்றைச் செய்தல், அவர்கள் விரும்பாதவற்றைத் தவிர்த்தல் இவையே பக்தி செய்பவன் செய்ய வேண்டிய செயல்களாம்.

தாய் வழிப்படுதல், தந்தை வழிப்படுதல், குரு வழிப் படுதல், இறை வழிப்படுதல், அடியார் வழிப்படுதல், எல்லா உயிர்களையும் இறைவனுக எண்ணி வழிப்படுதல் என வழிபாடு பல வகைப்படும். தனக்குக் கிடைப்பதைத் தான் வழி படுகின்றவர்களுக்குக் கொடுத்தல் அதாவது அர்ப்பணித்தல் வழிபாட்டின் செயலாகும்.

பெரிய புராணத்தில் கூறப்பெறும் அடியார்கள் குரு வழிபாடு, லிங்க வழிபாடு, சங்கம வழிபாடு செய்து முத்திப் பேறடைந்தார்கள்.

அன்பின் பண்பு:-

பறவைகள் தங்கள் குஞ்சுகளுக்காக நெடுந்தூரம் சென்று இரைதேடிக் கொண்டுவந்து ஊட்டுவதும், பகைவர்களிடம் இருந்து தம் குஞ்சுகளைக் காப்பதும் நாம் அன்றாடம் காணும் அன்பின் செயல்களாகும்.

சங்க காலச் செய்யுளில் யானையின் அன்பைப்பற்றிய பாலை நிலப்பாடல் ஒன்று உள்ளது.

கடுமையான வெயிலால் காய்ந்து தீய்ந்து கருகிய பாலை நிலம்; அருந்த நீர் எங்கும் இல்லாத நிலை; கானல் நீர் மட்டுமே கண்ணுக்குத் தெரியும். இத்தகு கொடிய பாலை நிலத்தில் இரண்டு யானைகள் செல்கின்றன. ஒன்று ஆண்யானை, மற்றது பெண்யானை. இரண்டுக்கும் நீர்வேட்கை, நீரை நாடி நெடுந் தூரம் அலைந்து திரிந்தபின், ஒரு சிறிய பாலைவனச் சோலையில் வற்றிய குளத்தில் சேற்றுடன் கலந்த நீர் சிறிதளவு காணப் பட்டது. இரண்டும் நீர் அருந்தத் துதிக்கையை வைத்தன. நீண்ட நேரம் ஆகியும் நீர் கொஞ்சமும் குறையவில்லை. என்னே வியப்பு! நீர் சுரக்கின்றதா? அன்று, அன்று. பெண்யானை அருந்தட்டும் என்று ஆண்யானை நீர் குடிப்பதுபோல் பாவனை செய்கின்றது. ஆண்யானை அருந்தட்டும் என்று பெண்யானை நீர் பருகுவது போன்று பாவனை செய்கின்றது. இரண்டு உள்ளங்களும் கலந்து ஒன்றிய தன்மையில் அவற்றின் உள்ளே எழும் அன்பின் தன்மையை இச்செயலால் அறியலாம். இவ்வாறு அன்பு பிறர்க்குக் கொடுக்கும் தன்மையுடையது; ஆசையைப் போன்று அனைத்தையும் தனக்கென வைத்துக் கொள்ளாமல், தன் உயிரையும் கொடுக்கும் தன்மையுடையது. இது பற்றியே,

> **"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு"**

என்று அருளிச் செய்தார் வள்ளுவப் பெருந்தகை,

என்பும் உரியர் பிறர்க்கு:-

தேவேந்திரனுக்கு ஓர் இடுக்கண் ஏற்பட்டது. விருத்திராசுரன் என்னும் அசுரன் இந்திரனுடன் போர் புரிந்தான். அவனுடைய படைக்கலங்களை எதிர்க்கவும், அவனை அழிக்கவும் இயலாத நிலையில் தேவேந்திரன் மனங் கலங்கி நின்றான். இந்நிலையில் நாரதமாமுனிவர் அவ்விடம் வந்தார். இந்திரனின் துயரநிலையை அறிந்தார்; வழியும் கூறினார். பூவுலகில் '**ததீசி**' என்ற முனிவர் கடுந்தவம் ஆற்றி வருகிறார் அவருடைய முதுகெலும்புத் தண்டைக் கொண்டு வஜ்ராயுதம் செய்து, அதனைப் பயன்படுத்தினால் அசுரன் அழிவான் என்று நாரதர் கூறினார். மகிழ்ச்சியுற்ற இந்திரன் ததீசி முனிவரை நாடி வந்தான். ஆழ்ந்த தவத்தில் திளைத்திருந்த முனிவர் சற்றே கண் விழித்தார். உடனே இந்திரன் விழுந்து வணங்கிச் செய்தியைக் கூறினான். மனம் மிக மகிழ்ந்த முனிவர், "யாம் கண்களை மூடித்தவத்தில் ஆழ்ந்து விடுகின்றோம். நீ எண்ணியதைச் செய்து கொள்" என்று கூறி அருந்தவத்திலாழ்ந்தார். இந்திரன் அம்முனிபுங்கவரின் முதுகுத்தண்டு எலும்பைக் கொண்டு ஆயுதம் செய்து அசுரனை அழித்தான் என்று புராணக் கதை கூறுகிறது. என்பும் பிறர்க்கு உரியவர்களாக வாழ்வது தான் அன்பின் நிலை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்வதுதான் அன்பின் இயல்பு.

எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் அடிப்படையாக அமைந்துள்ள அன்பு, தன்னை ஒத்தாரிடத்தில் செலுத்துங்கால் "**அன்பு**" என்ற பெயர் பெறும்.

கணவனும், மனைவியும்:-

ஒரு கணவன் மனைவி. புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணத்திற்கு முன் கணவனைப்பற்றிய செய்திகளை மனைவி அறியாள். மனைவியைப்பற்றிய செய்திகளைக் கணவன் அறியான். தனித்து வாழ்ந்த அப்போது அவர்கள் உள்ளத்தில் ஆசை குடிகொண்டிருந்தது. மணமான பின் அன்பு அரும்பத் தொடங்கியது. தன்னலம் குறைந்து கணவன், மனைவி நலத்தையும், மனைவி, கணவன் நலத்தையும் நாடுகின்றார்கள். கணவனுக்குப் பாகற்காய் பிடிக்கும், மனைவிக்குப் பிடிக்காது. தன் கணவன் உண்ண வேண்டுமே என்ற அன்பின் காரணமாக அவள் பாகற்காயைச் சமைக்கின்றாள்.

அன்போடு உண்பிக்கின்ருள். அவன் ஆணைப்படி தானும் உண்டு பழகிக்கொள்கிருள். இதுபோன்றே உணவு, உடை, பழக்கவழக்கங்கள் அனைத்தையும் தன் கணவனுக்காக மனைவி விட்டுக் கொடுக்கின்ருள், **தன் கண் அவனுகக் கொள்கிருள்.**

ஈந்து மகிழும் இயல்பு:-

உடன் பிறந்தார்களுக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்தவர்கள் எத்தனையோ பேர். அதில் அவர்கள் இன்பம் காணுகின்ருர்கள் தம்மிடம் அன்பு செய்பவர்களுக்காகத் தாம் எத்தகைய இடர்ப்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிருர்கள் பலர். அவர்கள் அதை இடர்ப் பாடாகவே எண்ணுவதில்லை. பிறர்க்குக் கொடுத்து மகிழ்வதில் இன்பம் காண்கின்றனர்.

அதிகமான் பெற்ற அரிய நெல்லிக்கனியை அவ்வைக் கீந்து மகிழ்ந்தான். பாரி கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தன் பொற்றேரை ஈந்து மகிழ்ந்தான்.

ஒரு தாய், வறுமைக் குடியில் உள்ளவள்; ஒரு தின் பண்டம் அவளுக்குக் கிடைத்தது; அதைத் தன் புடவைத் தலைப்பில் முடிந்து கொணர்ந்து தன் குழந்தைகளுக்குக் கொடுத்து, அவர்கள் ஆவலோடு உண்பதைக் கண்டு அகமகிழ் கின்ருள்.

[இவ்வாறுஅன்பு, கொடுத்து மகிழ்வதைக்காண்கிறேம்.]

தன் கணவன் உண்ணவில்லை என்று கணவன் வரும் வரை உண்ணுமல் அன்பினுல் காத்திருப்பாள் மனைவி, கொஞ்சம் உணவு கிடைத்தால் அதைத் தன் கணவனுக்குக் கொடுத்துத் தான் ஒரு வேளை விட்டு ஒருவேளை உண்டதாகச் சங்க காலச் செய்யுள் கூறுகிறது.

அன்பின் நிலை:-

கன்றுக்குப் பாலூட்டத் துடிக்கும் தாய்ப் பசு, தன் தாய்ப் பறவையைக் காணுது ஏங்கும் பறவைக் குஞ்சுகள் அனைத்தும் அன்பின் வயப்பட்டனவே அன்றே?

கன்று தன்னைப் பேணும் என்று தாய்ப் பசுவோ, தன் குஞ்சுகள் தன்னைக் காக்கும் என்று தாய்ப் பறவையோ

எண்ணுவதில்லை. கைம்மாறு கருதாது, தன்னலம் நோக்காது அன்பு செய்கின்றன. அந்த அன்பு அவ்வளவே, வளர்ந்த பின் கன்றும் குஞ்சுகளும் பிரிந்து விடுகின்றன. இது அன்பின் தொடக்க நிலை.

பகுத்தறிவு உடைய மக்கள் இனத்தில் அன்பின் தன்மை சிறிது வலுப்பெற்றுக் காணப்படுகிறது. தன்னை ஈன்று வளர்த்த தாயிடம் எப்போதும் அன்புடையவனாக இருக்கின்றான் மகன். தன் மகன் சான்றோனாக வளர்ந்து சான்றோர் பலர் போற்ற வாழ்கின்றான் என்பதை அறியும் தாய் ஈன்ற பொழுதில் எய்திய உவகையைவிடப் பெரிதும் உவகை அடைகிறாள். அன்பின் வளர்ச்சி நிலை இங்கு காணப்படுகிறது.

தன் கணவனை எண்ணி, அவன் அன்புச் செயல்களை எண்ணித் தனக்குள்தானே உவகை கொள்கிறாள் மனைவி. தானே சிரிப்பதும், அவன் வாராமையால், பிரிவால் வருந்திக் கண்ணீர் வடித்து ஏங்குதலும், உண்ணவும் மறுத்துப் பட்டினி கிடத்தலும் அன்பின் வளர்ச்சியுற்ற செயல்களாகும்.

தன் அன்பின் கணவன் ஆட்டனத்தியைக் கடல்கொண்டு ஒளித்தபோது, அவன் பிரிவால் வாடி எங்கெங்கும் திரிந்து தேடி அலைந்து இறுதியில் அன்பின் உறுதிப்பாட்டால் அவனை அடைந்து மகிழ்ந்தாள், ஆதிமந்தி. அன்பின் வளர்ச்சி இங்கு இன்னும் முதிர்ச்சி அடைகிறது.

''அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு''

அன்பு பிறரிடம் ஆர்வத்தை உண்டாக்குகின்றது. ஆர்வம் முதிர்ந்து குறைவிலாத சிறப்பை உடைய நட்பைத்தருகின்றது.

உணர்ச்சி நட்பு:-

பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரில் பிறந்த ஆதன் தந்தையாரும், சோழ மன்னனாகிய கோப்பெருஞ் சோழனும் ஒருவரை ஒருவர் காணாமலேயே சிறந்த நட்பு கொண்டனர். எப்போதும் சோழனின் புகழை எண்ணுவதும், அவன் புகழை பரப்புவதும், அவன் நினைவாய் இருப்பதுவுமாகவே வாழ்ந்தார் ஆந்தையார் இங்குச் சோழனும் ஆந்தையாரின் புலமைத் திறம் பற்றி உசாவி அறிவதும், அவர் புகழைப் பரப்புவதும், அவரையே எண்ணுவதுமாகக் காலங்கழிக்கின்றான். அன்பின்

பிணைப்பை என்னென்று சொல்வது? ஆந்தையார் நலத்தைச் சோழனும், சோழன் நலத்தை ஆந்தையாருமாக எண்ணி உணர்வுப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இவர்கள் அன்பின் திறத்தை, நட்பின் பெருமையை உலகுக்கு உணர்த்த ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. சோழனின் மக்கள் தந்தைக்கு எதிராகப் போருக்குப் புறப்பட்டனர். அறிந்து சினம் கொண்ட சோழன், படைகளோடு புறப்பட ஆயத்தமானுன். இடித்து அறிவுரை கூறும் புலவர் பெருமக்கள் சோழனுக்கு நல்லுரை கூறித் தடுத்தனர். இதனுல் சினம் தணிந்த மன்னன் வடக்கிருந்து உயிர் நீத்திட எண்ணினுன். அவ்வாறு வடக்கிருக்கும் போது, அவனுடன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்து அவண் உறைந்த புலவர்களிடம் கூறுகின்றுன். "என் ஆருயிர் நண்பர் ஆந்தையார் செல்வக்காலே வந்திலராயினும், அல்லற்காலே நில்லார்", என்று அவன் கூறிய பாடல் இன்றும் நம் நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது. அன்பின் தன்மையை, உண்மை அன்பின் தன்மையை யாரே அளக்க முடியும்? இது கருதியே வள்ளுவப் பெருந்தகை

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

என்ற அருமையான குறட்பாவை அருளியுள்ளார். சோழன் கூறியபடியே ஆந்தையார் வந்தார். அனைவரும் வியந்து இருவர்தம் அன்பின் ஆழத்தை, நட்பின் கெழுதகைமையை வியந்து போற்றினர்.

இதுபோன்றே ஔவைக்கும் அதிகமானுக்கும் ஏற்பட்ட அன்பையும், பாரிக்கும் கபிலர்க்கும் ஏற்பட்ட அன்பையும், சேரமான் பெருமாள் நாயனுர்க்கும், சுந்தரமூர்த்தி நாயனுர்க்கும் ஏற்பட்ட அன்பையும் அறிஞர் உலகமும் செந்தமிழ் உலகமும் போற்றிப் பாராட்டி வருகின்றன.

ஏழைகள்பால் ஏற்பட்ட அன்பு காரணமாக அவர்கள் வறுமையைப் போக்க ஓயாது சோறளித்த உத்தமனும், பசிப் பிணி மருத்துவனும், சிறுகுடிப் பண்ணனைக் கிள்ளி வளவனே பாராட்டுகின்றுன். அவ்வாறு ஏழைகள்பால் இரக்கம் கொண்டு, கழிவிரக்கம் கொண்டு தம் வாழ்வையே தியாகம் செய்த பெரியோர்கள் பலரை அன்று முதல் இன்று வரை காண்கின்றேம். இனியும் காண்போம்.

பக்தியின் நிலைகள்:-

சமநிலையில் செலுத்துங்கால் ‘அன்பு’ என்ற பெயர் பெற்ற அருங்குணம், உயர்ந்தோரிடத்துச் செய்யும்போது, “பக்தி” என்ற பெயரைப் பெறுகின்றது. தாயிடம் குழந்தை செலுத்தும் அன்பு, ‘மாத்ருபக்தி’ எனவும், தந்தையிடம் செலுத்தும் அன்பு, ‘பித்ருபக்தி’எனவும், குருவிடம் செலுத்தும் அன்பு, ‘குருபக்தி’ எனவும், இறைவனிடம் செலுத்தும் அன்பு, ‘தெய்வபக்தி’ எனவும் பெயர் பெறுவதைக் காணலாம்.

பக்தியானது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்படும். அரக்கானது வெயிலின் முன் இருந்து வெதும்புதல் போல்வது மந்ததரபக்தி, மெழுகு வெயிலில் உருகுதல் போல்வது மந்தபக்தி, நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரபக்தி. தைலதாரையானது சிறிதும் இடையறுது ஒழுகுதல் போல்வது தீவிரதரபக்தி.

எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பு, ‘அருள்’ என்றபெயர் பெறுகின்றது. தாய் குழந்தைகளிடம் செலுத்தும் அன்பு ‘தாயன்பு’ ‘தாயருள்’ எனவும், தந்தை மக்களிடம் செலுத்தும் அன்பு ‘தந்தையருள்’ எனவும், குரு தன் சீடனிடம் செலுத்தும் அன்பு ‘குருவருள்’ எனவும், இறைவன் உயிர்களிடத்துச் செலுத்தும் அன்பு ‘இறையருள்’ எனவும் பெயர் பெறும்.

அன்பின் உரைகல்:-

ஒருவர் மற்ருெருவர்மீது அன்பைச் செலுத்துகின்ருர் என்பதை எவ்வாறு அறியலாகும். அதற்கு எடை உண்டா? அளவு உண்டா? நிறம் உண்டா? எவ்வாறு உணர்வது? அன்புடையார் செயல்களே அதற்குச் சான்ருகும். இதனையே வள்ளுவப் பெருந்தகை “அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர், புன்கணீர் பூசல் தரும்”, எனக் கூறியுள்ளார். இந்த அன்பு இன்ஞர் இனியார், வறியவர் செல்வந்தர், கற்ருர் கல்லார் என்ற எந்தப் பாகுபாடுமின்றி இறையருளால் முன் வினைப் பயனுல் உண்டாவது.

நன்கு உழுது பக்குவப்படுத்தப்பட்ட விளை நிலத்தில் விதையை ஊன்றினுல் அவ்விதை முளைத்து வெளிக் கிளம்புவதைப்போல, இரக்க குணத்தால் பக்குவப்படுத்தப்பெற்ற

பண்பட்ட உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இந்த அன்பு என்னும் விதையானது, மெள்ள முளைவிட்டுப் பற்றிப் படர்ந்தேறி பூத்துக் காய்த்துக் கனியும். அன்புகொண்ட இரு உள்ளங்களைப் பிரிப்பது என்பது யாராலும் இயலாத செயல். இது பற்றியே வள்ளுவர் அடைக்குந்தாழ் இல்லை என்றார். அடைத்து வைப்போம், பிரித்து வைப்போம் என எண்ணிச் செயல் பட்டால், அச் செயல் அந்த அன்பை வளர்க்கவே பயன்படும். உலக வரலாற்றில் பல சரித்திரங்கள் இதற்குச் சான்று பகரும்.

உலக வாழ்வில் உயிர்கள் இன்பமுடன் வாழவும், இல் வாழ்வில் கணவனும் மனைவியும் மகிழ்வுடன் வாழவும், பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்க்கவும், அக் குழந்தைகளின் நலம் காரணமாக அவர்களுக்கு உதவி செய்பவர்களை மகிழ்விக்கவும், தூய்மையான, தன்னலம் கலவாத அன்பே அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை இதுவரை அறிந்தோம்.

அன்பு நெறி:-

இனி அன்புநெறி என்றால் என்ன? அது எங்கு கொண்டு போய்ச் சேர்க்கும்? என்பவற்றை ஆராய்வோம். நெறி என்பது வழி. "முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்பார் மணிவாசகர். மக்கள் கைக்கொள்ள வேண்டிய உயர்ந்த நெறிகள் பல உண்டு. ஒழுக்கநெறி, பக்திநெறி, முத்திநெறி என்பன. அவற்றுள் அன்பு நெறியே அனைத்துக்கும் அடிப்படையாய் அமைந்து விளங்குவது. உள்ளத்தில் அன்பு இல்லா ஒருவன் எந்த உயர்ந்த நெறியையும் கடைப் பிடிக்க இயலாது என்பது வெள்ளிடைமலை. பிற உயிர்களிடத்தில் அன்பில்லாத ஒருவனது வாழ்க்கை கொடிய பாலை நிலத்தில் உலர்ந்த மரம் தளிர்ப்பதற்கு ஒப்பாகும் என்ற கருத்துப்பட வள்ளுவர்,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந் தளிர்த் தற்று"—என்று அருளுவார்.

எனவே மக்கள் உயர் நிலைக்குச் செல்ல அன்பு நெறியே அடிப் படையானது.

செல்லும் வழி, தூய்மையானதாக, தெளிவுடையதாக இருந்தால், நாம் செல்ல வேண்டிய இடத்தை விரைவில் அடைய இயலும். மக்களாகிய நாம் அடைய வேண்டிய இடம் இறைவன் திருவடிப் பேறே ஆகும்.

இத்திருவடிப் பேற்றை நாம் அடைய இயலாமல் தடுப்பன ஆணவம், மாயை, கன்மம் என்பவை. இவற்றை அடியோடு தொலைத்தால்தான் அன்புநெறி தோன்றும். "தூல சூக்குமமெனும் காடு, வெட்டிப் பாதை தெளிவுறக் காட்டி", என்று இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளியுள்ளார்கள்.

ஆணவம் மாயை கன்மம் அகற்றும் சற்குருபாதம், காண உருகி நாடிக்கண்டால் தெளிவு வரும்" என்றும் அருளியுள்ளார்கள். ஆதலால் சற்குருநாதர் திருவருளால் மும்மலங்கள் அழியும் எனும் உண்மை தெளிவாகிறது.

உறங்கா வில்லி:-

உறங்கா வில்லி என்ற ஒருவனுக்கு மிக அழகிய ஒரு மனைவி வாய்த்தாள். அவள் அழகில் ஈடுபட்ட வில்லி இரவு பகல் உறங்காமல் அவள் கண் அழகையே பார்த்துக்கொண்டே இருப்பான். இமைப்பொழுதும் அவள் கண்ணழகைக் காணமல் இருக்க அவனால் இயலவில்லை. அவள் தெருவில் நடந்து சென்றால், அவள் எதிரே, அவளை நோக்கிய வண்ணம் அவளுக்குக் குடை பிடித்தவாறே பின்புறமாக நடந்து செல்வான், வில்லி. ஒருநாள் வில்லியும் அவன் மனைவியும் திருவரங்க நகரில் தெருவழியே சென்று கொண்டிருந்தனர். மனைவி செல்வதையும் அவள் அழகைப் பார்த்தவாறே வில்லி அவள் எதிரில் நகர்ந்து செல்வதையும் கண்டு, இவ்வாறு பெண் மீது உள்ள மோகத்தால் அலைவார் உண்டோ? என்று வியந்தனர் மக்கள். ஸ்ரீ இராமானுஜரின் சீடர்கள் இதைக் கண்டு வியந்து, தம் குருவாகிய இராமானுஜரிடம் சென்று செய்தியைக் கூறினர். அவர், தம் அருள்நிலையால் வில்லியின் மனப்பக்குவத்தை அறிந்து நேரே வீதிக்கு வந்தார். வில்லியிடம் சென்றார். "அப்பா ஒரு பெண்ணின் அழகுக்காக இவ்வாறு நீ செல்லலாமா என்றார்". ஐயா சும்மா இருங்கள். நான் அவள்கண்ணழகைக்கண்டுவியந்து கொண்டிருக்கின்றேன். இந்த அழகைக் காணமல் என்னால் இருக்க இயலாது" என்றான். இராமானுஜர் இந்தக்கண் அழகைவிடச் சிறந்த கண் அழகு இருக்கிறதே என்றார். "ஆ! அப்படியா? அதை எனக்குக் காட்டமுடியுமா?" என்றான் வில்லி. "ஓ, காட்ட முடியுமே" என்று கூறிய இராமானுஜர் நேரே வில்லியைத் திருவரங்கப் பெருமானின் திருக்கோயிலுக்குள் அழைத்துச் சென்று அரங்க

நாதனிடம் அவர்தம் தாமரைக் கண்ணழகைச் சற்றே வில்லிக்குக் காட்டியருளுமாறு வேண்டினர்.

பெருமான் தன் செந்தாமரைக் கண்ணழகைச் சற்றே காட்டியருளினர். அக் காந்தத்தால் ஈர்க்கப் பெற்ற பின் அதையே கண்டு ஆனந்தமுற்ருன் வில்லி. இராமானுஜருக்குச் சீடளுகி, சிறந்த வைணவளுக மாறி உய்ந்தான்.

நாம் அன்பு செய்யும் பொருள் அல்லது மனைவி மக்கள் காலத்தால் அகன்று பிரிந்து செல்ல நேரின் சற்றே கலங்குவோம்; பின்னர் தெளிந்து விடுவோம். இவ்வன்பு நிலையானதல்ல. பின் எந்த அன்பு நிலையானது? நிலையான பொருள் மீது வைக்கும் அன்பு நிலையானது.

நிலையான பொருள் எது? நாம் உருவங் கடந்த ஒன்று, யாராலும் எளிதில் அடைய முடியாத ஒன்று. இறைவன் திருவடிப் பேறு. அதுவே நிலையான பொருளாகும்.

தீயவரையும் திருத்தும்:-

அறத்தை வளர்க்க மட்டுமே அன்பு பயன்படுமா? மறத்தை, பாவத்தைப் போக்க அன்பு பயன்படாதா? என்ற ஐயம் நமக்கு எழுகிறது. இதற்கு விடையாக

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை",

என்கிருர் வள்ளுவர்.

இரெட்டியப்பட்டி சுவாமிகள்

"அன்பினைப் பெறுவாயாகில் அதர்மங்கள்
அனைத்தும் நீங்கித்
துன்பமும் தவிர்ந்து போகும் துயரம்
இங்குண்டோ சொல்வாய்".

என்று அருளுகின்ருர்.

அகத் தூய்மைக்கு வாய்மை துணையாக அமைவது போன்று பாவத்தைப் போக்கி ஒரு மனிதனைத் தூய்மை உடையவனுக ஆக்க அன்பினுல்தான் இயலும்.

ஒருவன் பாவச் செயல்- தீய செயல் புரிந்தால் அதற்குப் பதிலாக நாமும் பாவச் செயல் செய்யப் புகுந்தால் ஒன்றுக்குப்

பத்தாகப் பாவம் வளருமேயன்றி தேய்ந்து குறையாது. அதற்குமாறாக அன்புநெறியை மேற்கொண்டு, பொறுமையாக இருந்து நமக்குத்தீமை புரிந்தோர்பால் அன்பு செய்தோமானல் அவர்கள் நாளடைவில் திருந்திப் புனிதம் பெறுவர்.

புத்தர் பெருமான் தனக்கு அளவிலாத் துன்பங்கள் இழைத்த தேவதத்தனைத் தம் அன்பால் வென்றார். இயேசு பெருமான் தனக்குக் கொடிய தீங்கிழைத்த யூதர்களை மன்னித்து அருளுமாறு தம் அன்பால் இறைவனிடம் வேண்டுகின்றார்.

உலக உத்தமராம் காந்தியடிகள் தமக்குத் தீமை செய்தவர்களைத் தம் அன்பின் பலத்தால் வெற்றி பெற்றார். உலக வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் எங்கும் பாவத்தைப் பாவத்தால், போக்கியதாகக் கதை இல்லை. அன்பு ஒன்றுலேதான் பாவத்தைப் போக்க முடியும். அதுவே சிறந்த ஆயுதமுமாகும்.

அன்பினைப் பெறுவாயாகில் அதர்மங்கள் அனைத்தும் நீங்கும் என்பது குருபரராகிய இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருவாக்கு.

அன்பு நெறியின் பயன்:-

அன்பு நெறியால் யாது பயன்? அன்பு கொள்பவர் மனம் முதலில் அமைதியுறுகிறது. அதற்கு மாறாக வன்பு கொண்டால் நரம்புகள் துடிக்கின்றன. சினம் மேலோங்குகின்றது. குருதி கொதிப்பெடுக்கின்றது. அதனல் உடல் நலம் கெடுகின்றது. இது நமக்கு ஏற்படும் தொல்லை. நம் பகைவர்கள் அதாவது நமக்குத் தீமை செய்தவர்கள் நம் வன்முறையால் உள்ளம் கொதிக்கின்றனர். பாவச்செயலைச் செய்ய முயல்கின்றனர். இதனல் வன்புநெறி வளர்கின்றது, அதர்மம் ஓங்குகின்றது.

இதைப் போக்க வழி நாம் அன்பு நெறியை மேற்கொண்டு ஒழுகுவதுதான். அன்பினைப் பெற்றோமானல் அதர்மங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்பது குருநாதரின் கருத்து. அதர்மம் நீங்கினல் தர்மம் தழைத்தோங்கும்.

உலகம் முழுவதும் தர்ம நெறியில் சென்று அமைதியான வாழ்வு நடத்த வேண்டும் என்பது இன்றைய நிலையில் அனைவரின் எண்ணமும் ஆகும். அத்தகைய வாழ்வு அமைய ஒவ்வொருவரும் அன்பு நெறியை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு உயிர் தூயஅன்பைக் கொண்டு வாழ்ந்து வருமானுல் அவ்வுயிரைச் சுற்றியுள்ள, அதாவது அவ்வுயிரோடு தொடர்பு கொண்ட பல உயிர்களும் இந்த அன்பின் நிழல் படியப் பெறுகின்றன. மகான்களின் முன்னிலையில் கொடிய விடமுடைய உயிர்களும் பகை மறந்து குலவுகின்றன என்பது இந்த அன்பின் நிழலால்தான்.

இத்தகைய அன்பினை ஒருவன் பூரணமாகப் பெற்றுவிட்டால் புற உலகிலும், அக உலகிலும் இவனை வந்து தாக்கும் அதர்மங்கள், அதாவது பாபச்செயல்கள் இவனைப் பற்ருது நீங்கி விடுகின்றன.

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று முழங்குகின்ற மன உரம் எப்படி வந்தது? அன்பையே உள்ளும் புறமும் பெற்றதால் இத்தகு நிலை வந்தது. கொல்வதை ஒத்த கொடுமையை ஒருவன் செய்தானுயினும், செய்யப் பெற்றவன் பூர்ண அன்புடையவனுக இருந்தால், அக் கொடுஞ் செயல் சுவரில் எறியப்பட்ட பந்துபோல் திருப்பப்படுகின்றது. பின்னர் அச் செயலைச் செய்தவனும் தன் தாழ்வை உணர்ந்து, அதர்மத்தினின்று நீங்கி, அன்பின் நிழல் படியப்பெற்று அன்பு உடையவனுக மாறுகின்ருன். மறத்தைப் போக்குவதற்கும் அன்பே துணை செய்கின்றதன்ருே?

இந்நிலையில் துன்பங்கள் தவிர்ந்து விடுகின்றன. துன்பங்களை உணர்வது மனம்; நம்முடைய இன்ப துன்பங்களுக்கு நாமே காரணமாகின்ருேம். அவை பிறர் தர வருவதில்லை. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற பொன்மொழி இதை உணர்த்தும். அன்பின் வழியிலே இயங்குகின்ற உயிர் அதர்மத்திலிருந்து தானும் நீங்கி பிறரையும் நீக்குவித்து துன்பத்தில் இருந்து தான் தவிர்ந்து, பிறரையும் தவிரச் செய்கிறது

அந்நிலை அடைந்த உயிர் எங்கு இருப்பினும், எச்செயலைச் செய்யினும், துயரற்ற நிலையில், பேரின்ப நிலையில் எல்லா உயிர்களுக்கும் இன்பம் நல்கும் நிலையில் மூழ்கித்

திளைக்கும். நமக்குத் துன்பம் எவ்வாறு வருகின்றது என்பதன் காரணத்தை அறியாததனுல்தான் உயிர்கள் பிறரைப் பழிக்கின்றன.

"புகழ்பட வாழாதார் தந்நோவார், தம்மை
இகழ்வாரை நோவ தெவன்?"

என்பது பொய்யா மொழி.

இவ்வுயர்ந்த அன்பின் நெறியைப்பற்றிப் பெரியோர்கள் கூறியுள்ளதைக் காண்போம்.

"அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே."

நம் அரிய உயிரைக் காப்பது அன்பே. அந்த அன்பைப் பெருக்கினுன் இறைவன். 'அன்பைப் பெருக்கி' என்ற சொல் ஆழ்ந்து கருதத்தக்கது. உலகில் அன்பில்லாத உயிர்கள் ஏதும் இல்லை. ஆனுல் அளவு மாறுபடும். தூய்மை மாறுபடும். தன்னலம் கருதிப் பிறர்மீது அன்பு செய்வது ஒரு வகை. முதலில் அன்பு பலரிடத்தும் இப்படித்தான் முளைக்கின்றது. நம்மீது அன்பு செலுத்துபவர்களை, அல்லது நமக்கு உதவி செய்பவர்களை நாம் விரும்புகின்றோம். அவர்களுக்கு அன்பு செய்கின்றோம். தன்னலம் மேலோங்கும்போது அன்பை விட்டு விடுகிறோம். ஆனுல் உயர்ந்த அன்பு தன்னலங்கருதாது, பிறர் நலத்தையே நாடும் என முன்னர் அறிந்தோம்.

சிறுமழை பெய்கின்றபோது பூமி நனைகின்றது. நீர் ஓடப் பெய்யும்போது கொஞ்சம் அழுக்கு நீங்குகின்றது. பெருவெள்ளம் பெருக்கெடுத்தோடும்போது பூமிமீதுள்ள எல்லா அழுக்குகளும் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன.

இதுபோன்றே அன்பு கொள்ள ஆரம்பிக்கும் மனம் ஈரத்தில் நனைகின்றது. அன்பு சிறிது அதிகரித்தவுடன் நம்மீது அன்புடையார் படும் துன்பம் கண்டு கண்ணீர் விடுகின்றது. அன்பு வெள்ளம் பெருக்கெடுத்தோடும்போது, இன்னுர், இனியர் என்று பாராது பிற உயிர்கள் படும் துன்பம்கண்டு பதைத்து உருகி வாடுகிறது, இந்நிலையில் தன்னலம் சிறிதும் இல்லை.

அன்பே இறைவன்:-

இந்த அன்பையும் நம்மால் பெருக்கிக்கொள்ளவோ குறைத்துக்கொள்ளவோ இயலாது; அந்தச் செயல் இறைவனுல்தான் முடியும் என்று விளக்குகின்ருர் தாயுமானவர். அன்பைப் பெருக்கினுன் இறைவன். ஏன்? அவனுக்கு என்ன லாபம்? என் ஆருயிரைக் காக்கும்பொருட்டு என்று விடை அளிக்கின்ருர்.

அன்பைப் பெருக்கியபின் உயிரைப் பேணும் உண்மையின்பம் பெருகுகின்றது. அவ்வாறு பெருகும் இன்ப மயமாக அவனே விளங்குகின்ருன். ஆதலால் இறைவனை 'இன்பப் பெருக்கே' என அழைக்கின்ருர்.

''அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.''

என்பது அவர் அருள்வாக்கு. அன்பு வடிவமாக இறைவன் விளங்குகிருன் என ஆன்ருேர் கருதினர்.

''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே''

என்பது மணிவாசகம்.

திருமூலர் தம் திருமந்திரத்துள்

''அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ்.தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.''—எனவும்,

''அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணுதே''—எனவும்,

அன்பின் தன்மையைப்பற்றி அருளிச் செய்துள்ளார்.

அன்பே சிவம், இத்தன்மையை யாரும் அறியவில்லை. அறிந்தோர் பேசுவரோ? ஒன்றும் பேசார். அன்பே வடிவமாக சிவமயமாக அமர்ந்திருப்பார்.

அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி சிவனை அடைய ஒண்ணுதே என்று ஆணித்தரமாகக் கூறுகின்ருர். இறைவனை அடைய அன்பு நெறி ஒன்றே வழி எனத் தெளிவுபடுத்தியுள்ளமை அறியத்தக்கது.

இரெட்டியப்பட்டி சுவாமிகள்
"அன்பர்தம் சிந்தையிற் புகுந்து கூடியே
உறவாய் வழியது காட்டும்". எனவும்

"அன்பர் மனதிற் குடிகொண்டருளும் பரமசிவன்"
எனவும்,

"துன்ப முறுங்காலம் துணையாக வந்தெனக்குன்
அன்பைக் கொடுத்தருள்வாய் ஐயா பராபரமே"
எனவும் அருளியுள்ளனர்.

இறைவன் அன்பின் வலைப்படுபவன்:-

இறைவன் அன்பர்தஞ் சிந்தையில் தானே புகுகின்றான்; கூடிக் கலக்கின்றான்; உறவாக அமைகின்றான்; வழியும் காட்டுகின்றான். என்னே அன்பின் தன்மை! பல்லாண்டுகள் கடுந்தவம் புரிந்தும், யாகம் செய்தும் மற்றும் பல விரதங்கள் போற்றியும், நோன்புகள் நோற்றும் இன்னும் காணஅரியவன் என்று வேதங்களால் பேசப்படுகின்ற இறைவனைத் தம் அன்பால் அடியவர்கள் ஈர்த்து விடுகின்றனர்.

இதுபற்றியே வடலூர் இராமலிங்க வள்ளல்
"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பர சிவமே"
என அன்பினுக்கு இறைவன் அடிமையாகும் திறத்தைப் பலபடப் பாராட்டியுள்ளனர்.

அன்பருக்குத் துன்பம் உறும்போது இறைவன் உற்ற துணைவனாக விளங்குகின்றான். அடியார்கள் வாழ்வில் நாம் காணும் பேருண்மை இது. சரபோஜி மன்னனால் தண்டனை அடையப்பெற்ற அபிராமி பட்டரைக் காத்தது யார்? இறைவியன்றோ? நம் புராணங்களும், காவியங்களும் இச் செயலைப் பலபடப் பாராட்டுகின்றன.

என்புங் கரைந்துருகத் திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமான் இறைவனிடம் வேண்டுகின்றார். பொன்னா? பொருளா? போகமா?.

அன்பு வேண்டுமாம். யாரிடத்தில்? இறைவனிடத்தில் அன்பு வேண்டுமாம். எப்படிப்பட்ட அன்பு? இடையறா அன்பு. அந்த அன்பு எங்கிருக்கவேண்டும்? அவர்தம் ஊடகத்தே இருக்கவேண்டும். அந்த அன்பால் என்ன செய்யவேண்டும்? நின்றுருகவேண்டும்.

என்னே அவர்தம் வேண்டுகோள்!

"இடையறா அன்புனக்கு என் ஊடகத்தே
நின்றுருகத் தந்தருள் எம் உடையானே''.

என்பது அவர்தம் அமுதமொழி. பக்திவலையிற்படுவோன் காண்க. என்று இறைவன் அன்புக்கு வயப்படும் தன்மையை உரைக்கின்றார்.

பலகோடி அண்டங்களைப் படைத்துக் காத்து அழித்து அருள் விளையாடல் புரியும் இறைவன் அற்புதச் சக்தி படைத் தவன். அவன் அருள் விளையாடலின் தன்மையை யாராலும் உணரமுடியாது. இப்படிப்பட்ட பேருண்மையை எந்த உயிரும் முற்றிலும் கண்டதில்லை. காணவும் முடியாது. ஆனால் இறை வனையே நினைந்து அவன் வயப்பட்ட அன்பினர் தம் நிலைக் கேற்ப உணருகின்றனர். அவரவர்கள் தாம் கண்ட உண்மையை உரைக்க முயன்றுள்ளனர். முற்றிலும் உரைக்க இயலாமல் திணறி உள்ளனர்.

அன்பர்கட் கெளியோன்:-

இவ்வாறு முற்றிலும் தன்னை இழந்து அன்பின் பிழம் பாகத் திகழும் அடியார்கள் எண்ணிய எண்ணங்களை எல்லாம் இறைவன் முடித்துத் தருகின்றான். அவர்கள் நலமே தன்னல மாகக் கொண்டு எப்போதும் அவர்களையே கண்காணித்துக் கொண்டுள்ளான். அவர்களுக்கு ஏவலும் செய்கின்றான்.

"அடியார்கள் ஞானம், யோகம், போன்ற எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவேன். ஆனால் பக்தியை மட்டும் கொடுப்பதில் சிறிது தயக்கம் உண்டு. ஏனெனில் பக்தர்கள் இட்ட பணியை நான் செய்ய வேண்டி இருக்கும்.'' என்று இறைவன் கூறுகின்றான். இக்கருத்தையே ஔவையார்

இறைவன் தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம் என்று அருளினர். இறைவனை எங்கும் போய்த் தேட வேண்டாம், அவனிடத்தில் இடையரு அன்பு கொண்ட அடியார்களிடத்தில் எளிதாகக் காணலாம். இது நம் போன்ருர்க்கு எளிய வழி.

அத்தகையோரை எவ்வாறுகாண்பது? எப்படி அவர்களை அறிவது? கீழ்மக்கள், நடுத்தரமக்கள், மேன்மக்கள், அனைவரும் தோற்றத்தால் ஒரே வடிவினராய்க் காட்சி அளிக்கின்றனர். இவர்களுள் மேன்மக்களை, இறையன்பு பூண்ட பெருந்தகை யாளர்களை எவ்வாறு அறிவது? உண்மைக்கு எதிராகப்போலி கள் ஏராளமாக நடமாடும் காலம் இது. எது உண்மை என்று எளிதில் அறிய இயலாமல் நம்பி ஏமாறும் மக்கள் ஏராளம். இந்த ஏமாற்றத்தால் மனம் வெறுத்து உண்மையே இல்லை, எல்லாம் போலி என்ற முடிவுக்கு வருகின்றனர் பலர். உண்மை இல்லாமல் போகாது. உண்மையைக் கண்டுபிடிப்பதில்தான் சிரமம் அதிகம். கண்டுபிடித்து விட்டால் பின்னர் நமக்கு ஐயம் ஏற்படாது.

ஊன்றிக் கவனித்தால் உண்மை அன்பினரைக் காணலாம். உண்மையன்பினரைக் காண வேண்டும் என்ற வேட்கை கொண்ட ஒருவன் பக்தர்களாகவும், ஞானிகளாகவும், தோன்றுபவர்களை அணுகுகின்முன். அவர்களோடு பழகிப் பார்க்கின்முன். ஒவ்வொருவரிடம் ஒவ்வோர் குறை காண் கின்முன். இவ்வளவுதான என்று எண்ணி உண்மை அன்பு உடையவர்கள் இந்த உலகிலேயே இல்லையா? என்ற ஐயமும் அச்சமும் கொள்கின்முன்.

உண்மையன்புடையார் பண்பு:-

உண்மையன்புடையார் இறைவனுடைய திருவடிகளைத் தவிர வேறு ஒரு நினைவும் இல்லாதவர்கள், அத்திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் மதியாதவர்கள், அத்திருவடிகளுக்குத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தவர் கள். அத்திருவடிகளின் செயலன்றி வேறு ஒன்றையும் செய்யா தவர்கள். அத்திருவடிகளையே தம் சிரமீது சூட்டி மகிழ்ந்திருப் பவர்கள். எண்ணம், மூச்சு, சொல், செயல், அனைத்தையும் அவனுக்காகவே அர்ப்பணம் செய்தவர்கள். அவன்மயமாகவே

வாழ்கின்றவர்கள் யாரோ, அவர்களே உண்மையன்பு நிறைந்தவர்கள். அவர்களுக்கு இவ்வுலகம் ஏவல் செய்யும். இயற்கை அடிபணியும், இறைவன் எளியவன் ஆவான்.

இத்தகைய உண்மையன்பினரைக் கண்டு அவர்கள்வழி நடந்தால் இறைவனைக் காணல் எளிது. இறைவனிடத்து அன்புடையவர்கள் இறைவன்உண்மைகளை நினைக்கும் போதும், கேட்கும் போதும், காணும் போதும் தன்வசம் அழிவர். மயிர்க்கால் தோறும் திவலை உண்டாகப் புளகம் கொள்வர். ஆனந்த அருவி பொழிவர், விம்முவர், நாத்தழுதழுப்பர். உரை தடுமாறுவர். ஆடுவர். பாடுவர். இறைவனுக்கு உகந்தவை களைச் செய்வர். இவை போன்ற அன்புச் செயல்களால் அவர்களின் உயர்நிலையை அறிய இயலும்.

இந்த அன்பு, பல பிறப்புகளிலே பயன்குறியாது செய்த புண்ணிய மிகுதியினாலே இறைவன் அருள் செய்ய வரும்.

"வடத்தைக் கையில் எடுத்துவிட வேண்டும்; எடுத்துவிட்டால், தேரில் உட்கார்ந்திருக்கும் உடையவன் 'இழு, இழு' என்று உற்சாகம் ஊட்டிச் செலுத்திக் கொண்டே போவான். கட்டாயம் நிமிஷத்தில் நிலைசேர்ந்து விடலாம்."

☼ ☼ ☼ ☼

"சட்ட அனுஷ்டானம் உடைய அடியவர் யாவரும் இம்மையில் எவ்வித இடர்ப்பாடும் இல்லாத இன்பவாழ்க்கை வாழ்ந்து, மறுமையில் மாபெரும் பேறு பெறுவர் என்பது திண்ணம்."

☼ ☼ ☼ ☼

"உடையவன் கணக்கு இப்போதேயா விளங்கிவிடும்? இன்னும் போகப் போகத்தான் விளக்கமுறும், அவனுடைய அருட்கொடி உலகமெங்கும் பறக்கும்."

☼ ☼ ☼ ☼

"ஆண்டவரது அருளாட்சி, உலகின்மீதுள்ள மிகமிகப் பெரிய அரசாட்சிகளிலும் மேலானது. அதை நடத்தும் சிப்பந்திகளும் உத்தியோகஸ்தர்களும் அளவிறந்த பேராவர்."

—இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

அருள் நெறி

அன்பின் நெறியை முன்னர்க் கண்டோம்; அருள் நெறியை ஈண்டு காண்போம்.

பரந்து விரிந்த இவ்வுலகைப் போன்று கோடிக்கணக்கான உலகங்கள் வானவெளியிலே இயங்குகின்றன என்பது இன்றைய விஞ்ஞானிகள் கண்ட உண்மை. இதை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே மணிவாசகர் போன்ற அருளாளர்கள் கண்டு கூறியுள்ளனர். நம் சிந்தனைக்கு எட்டாத பேரண்டங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் இறைவன். அவன் இல்லாத இடமே இல்லை. அதனால் அவன் 'பரிபூர்ணன்' என்ற பெயரைப் பெறுகின்றான். அவன் நிறைந்திருக்கின்றான் என்றால் என்ன பொருள்? அவன் அருள்மயமாக நிறைந்து இருக்கின்றான் என்பது பொருள். எனவே எல்லா உலகிலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது இறைவனின் திருவருள் அவன் அருள் இன்றேல் இவ்வுயிர்களேது, இவ்வுலகங்களேது, அவற்றின் இயக்கங்களேது, வாழ்வேது, மலர்ச்சியேது, வளர்ச்சியேது, ஒன்றுமில்லை. நம் முன்னோர்கள் இவ்வுண்மையை நன்கு உணர்ந்திருந்தனர். '**அவனன்றி ஓரணுவும் அசையாது**' என்றும், '**அவனருளாலே அவன் தாள் வணங்கி**' என்றும் கூறியுள்ளனர். எங்கும் எந்தவித வேற்றுமையும் இன்றி நீக்கமற நிறைந்திருப்பதுவே அருளின் தன்மை.

அன்பின் முதிர்ச்சியே அருள்:-

"**அருளென்னும் அன்பீன் குழவி**" என்பது வள்ளுவர் வாய்மொழி. அன்பு என்னும் தாய், அருள் என்னும் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். அருள் தோன்றுவதற்கு அன்பே அடிப்படையாக உள்ளது.

''**அன்பு என்பது தொடர்புடையாரிடத்துத் தோன்றும் காதல்**'' என்று கூறுவர். அன்பு முதிர முதிர அருள் அரும்பும். அருள் முதிர முதிர எங்கும் எதிலும் வேற்றுமை தோன்றாது. எல்லா உயிர்களின்பாலும் பேதமின்றிப் பாய்ந்து நலம்புரியும்.

ஆசை கொண்ட ஒருவன் தன்னலம் உடையவனாக இருப்பான். இல்லறமேற்று நல்வாழ்வு தொடங்கும்போது

அன்பு அரும்பி ஆசை அழியத் தொடங்குகிறது. அன்பு கொண்டவன் அன்பின் தன்மைக்கேற்பச் செயல்படுவான். அன்பு முதிர முதிர தன்னலம் முற்றிலும் தளர்ந்து விடுகிறது. அப்போது அருள் முளை விடுகின்றது. அருள் முதிர முதிர இறைகுணம் மேலோங்குகின்றது. எனவே அன்பின் முதிர்ச்சியே அருள்- அன்பு என்ற அடிப்படை நன்கு அமைந்திருந்தால் அருள் என்னும் மாளிகை மிக நன்றாக அமையும்- அருளின் வகைகள் பல: ஒரு சிலவற்றை நோக்குவோம்.

தாயருள்:-

"**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**" என்றும் "**தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை**" என்றும் தாயின் சிறப்பினை பலபடப் பேசுகின்றனர் நம் முன்னோர்கள். நாம் இவ்வுலகில் தோன்றியதும் முதலில் தெரிந்து கொள்வது நம் தாயையே. ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப் பேணிக்காக்கும் தாய் தான் உலகில் முதல் தெய்வம் ஆவாள். அவள் சுட்டிக்காட்டிய பின்பே குழந்தை தந்தையை அறிகிறது. தன் நலத்தை முற்றிலும் மறந்து நமக்காக அரும் பாடுபடுபவள் தாய் ஒருத்தியே. எனவே இவ்வுலகில் தாயருள் மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. குழந்தைகள் களங்க மற்றவர்கள்; எத்தகைய தாய்மார்களால் வளர்க்கப்படு கின்றார்களோ, அத்தகைய குணங்களைப் பெறுகின்றார்கள். சிறந்த பண்பு நலங்களைப்பெற்ற தாய்மார்களால் வளர்க்கப் படும் குழந்தைகள் சான்றோர் போற்றும் நற்குண சீலராய் பேரும் புகழும் பெற்றுத் திகழ்வதை அன்றும், இன்றும் என்றும் காண்கிறோம்.

பாலூட்டி, சீராட்டி, நீராட்டி, உணவூட்டிப் பேணும் தாயின் அன்புக்கு ஈடாக எதையும் கூற இயலாது. இது பற்றியே நம் முன்னோர்கள் இறைவனைத் தாயாகப் போற்றினர்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"

என்பது திருவாசகம்.

"**தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்**"

என்பது திரு அருட்பா.

தாயருள் இல்லையேல் குழந்தையின் வாழ்வே இல்லை. குழந்தைகள் இல்லையேல் உலகமே இல்லை. எனவே உலக வளர்ச்சி, உலகின் நலம் தாயருளில் உள்ளது. இவ்வுலக இன்பத்திற்குத்தாய் அருள்புரிவது போன்றே அவ்வுலக இன்பத்திற்கு அன்னை ஜெகன்மாதா அருள்புரிகின்றாள்.

ஒரு குழந்தை மலங்கழித்து, அது தகாதது என்ற உணர்வை அறியாப் பருவத்தால் அதிலேயே புரண்டு கிடக்கும் போது, பெற்ற தாய் ஓடி வந்து அக்குழந்தையை எடுத்து மலத்தைக் கழுவித் தூய்மை செய்கிறாள்.

இதுபோன்றே உலகில் வாழும் உயிர்களாகிய நாம் மும்மலமாம் சேற்றில் புரண்டு, 'புரள்கின்றோம், அதிலிருந்து நீங்கவேண்டும்' என்ற எண்ணமும் இன்றி வீணே அலைகின்றோம். முத்திநாட்டம் கொள்ளும் சிலர் இம்மல வாதனை தாங்க முடியாமல் இதிலிருந்து மீள முடியாமல் திகைத்து வாடிச் சோர்கின்றனர். தம்மால் இதிலிருந்து மீளமுடியாது என்றநிலை வருகின்ற போது, எல்லாம் வல்ல இறைவனிடம் முறையிட்டு அழுகின்றனர். இந்நிலையில் அன்னை பராசக்தி தன் பேரருளால், கடைக்கண் நோக்கால், மும்மலங்களைப் போக்கி ஆன்மாவைத் தூய்மை செய்து இறைவனிடம் சேர்ப்பிக்கின்றாள்.

வாக்குத் தவறியதால் தம் கண் இழந்து வாடிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் உச்சிமேற் புலவர் கொள் கச்சி மாநகரை நச்சி அடைந்து ஏலவார் குழலாளை இடப்பாகம் கொண்ட ஏகாம்பர நாதரைப் போற்றுகின்றார். இறைவன் செவிசாய்க்க வில்லை. இறைவி இறைவனிடம் பரிந்துரை செய்கின்றாள். பின்னர் தன் பாகத்துக்கு உரிய இடக்கண்ணை அருள்கிறாள். "ஆலந்தானுகந்து" என்ற தேவாரப் பாடலில், 'ஏலவார் குழலாள் உமை நங்கை என்று மேத்தி வழிபடப் பெற்ற கால காலன்' என்ற தொடர்கள் இக்கருத்தை நமக்கு அறிவுறுத்து கின்றன. தியாகம், பொறுமை, இரக்கம், அன்பு, தன்னல மின்மை போன்ற உயர்பண்புகளைத் தாயிடத்தில் காணலாம். இத்தகு சிறப்பு நோக்கியே தம் பெருஞ் செல்வத்தைத் துறந்து துறவியராக வாழ்ந்த பட்டினத்தடிகள் தம்தாயின் ஈமக்கடனை முடித்து நமக்கு வழிகாட்டியிருக்கின்றார்.

நம் குருபெருமானாகிய இரெட்டியப்பட்டி சுவாமிகள் குற்றால மலைக்குகையில் அருந்தவம் தொடங்கிய ஓராண்டு

காலத்திற்குப் பின் தம் தாயின் நிலையை அருளால் உணர்ந்து போந்து அவர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகளை முடித்தபின் மீண்டும் பொதிகை சேர்ந்து பல்லாண்டு அருந்தவமாற்றி அருட்பேறு பெற்றனர் என்பதையும் அறிகிறோம்.

எனவே உலகில் நாம் காணும் முதல் தெய்வம் தாய். அவளருள் இன்றேல் இவ்வுலகில் நாம் தோன்றவும் முடியாது, வாழவும் முடியாது. நம் வாழ்வு நன் முறையில் அமையக் காரணமாய் இருப்பவள் நம் தாயே. இக உலகில் நம்மைப் பெற்றெடுத்த தாயைப் போன்று பர உலகிற்கும் அன்னை சக்தியின் அருள் நமக்குத் தேவைப்படுகிறது என அறிந்தோம்.

தந்தையருள்:-

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற தொடரில் அன்னைக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப் பெறுபவர் தந்தை, "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்று கூறுகிறது புறநானூறு. ஒரு குழந்தை சான்றோனாக, நன்மகனாக உலகம் போற்றும் பெருமையும் புகழும் வாய்ந்தவனாக வாழ வேண்டுமெனில் தந்தை அருள் வேண்டும். இது பற்றியே திருவள்ளுவர் "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்று கூறுகின்றார்.

ஒரு தந்தை தன் சுகதுக்கங்களை மறந்து, தன் மகனைச் சான்றோர் குழுவில் முதன்மை யானவனாக ஆக்குதல் வேண்டும்.

குழந்தையைப் பேணுவதற்கு தாயருளோடு தந்தை அருளும் வேண்டும். குழந்தையைக் காப்பதற்கான எல்லா வகைப் பொருள்களையும் கொண்டு வந்து கொடுப்பவன் தந்தையே. இருவரும் சேர்ந்தே குழந்தையை நன்கு பேணுகின்றனர். தம் குழந்தை தவறான வழியில் செல்லாமல் வேலியிட்டுக் காப்பவர்கள் தாயும் தந்தையுமே ஆவர்.

ஒரு திருடன் பல நாட்களாகக் காவற்காரர் கையில் சிக்காமல் இருந்தான். 'பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்' என்பது போல ஒருநாள் காவலர் கையில் அகப்பட்டுக் கொண்டான். நீதி மன்றத்தில் விசாரணை நடந்தது. ஏன் திருடினாய் என்று நீதிபதி கேட்டபோது, திருடன் ஒன்றும் கூற

வில்லை. அவனுக்கு 100 கசையடி கொடுக்கும்படி தண்டனை வழங்கினர். உடனே அத்திருடன் 'முதலில் என் பெற்றோர் களுக்கு அத்தண்டனையைக் கொடுங்கள்' என்றான். 'ஏன்'! என்று நீதிபதி வினவ, 'நான் சிறு குழந்தையாக இருந்த பொழுது பக்கத்து வீட்டுக் குழந்தை வைத்திருந்த ஊசியைத் திருடிக்கொண்டு வந்து கொடுத்தேன். அதை என் பெற்றோர் வாங்கி வைத்துக்கொண்டனர். அன்றே என்னை அடித்துத் திருத்தி இருந்தால் இன்று இவ்வளவு பெரிய திருடனாக மாறி இருக்கமாட்டேன். குற்றம் என்னுடையதன்று, அவர் களுடையதே', என்று கூறினானும்.

இக் கதையின் மூலம் பெற்றோர்களின் சிறு அசட்டைத் தனம் எவ்வளவு பெரிய சமூக விரோதியை வளர்த்துவிட்டிருக் கிறது என்பதை அறிந்தோம். இன்று நாட்டில் நிலவும் அனைத்துக் கேடுகளுக்கும் ஆதாரம் பெற்றோர்களே என்றால் மிகையாகாது.

தந்தையின் கடமை:-

தந்தை தன் மகனுக்கு வேண்டிய அறிவுச் செல்வத்தைத் தேடித்தருவதில் பெரும்பங்கு உடையவன் ஆகின்றான். ஒரு சிறிய செடியை ஆடுமாடுகள் அழிக்காமல் வேலியிட்டுக் காப்பதுபோல நன்மை தீமைகளைப் பகுத்துணரும் நிலையில் இல்லாத சிறு குழந்தைகளின் செயல்களை நன்கு கவனித்து அவர்கள் தீய நெறியில் செல்லாமல் நல்வழியில் செல்ல எல்லாத் துறைகளிலும் உதவியாக இருப்பதுவே தந்தையருள் ஆகும்.

பெற்றோர் தரும் நற்பயன்:-

எங்கும் உணவு விடுதிகள் நிறைந்திருக்கும் இக்காலத்தில் ஒருமகன் வெளியூரில் பணியாற்றுகின்றான். உணவு விடுதியில் உணவு உண்கிறான். அவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆகிறது. உடனே அவன், "என் வீட்டிற்குப் போய் எங்கள் தாயார் கையால் ஒருவேளை சோறு உண்டால்தான் என் உடம்பு குணமாகும்," என்கிறான். உணவு விடுதியிலும் சோறு தான் போடுகிறார்கள். அப்படியிருக்க அவன் ஏன் வீட்டை நாடி ஓடுகிறான்? வீட்டு உணவில் அப்படி என்ன மகிமை இருக்கிறது? தாய் தந்தையர் உணவை மட்டும் போடுவதில்லை.

உடன் தம் அன்பையும் குழைத்து ஊட்டுகிறார்கள். சீர்காழியில் திருக்குளக்கரையில் 'அம்மே அப்பா' என அழுத திருஞான சம்பந்தப்பெருமானுக்குச் சிவபெருமான் ஆணைப்படி உமா தேவி பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து உடன் சிவஞானம் குழைத்து ஊட்டியதாகப் பெரியபுராணம் கூறுகிறது. தாயின் கையால் உண்ணும் உணவில் அவள் அன்பும் குழைந்து இருப் பதால் உடலுக்கு நன்மை தருகிறது. ஆற்றின் கரை ஓரத்தில் முட்டை யிட்டுவிட்டுப் பின்னர் ஓரிடத்தில் இருந்து தன் முட்டைகளை நோக்குமாம் கயல்மீன். அம்மாத்திரத்தில் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிவருமாம். பெற்றோர் களின் ஆசிகள் குழந்தைகளுக்கு நன்மையைக் கொடுக்கும். 'நம் குழந்தை சான்றோனாக வளரவேண்டும்; உடல்வளத்துடன் இருக்க வேண்டும்; அருள் நலமும் பொருள் நலமும் அடைய வேண்டும்' என்று தாய் தந்தையர் உண்மையாக நினைத்தால் அது அக்குழந்தைகளுக்கு மிக்க பயனைத்தரும்.

இவ்வாறு தாயருளுடன் சேர்ந்து தந்தை அருள் மக்கள் வாழ்வுக்குப் பெருந்துணையாகிறது. அத்துடன் நல்ல தந்தை தன் மகன் உரிய வயது அடைந்த உடன் நல்ல குருவைத்தேடி அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கும் பெருங்கடமை உடையவன் ஆகின்றான். உடல் வளர்வதற்கேற்ற உணவும், உள்ள வளர்ச்சிக் கேற்ற அறிவுரைகளும் தாயருளாலும், அறிவு வளர்ச்சி தந்தையருளாலும் கிடைக்கின்றன. ஆனாலும் ஒரு குழந்தை முழு வளர்ச்சி அடைந்து அகக்கண்ணாகிய அறிவுக் கண்ணைப் பெறுவதற்கு ஒரு குரு தேவை. குருவருளால்தான் சிறந்த ஞானத்தை அடைய இயலும்.

குருவருள்:-

நம்முடைய பழம் பெரும் நூல்களிலே குருநாதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம் ஒப்பற்றதாகும். எல்லா அருளுக்கும் ஆற்றல்களுக்கும் அடிப்படையாகத் திகழ்வது குருவினுடைய அருளேயாகும்.

நம்முன்னோர்கள் பண்டைக் காலத்தில் உலகியல் அறிவு, அருளியல் அறிவு, ஆகிய இருவகை அறிவுகளையும் ஒரே குரு வினிடத்தில் பெற்றனர். இராம இலக்குமணர்களுக்கு வசிட்டர் குருவாக விளங்கினார். பாண்டவர், கௌரவர்களுக்குத் துரோணர் குருவாக விளங்கினார்.

குருகுலம்:-

அக்கால குருகுலக் கல்வி உலகியல் அறிவையும், அருளியல் அறிவையும் ஒருங்கே அளித்தது. ஆசிரியர் என்ற சொல் ஆசு+இரியர், குற்றங்களை நீக்குபவர் என்று பொருள் படும். குரு என்ற சொல் (கு+ரு), 'கு' என்றால் அஞ்ஞானம், 'ரு' என்றால் ஒழிப்பவர். அஞ்ஞானத்தை ஒழித்து மெய்ஞ் ஞானத்தை அருள்பவர் என்று பொருள்படும்.

இது கருதியே நம் முன்னோர் "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' என்றும், "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்றும், "கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றும், கல்வியின் சிறப்பினையும் கல்வி கற்பிக்கும் குருவின் சிறப்பினையும் பலபடப் பாராட்டி உள்ளனர்.

ஆசிரியர்கள் நிலம், மலை, நிறைகோல் அன்ன தன்மையராக விளங்கினர். தூய ஒழுக்கங்கள் உடையவர் களாகவும், தன் மாணக்கனின் உயர்வே தன் உயர்வு எனக் கருதுபவர்களாகவும் திகழ்ந்தனர்.

தற்காலக் கல்வி:-

தற்காலத்தில் பிற நாட்டாரின் ஆதிக்கத்தால் நம் நாட்டுக் கல்வி முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வயிற்றுப் பிழைப்புக்கென்று ஏதோ கல்வி கற்றால் போதும் என்ற நிலை வந்துவிட்டது. உலகியல் அறிவைக் கொடுக்கும் ஆசிரியர் வேறாகவும் அருளியல் அறிவைக் கொடுக்கும் ஆசிரியர் வேறாகவும் காணுகின்ற நிலை ஏற்பட்டு விட்டது.

எந்த அறிவைப் பெற வேண்டுமானாலும் குரு அருள் வேண்டும். "தொட்டுக் காட்டாதவித்தை சுட்டுப்போட்டாலும் வராது", என்பது பழமொழி. சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்பது அறிவுரை.

குருஅருள் பெற்றோர்:-

நாம் அறிவைப்பெற, அருளைப்பெற நமக்குத் துணையாக அமைபவர் குரு. அவர் மனம் விரும்பும்படி நாம் பணிவிடை செய்து அவர் அருளைப் பெறப் பாடுபட வேண்டும். பண்டைக் காலத்தில் குருவின் அருளைப் பெறப் பலர் அரும்பாடு

பட்டுள்ளனர். யாக்ஞவல்க்யர், அனுமார் முதலியோர் சூரியனைக் குருவாகக் கொண்டு அவரிடம் உபதேசம் பெற அவருடனே சஞ்சரித்தார்கள் என்று அறிகிறோம். துரோணரைக் குருவாக மனத்தால் வரித்த ஏகலைவன், அவர் உருவைப் பாவனை செய்து அனைத்துக் கல்வியையும் பெற்றுத் தன்குரு விரும்பியதைக் காணிக்கையாகவும் அளித்து அழியாப் புகழ் பெற்றான். உபமன்யு முனிவர் குருவின் ஆணைப்படி ஆகாரம் துறந்து கண்களை இழந்து பின் பேரருள் பெற்றார் என்பது வரலாறு.

ஆருணி:-

தௌம்யர் என்ற ஒரு முனிவர் குருகுலம் நடத்தி வந்தார். அவரிடம் பல மாணுக்கர்கள் கல்வி கற்று வந்தனர் ஆருணி என்ற சிறுவனும் அவரிடம் பயிற்சி பெற விரும்பினான். ஒருநாள் அவருடைய ஆசிரமம் நாடி வந்தான். முனிவர் அவனை நோக்கி "என்ன வேண்டும்" என்று வினவினார். "சுவாமி! தங்கள் ஆசிரமத்தில் தங்கித்தங்களுக்குப் பணிவிடை செய்ய விரும்புகின்றேன்" என்று பணிவுடன் கூறினான். முனிவர் 'சரி' என்று கூறினார். அவனும் அன்று முதல் ஆசிரமத்தில் தங்கி ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து, ஆசிரம வேலைகள் முடிந்தவுடன் ஆசிரமத்திற்குரிய மாடுகளை ஓட்டிக் கொண்டு காட்டுக்குப் போய் மேய்த்து விட்டு, மாலையில் மாடுகளுடன் திரும்புவான். கல்வி ஏதும் கற்கவில்லை. மறற மாணவர்கள் இவனைக் கல்லாதவன் என்று இகழ்ச்சி செய்வார்கள். இவன் எதையும் பொருட் படுத்தவில்லை.

ஒருநாள் மாலை திடீரென வானம் இருண்டு இடியும் மின்னலுமாக மழை பொழிந்தது. காட்டில் அங்குமிங்கும் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைக் காற்றுடன் கூடிய மழையில் நனைந்தவாறு ஒன்று திரட்டிக் கொண்டு இரவு ஆசிரமத்திற்குத் திரும்பினான். உடலெல்லாம் விறைத்து விட்டது. மாடுகளைக் கொட்டகையில் கட்டியபின் உள்ளே நுழைந்தான். ஆசிரம வயல்களைப் பயிரிடும் உழவன் முனிவருடன் உரையாடிக் கொண்டிருந்தான் "திடீரெனப் பொழிகின்ற பெருமழையால் பெரும்வெள்ளத்தால் வயல்களில் உள்ள நாற்றுகள் மண்மூடிக் கொண்டன. இவ்வாண்டு விளைவு

ஒன்றும் இருக்காது'' என்று உழவன் கூறினன். முனிவர் "நாம் இப்போது என்ன செய்ய முடியும்? இறைவன் செயல் எதுவோ அது நடக்கட்டும்'' என்ருர். அனைவரும் உறங்கச் சென்றனர். விடியல் மூன்றுமணிக்கு எப்போதும் போல் முனிவர் எழுந்தார். ஆருணி வழக்கமாகத் துயிலும் இடத்தில் அவன் இல்லை. அருகே இருந்த மாணவர்களை வினவினர். அவர்கள் "அறியோம்'' என்று கூறினர். முனிவர் ஒரு கணம் கண்ணை மூடிச் சிந்தித்தார். அனைத்தையும் அறிந்தார். அந்த மை இருட்டில் வயலை நோக்கி நடந்தார், அங்கே வரப்பருகே காலில் ஏதோ தட்டுப்பட்டது. கையால் தடவிப் பார்த்தார். ஆருணியின் உடல் கிடந்தது, ஆசிரமத்தின் வயல்களில் விளைவு இல்லையேல், ஆசிரமத்தில் உள்ள ஆசிரியர், மாணவர், பணியாளர் அனைவரும் வருந்த நேருமே, மழையால் நாற்றங்கால் பழுதாகி விட்டதாக உழவன் கூறினனே என்ற எண்ணத்தால் கும்மிருட்டில் வயலை நோக்கி வந்து, தன்னால் இயன்ற வரை மரக்கிளைகளை முறித்துப்போட்டு வாய்க்காலின் கரையை அடைக்க முயன்றிருக்கின்ருன் ஆருணி. அப்படியும் வெள்ளம் நிற்காமல் நாற்றங்காலுக்குள் மண்ணை அடித்துக் கொண்டு பெருகியது, இறுதியில் இரண்டு கைகளையும் சிரமேற் கூப்பி **"குருநாதா! தங்கள் திருவடியில் இந்த அடிமை வைத்துள்ள பக்தி உண்மையானதாக இருந்தால், இந்தக் கரை என்னேடு அடையட்டும்''** என்று வெள்ளம் வரும் வழியில் வாய்க்கால் கரையில் படுத்துக்கொண்டான். வெள்ளம் மேன்மேலும் வந்து மண் மூடிக்கொண்டது. ஆருணியின் உயிர் பிரிந்தது. கரையும் அடைந்தது. வயல் காப்பாற்றப்பட்டது. அனைத்தையும் தம் ஞானக்கண்ணுல் அறிந்தார் தௌம்யர். ஆருணியின் குருபக்தி அவரை உருக்கியது. தம் திருக்கையால் மேலே மூடியிருந்த மண்ணை நீக்கி, ஆருணியைத் தூக்கி நிறுத்தினர். தம் வலக்கரத்தை அவன் சிரமீது சிறிது நேரம் வைத்து "ஆருணி! எழுந்திரு'' என்று அருள் செய்தார். என்னே வியப்பு! ஆருணி உயிர்பெற்றெழுந்தான். குருவை வலம் வந்து வணங்கினன். சகல கலைகளையும் உண்மை ஞானத்தையும் அந்த நொடியில் அறிந்தான். குருநாதர் அவனை ஆசீர்வதித்து "நீ எல்லாம் அறிந்து கொண்டாய் இனி ஆசிரம வாசம் உனக்குத் தேவையில்லை, செல்லலாம்'' என்று அருள் புரிந்தார். குருவருளின் மகிமையை விளக்கும் பல கதைகளுள் இதுவும் ஒன்று.

குரு அருளும் விதம்:-

கண்ணுக்குத் தெரியாத இறைவனை நாம் காணும்படி அருள்புரிபவர் குரு. குரு இன்றேல் எதுவும் சித்திக்காது.

''இருவினைகள் அற்றுநிற்கும் ஏகாந்த வீடதனைக்
குருவடிவாய் வந்தெனக்குக் கொடுப்பாய்-பராபரமே''

''குருவாய் வந்தெனையாண்ட கோலம் வேறோ''

குலமுழுதும் அடிமையென பலகாலும் முத்தர்பணி
குருவினடி தொழுது நறுமலர் தூவி யிட்டமுது
கொளுமெனவு முருகியறு சுவையோடளித்தமிர்த
மெனவூட்டும்
பெருமை பெறு தவமகிமை யழியாத முத்திநிலை
பிறவிவினை யகலவொரு தவம்வேறு செப்பவிலை
பிரமநிலை யுணர்பவர்கள் அறநூல் விதித்த விதி
இதுதானே''—எனவும்

''ஆதியாய் நித்யபர மேவவே உத்தமர்கள்
ஆவிகாயப் பொருளை நேயமாய்த் தத்தமளித்து
ஆனதோர் சற்குருவின் பாதமே நித்யமென
அடைவார்கள்,''—எனவும்,

''மெய்க்குரு வந்த போதே விளக்கம் செய்வாரடி
கோதே''—எனவும்,

''தத்துவமுழுதும் தெரிந்தும் சகல கலையு முணர்ந்தும்
சற்குரு வன்னியில் ஆகாதடி: முத்தி
மோனநிலை கூடா'' —எனவும்,

குருவைக் கண்டடிபணிந் தேத்துவாய்
இருவினை பற்றுதுனை விட்டுப் போகும்;
ஏகசற் குணமுற்றி உனை நற்றியே விடாது
அருள் கனிவாகும்—எனவும்,

இரெட்டியப்பட்டி சுவாமிகள் குருஅருளின் பெருமையை விளக்குகின்றார்கள்.

நம்மைப் பிணித்திருக்கும் சங்கிலி வினை. அது நல்வினை தீவினை என இருவகைப்படும். இந்த வினைகள் இருக்கும் வரை ஏகாந்தவீட்டை நாம் அடையமுடியாது. வினைகளை நாமாகவும் போக்கிக்கொள்ள முடியாது. இவற்றைப் போக்கு

வதற்கு குரு அருள் தேவை. உயிர்கள் கோடானு கோடி பிறப்பெடுத்து உண்மையைக் காண இயலாமல் பொய்ம் மயக்கத்தால் மயங்கித் தவிக்கின்றன. மெய்யுணர்வு பெற்று நம் உண்மைத் தந்தையாகிய இறைவனை அடையப் பாடுபடும் சில உயிர்கள் வழி காணுமல் திகைக்கின்றன. இவ்வாறு பக்குவப்பட்ட ஆன்மாக்களை உய்விப்பான் வேண்டி இறைவன் அவரவர் தகுதிக்கேற்ப குருவாக வந்து அருள் புரிகின்ருன் என்பது நம் முன்னோர்கள் கண்ட உண்மை. இந்த சுவாமிகள் "ஏகாந்த வீடதனைக் குருவடிவாய் வந்து எனக்குக் கொடுப்பாய்" என்று இறைவனிடம் வேண்டுகின்ருர். இரு வினைகள் அறவும், ஏகாந்த வீட்டினையெய்தவும் குருஅருள் தேவை என அறிந்தோம்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் பக்குவத்தைக் கண்ட பரிபூர்ணப் பெருமான் குருவாக வந்து அருள் செய்து இருக்கின்ருர். இந்த உண்மையை, **"குருவாய்வந் தெனை யாண்ட கோலம் வேருே"** என்று இரெட்டியப்பட்டி சுவாமிகள் விளக்குகின்ருர். குருவாக வந்தவர் இறைவனே என்னும் உண்மையை நாம் இங்கு உணர வேண்டும்.

குருவையே இறைவனுக எண்ணி வழிபட்டுப் பேரின்ப முத்தியை அடைந்தவர்கள் பலர். அப்பூதி அடிகள், பெரு மிழலைக் குறும்பர், மதுரகவி ஆழ்வார் போன்ருேர் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

அப்பூதி அடிகள்:-

அந்தணராகப் பிறந்து வேதங்களைக் கற்று சிவபக்தி நிறைந்து விளங்கிய அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெருமானுக்குச் சிவபெருமான் அருள் செய்த அற்புத நிகழ்ச்சிகளைக் கேட்டு உள்ளம் நெகிழ்ந்தார். அவரையே தம் குருவாக ஏற்ருர். தம் குலமுழுதும் அவருக்கு அடிமையாக் கினுர். அசையும் பொருள், அசையாப் பொருள் ஆகிய தம் சொத்துக்கள் அனைத்துக்கும் குருவின் திருப் பெயரையே சூட்டி மகிழ்ந்தார். தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருநாதருக் கென்றே அர்ப்பணித்து வாழ்ந்தார். தன் மூத்த மகன் பாம்பு கடித்து இறந்த போதும் அதை மறைத்து குருநாதருக்கு உணவூட்ட முற்பட்டார். குருவினிடம் அவர் கொண்ட அளப்பரும் காதலை என்னென்று உரைப்பது.

இறை அருளால் நாவுக்கரசர் பெருமான் நிகழ்ந்ததை உணர்ந்து மகனை உயிர்ப்பித்துத் தந்தார்.

குரு அருளைப் பெறும் வழி:-

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

குலமுழுதும் அடிமையென பலகாலும் முத்தர்பணி
குருவினடி தொழுது நறுமலர் தூவி யிட்டமுது
கொளுமெனவும் உருகியறு சுவையோடு அளித்து அமிர்த மென ஊட்டும்
பெருமைபெறு தவமகிமை அழியாத முத்திநிலை
பிறவிவினை அகல ஒரு தவம்வேறு செப்ப விலை
பிரமநிலை உணர்பவர்கள் அறநூல் விதித்தவிதி இது தானே

என்று குருவின் சேவையைப் பாராட்டுகின்றார்.

குரு அருளைப்பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்குத் தெளிவான விடை இங்கு உள்ளது.

ஒருவரை குருவாக ஏற்றுக் கொள்ளுமுன் நன்கு யோசித்து ஏற்றுகொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்ட பின் அவரிடம் ஏதும் குறைகள் காணக் கூடாது. நம் குலமுழுதும் அடிமையென ஒப்புக் கொடுக்க வேண்டும். குருநாதரின் திருவடி மலர்களை நீரினால் அபிடேகித்து, சந்தனம் இட்டு, மலர்தூவி வலம்வந்து வழிபட்டு உய்ய வேண்டும். அறு சுவையோடு அமுது பரிமாறி உளமுருகி அன்போடு ஊட்ட வேண்டும். பெரிய புராணத்தில் வரும் அடியார்களின் வரலாறுகள் இந்த உண்மையையே நமக்கு உணர்த்துகின்றன.

இவ்வாறு குருவை இறைவனாக எண்ணி வழிபடுவதே மேலான தவம் என்கிறார் சுவாமிகள். இதுவே பெருமையைத் தருகின்ற தவம். இதுவே அழியாத முத்திநிலை. பிறவி வினை அகல ஒரு தவம் வேறு இல்லை. பிரம்ம நிலையை உணர்ந்த பெரியோர்கள் விதித்த விதி இதுதான் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். உடலை வருத்தி, காட்டில் சென்று பல ஆண்டுகள் தவம் செய்வதனால் வரும் பயன் குருவிற்குச் செய்யும் உண்மை உபசாரத்தால் கிடைக்கும் என்று திட்ட வட்டமாகக் கூறுகிறார். இதைத்தாம் கூறியதாக அருளவில்லை. இதுவரை உலகில் எத்தனைபேர் அசைவிலா பிரம்மத்தின் நிலையை அறிந்தார்களோ அவர்கள் உலக மக்கள் உய்ய

வகுத்தருளிய விதி (சட்டம்) இதுதான் என்ற பேருண்மையை நாம் அறிய உணர்த்துகின்றார்.

குருவை வணங்கும் முறை:-

"குருவைக்கண் டடிபணிந் தேத்துவாய்
இருவினை பற்றுது உனைவிட்டுப் போகும்
ஏகசற் குணமுற்றி உனைநற்றியே விடாது;
அருள் கனிவாகும்."

என்று இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள் செய்கின்றார்,

குருவைக் கண்டவுடன் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணக்கம் செய்ய வேண்டும்.

ஒரு வைணவ அடியார் மற்ற அடியார்களோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒருவர் இவரைப் பார்த்து "பெருமாளும், குருவும் ஒரு இடத்தில் காட்சி அளித்தால் முதல் வணக்கம் யாருக்குச் செலுத்துவாய்", என்று வினவினார். உடனே இவ்வைணவ அடியார், **"முதல் வணக்கம் குருவுக்குத் தான். அவர் அருளால் அவர் காட்டிய பின்னர் தானே பெருமாளைக் கண்டோம்?"** என்று பதில் கூறினாராம்.

எந்த இடத்தில் எந்த நேரத்தில் எந்தச் சூழ்நிலையில் குருநாதரைக் கண்டாலும் உடனே அடிபணிந்து ஏத்த வேண்டும். ஏன் அப்படிச் செய்யவேண்டும்? என்ற வினாவிற்கு உடன் பதில் கொடுக்கின்றார் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

செம்பிலே உள்ள களிம்பு போல் உன்னை விடாமல் பற்றி உள்ள நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகளும் குருவைக் கண்டடிபணிந்த அப்போதே விட்டுப் போய்விடும். எத்தனையோ காலமாகப் பற்றி நம்மை அலைக்கழித்துக் கொண்டு வரும் வினை போவதற்கு ஒரே வழி, ஒப்பற்ற வழி, எளிய வழி, குருநாதரை உண்மையன்போடு வழிபடுவதாகும். இதுமட்டுமன்று; தீய குணங்கள் நம்மை விட்டு நீங்கி சற்குணம் முற்றும்; ஏக சற்குணம் முற்றும். இந்த சற்குணம் நம்மை விடாமல் தொடர்ந்து இருக்கும். அதன் காரணமாக நம் உள்ளம் அருளால் நிறையும். அருள் கனி கனிந்து ஒழுகும். பின் என்ன? அருள் மயமாய்த் திகழ்வோம். இத்தனை பெருமையும் குருநாதரின் திருவடி வணக்கத்தினால் உண்டாகும் என்ற நுட்பத்தை நமக்கு உணர்த்துகின்றன இந்த அடிகள்.

"ஆதியும் அந்தமு மில்லா அரும் பெருஞ் சோதி"

என இறைவனை மணிவாசகர் போற்றுகின்றார். இறைவன் தோற்றமும் மறைவு மில்லாதவன், எல்லா உலகங்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாக இருப்பவன் இறைவனே. ஆதி காரணமாக விளங்குபவனும், நித்யமானவனும், பரம் பொருள் ஆனவனும் ஆகிய இறைவனை அடைய விரும்பும் உத்தமர்கள் என்ன செய்ய வேண்டும்? இதுவரை அடைந்த உத்தமர்கள் என்ன செய்தார்கள்? என்ற உண்மையினைக் கீழ்வரும் அடிகள் மூலம் விளக்குகின்றார், இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

'ஆதியாய் நித்ய பரமேவவே உத்தமர்கள்
ஆவிகாயப் பொருளை நேயமாய்த் தத்தமளித்து
ஆனதோர் சற்குருவின் பாதமே நித்யமென-
அடைவார்கள்."

பரநாட்டம் கொண்ட மேலோர்கள் தமக்கென ஏதும் வைத்துக் கொள்ளாமல், தம் உயிர், உடல், பொருள், அனைத்தையும் குருவினிடம் ஒப்புக்கொடுப்பார்கள்.

அக் குருநாதரின் திருவடி மலரே அழியாத மெய்ப் பொருள் எனப் பரிபூர்ணமாக நம்பி அடைக்கலம் புகுவார்கள், என்பது இதன் பொருள்.

குரு ஆணைக்குக் கீழ்ப்படிதல்:-

மணிவாசகப் பெருந்தகை குதிரை வாங்கும் பொருட்டு, பெரும் பொருளுடன் மதுரையிலிருந்து சென்றார். இவர் முன்னர் செய்த தவப்பயனால் சிவபெருமானே திருப்பெருந் துறையில் குருந்தமர நீழலில் குருவாக எழுந்தருளியிருந்தார். அவரால் ஆட்கொள்ளப் பெற்றார் மணிவாசகர்.

அந்தக்கணமே தம்உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருநாதரின் திருவடிகளில் ஒப்புக் கொடுத்து விட்டார். குருநாதரின் அருளாணைப்படி தாம் கொணர்ந்த பொருளைக் கொண்டு கோயிலைக் கட்டினார். அடியார்களுக்கு உணவிட்டார். அவர் கூறியபடியே அரசனிடம் கூறினார், அரசன் தண்டனை கொடுத்த போதும், குருநாதரின் ஆணையெனவே ஏற்றுக் கொள்கிறார். இதுவே அருளாளர்களின் உயர்ந்தநிலை.

இவ்வாறு உடல், பொருள் ஆவியை ஒப்புக்கொடுப்பதால் வரும் பயன் மெய்ஞ்ஞான விளக்கம் என்பதை முன்னர் கண்டோம்.

மெய்க்குரு வந்த அப்போதே விளக்கம் செய்வாரடி கோதே

என்று, குருநாதர் நமக்குக் காட்சி தந்த அளவில் இதுவரை புரியாதிருந்த பல உண்மைகள் விளங்கும், என்பதை உணர்த்துகின்றார் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

இதுவரை நாம்கண்ட அடிகளின் பொருளால் குருவருள் இல்லாமல் ஏதும் கை கூடாதென்று அறிந்தோம்.

குரு அருள் இன்றி, முத்தி நிலை கூடாது:-

நான் எல்லா வேதங்களையும், சகல கலைகளையும் உணர்ந்துள்ளேன். எல்லாத் தத்துவங்களையும் நான் அறிவேன். என்றால் முத்திநிலையை அடைய முடியும் என்று எண்ணியிருக்கின்றவர்களுக்கு ஓர் அறிவுரை கூறுகின்றார் சுவாமிகள்.

''தத்துவ முழுதும் தெரிந்தும், சகலகலையு முணர்ந்தும்
சற்குரு வன்னியில் ஆகாதடி; முத்தி
மோனநிலை கூடா.'' —என்பது ஆணித்தரமான அறிவுரை.

திருக்கச்சி நம்பி:-

காஞ்சி மாநகரில் திருக்கச்சி நம்பி என்ற ஒரு அடியார் வாழ்ந்து வந்தார். காஞ்சீபுரத்தில் எழுந்தருளி உள்ள வரதராஜப் பெருமாளிடத்தில் அளவிட முடியாத காதல் கொண்டவர். அவர், அப்பெருமானின் திருக்கோயிலுக்கு இரண்டு வேளையும் சென்று மயில் விசிறியால் பெருமாளுக்கு வீசித் திருப்பணி செய்வார். ஒருநாள் மாலை பெருமாளின் பேரழகில் ஈடுபட்டு அவரை விட்டுப்பிரிய மனமில்லாமல் இரவு கருவரைக்குள்ளேயே தங்கிவிட்டார். உண்பதையும் உறங்குவதையும் மறந்தார். விசிறியால் வீசிக் கொண்டே இருந்தார். நடுநிசியில் வரதராஜப் பெருமாள் நம்பி கண்காணக் காட்சி தந்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். தினமும் இவ்வாறே நடந்தது. நம்பி இல்லம் செல்லவில்லை. உண்மையையுணர்ந்த பலர் நம்பிகள் மூலம் தம் ஐயங்களைப் பெருமாளிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

இராமனுஜர் பல திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு காஞ்சி மா நகரம் வந்தார். திருக்கச்சிநம்பியிடம் பெருமாள் உரையாடும் உண்மையை அறிந்தார். நம்பியிடம் சென்று அவரை வணங்கி தமக்குள்ள சில ஐயங்களைக் கேட்டுப் பதில் கூறும்படி வேண்டினார். நம்பியும் இரவு பெருமாள் எழுந்தருளிய உடன் இராமானுஜர் கேட்ட கேள்விகளைக் கேட்டார். பெருமாள் கூறிய பதிலை மறுநாள் இராமானுஜரிடம் கூறினார். அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்த இராமானுஜர், திருக்கச்சி நம்பியை நோக்கி "எல்லோருக்கும் கேட்டு விளக்கம் சொல்கின்றீர்களே, உங்களுக்கு முத்தி கிடைக்குமா? என்று கேட்டீர்களா" என்றார். திருக்கச்சிநம்பி, இதில் என்ன ஐயம்? பெருமாளே என்னிடம் நேரில் வந்து பேசும்போது திருவடிப் பேற்றைக் கொடுக்காமல் போவாரா? என்று கூறினார். பெருமாள் வாயிலாக அதைக் கேட்டறிந்தீர்களா? என்று இராமானுஜர் வினவ, இல்லை என்று நம்பிகள் கூற, 'உடனே இன்று இரவே அதைக் கேட்டுத் தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள்' என்று இராமானுஜர் அறிவுரை கூறினார்.

இரவு வந்தது. நம்பிகள் விசிறியால் வீசியபடியே இருந்தார். பெருமாளும் எழுந்தருளினார். நம்பிகளிடம் உரையாடினார். நம்பிகள் தயங்கித் தயங்கி இராமானுஜர் கூறியவற்றைக் கூறினார். உடனே பெருமாள், "அது யார் கூறியது? நீர் வீசினீர். யாம் பேசினோம்; இவ்வளவே, முத்தி நிலை கைகூட வேண்டுமெனில் தாங்கள் ஒரு குருவிடம் சென்று, தொண்டு செய்து உபதேசம் பெறவேண்டும்," என்றார். பதறித் துடித்த நம்பிகள் இராமானுஜருக்கு வணக்கம் செலுத்தி பெருமாள் குறிப்பிட்ட குருநாதரை நாடிச்சென்று, அவரிடம் உபதேசம் பெற்றுப் பின் திருவடிப்பேற்றை அடைந்தார் என்பது வரலாறு.

இதன் மூலம் நாம் அறிவது சற்குரு இல்லாமல் முத்தி மோனநிலை கூடாது என்பதாகும். குருவருள் இல்லாமல் திருவருள் கைகூடாது.

குருவின் ஆற்றல்:-

குருவினுடைய ஆற்றல்கள் நம்மை ஆட்கொண்டு இயக்கும் போதுதான், நம்முடைய இயல்பான ஆற்றல்கள்

யாவும் நம்மிலிருந்து வெளிப்பட்டு வியக்கத்தக்க விதத்திலே தொழிற்படுகின்றன என்பது நம் சமயத்தின் சித்தாந்தம். வேதங்கள் வர்ணிக்கின்ற பரம்பொருள் மனித உருவத்தில் வந்ததாகவே குருநாதரை நாம் நினைக்க வேண்டும். வேதங்களுக்கெல்லாம் புலனாகாத மெய்ப்பொருள் குருநாதருடைய ஒரு வார்த்தையிலே நமக்குப் புலனாகிவிடும்.

பரிசனவேதி தன்னுடைய பரிசத்தினாலேயே உலோகங்களை எல்லாம் எவ்வாறு பொன்னாக மாற்றி விடுகிறதோ அதுபோல குருநாதன் தன்னுடைய பரிசத்தினால் நம்மிடம் உள்ள ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்களை நீக்கிப், பித்தளையாகிய நம்மைத் தங்கமாக்கி விடுகிறார்.

இதனையே தாயுமானவர் தம் பாடலில்

"பரிசித்து வேதிசெய்து, பத்துமாற்றுத் தங்கமாக்கியே
பணிகொண்ட பட்சத்தை என்சொல்லுவேன்"

என்று அருளுகிறார்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஆணவ, மாயை கன்மம் அகற்றும் சற்குரு பாதம்
காண உருகி நாடிக் கண்டால் தெளிவுவரும்

என்று அருளியிருக்கின்றார்கள்.

கண்ணால் காண இயலாத பரம்பொருளைக் காணும் வழி கற்றுத் தருபவர் குருநாதர். ஞானக்கண் அருளி அதன்மூலம் இறைவனைக் காண வழி வகுக்கிறார். சூரபத்மனுக்கு முருகன் ஞானக்கண் அருளித் தன் பேருருவைக் காணும் ஆற்றல் அளித்தார். அருச்சுனனுக்குக் கண்ணன் ஞானக்கண் அருளித் தன் பேருருவைக் காணும் ஆற்றலை வழங்கினார். பரிபூர்ண விநாயகர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு ஞானக்கண் அருளித் தம் பேருருவைத் தரிசிக்கச் செய்தார். இவ்வாறு அருள் ஞானக்கண் அருளும் செயல்புரிய குருநாதர் ஒருவரால் தான் இயலும்.

எனவே உண்மையான சற்குருவை நாட வேண்டும். அவர் அருள்பெற வேண்டும். குருவருளே இறையருளுக்கு வழி காட்டும் என்பதை அறிந்தோம்.

இறையருள்

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது பழமொழி. அணுவுக் கணுவாகி அப்பாலுக் கப்பாலாய் நிறைந்து விளங்குபவன் இறைவன். எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளி அருள் விளையாடல்கள் செய்யும் பெரும் பித்தன் அவன்.

தாயருளுக்கும். தந்தையருளுக்கும் குருஅருளுக்கும், மூல காரணம் இறைவனே. இறையருள் இன்றேல், தாயும், தந்தையும், குருவும், ஒன்றும் செய்ய இயலாது. தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் இருந்து நமக்கு ஆன்ம முன்னேற்றம் அளிப்பவன் இறைவனே.

"அன்னை, தந்தையும் அவரே; எனக்கான
குருவும அவரே'

என்று ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள் செய்கின்றார்.

"மாதா பிதா அவனே மற்றதெல்லாம் தானவனே" என்றும் மற்றோர் இடத்தில் அருள் செய்கின்றார்.

குருக்ஷேத்திரத்தில் தனக்கு முன்பு தன் பாட்டனுரையும் சகோதரர்களையும் குருவையும் கண்டு மயங்கி 'நான் போர் செய்ய மாட்டேன்' என்று அருச்சுனன் காண்டீபத்தைக் கீழே நழுவவிட்டபோது பகவான் கண்ணன் "அருச்சுனா எழுந்து நில்; இவர்களை நான் எப்போதோ கொன்றுவிட்டேன். இப்போது நீ ஒரு காரணமாகத்தான் இருக்கின்றாய். இவர்களை உண்மையில் நீ அழிக்கவில்லை. உன்னால் அழிக்கவும் முடியாது. எனவே வில்லைக் கையில் எடு உன் கடமையைச் செய்" என்று கீதோபதேசம் செய்தார். இதிலிருந்து நாம்அறியும் உண்மை என்ன? இறையருள் இன்றேல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்பதே.

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே"

"பூரணத்தில் பூரணமாய் எங்கும் நிறைந்து
ஆனந்தம் பொங்கி யூறும் காரணன்"

"அண்ட பகிரண்டம் அனைத்துமே தானாகிப்
பண்டு பழுத்த பழம்" என்றும்

இறைவன் இயல்பைப் பலபடப் பாராட்டியுள்ளனர் முன்னோர். இறைவனை முற்றும் அறிந்தவர் யாருமில்லை. அறியவும் முடியாது.

உயிர்கள் வினைநீங்கி, பற்றுவிட்டு, முற்றிலும் துறந்து, தன்னை அடைந்து பேரின்பமெய்த வேண்டும் என்ற பெருங் கருணையினால் உலகைப் படைத்து, சூரியன், சந்திரன், விண்மீன் காற்று, ஆகாயம், நெருப்பு, நீர், மண் முதலிய அனைத்தையும் படைத்து, அவையவை ஆங்காங்கு பணிபுரிய ஆணையிட்டு ஆளுகின்றான் இறைவன். ஆனால் அவனை நாம் காண இயலாது. கண்ணால் காண முடியாத பரம்பொருள் எத் தன்மையன் என்பதை,

'விறகில் தீயினன், பாலில் படுநெய்போல். மறைய நின்றுளன். மாமணிச் சோதியான்,' என்று அருளுகின்றார் அப்பர் சுவாமிகள்.

இறைவன் நீக்கமற எல்லா இடங்களிலும் நிறைந்து நின்று அருள் பாலிக்கின்றான். உலகில் தோன்றிய அனைத்து மெய்ஞ்ஞானிகளும் கண்டறிந்த உண்மை இது. இன்றைய விஞ்ஞானிகளும் ஆய்ந்து கண்டு ஒப்புக்கொள்ளும் உண்மையும் இதுவே.

தாயுமானவர் தம் அருட் பாடலில்

ஆங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்

தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது, சமயகோ டிகளெலாம்
தம்தெய்வம் எம்தெய்வ மென்(று)

எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கும் உள்ளதெது, மேல்

சங்குல் பகலற நின்ற எல்லையுளதெது, அது
கருத்திற் கிசைந்த ததுவே;
கண்டன வெலாம்மோன உருவெளிய தாகவும்
கருதி யஞ்சலி செய்குவாம்.

என அருளிச் செய்துள்ளார்.

என்ன அருமையான விளக்கம்! இறையருள் இயல்பினை எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றார் தாயுமானவர். அவனருள் பெருமையினை எடுத்தோதுவனவே அனைத்து நூல்களும். அப்பர் சுவாமிகள் இறைவனின் அருள் தன்மையினை "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே", என்று வியந்து போற்றுகின்றார்.

யார்யார் எந்தளந்த நிலையில் பாவனை செய்து வழிபடுகின்றார்களோ, அந்தஅந்த நிலையில் அவரவர்களுக்கு காட்சி கொடுத்து அருள் பாலிக்கின்றான் இறைவன். எனவே நான் கண்ட உருவம்தான் இறைவனுடையது; மற்றவர்கள் கூறுவது பொய் என்று கூறுவது அறியாமை.

இத்தகைய பெருநிலையில் உள்ள இறைவன் தன் பெருங் கருணையினால் உயிர்களுக்கு அருள்பாலிக்க எண்ணி எழுந்தருளி, அருள் விளையாடல்கள் புரிகிறான். அவ்வாறு அவன் கருணை மழை பொழியவில்லையெனில் நாம் உய்வது எவ்வாறு? அவன் கருணைமழை எப்போதும்பொழிந்து கொண்டு தான் உள்ளது.

ஆனால் அனைத்து உயிர்களாலும் அக்கருணையை மாந்த முடிவதில்லை. என்ன காரணம்? நம் அறியாமையும் வினைகளுமேயாகும்.

ஒரு தாய் அடுப்பருகில் பணி செய்துகொண்டிருக்கின்றாள். மழை சிறு தூரலாகப் பொழிந்துகொண்டு இருந்தது. திடீரென்று பலமாகப் பொழிந்தது. உள்ளிருந்தபடியே தாயார் தன் மகனிடம், "உள்ளே இருக்கும் பாத்திரத்தைக் கூடல்வாயில் வை" என்று கூறினாள். அவனும் அப்படியே செய்தான். சிலமணி நேரம் சென்று மழை நின்றது. தன் வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்த தாயார் கூடல் வாயில் வைத்த பாத்திரம் கவிழ்த்தபடி இருப்பதையும் அதில்

ஒருதுளி தண்ணீரும்இல்லை என்பதையும் கண்டு சினந்து, மகனை நோக்கி 'இப்படித்தான் பாத்திரத்தை வைப்பதா'? என்று வினவ, மகன் உள்ளே கவிழ்த்து வைத்திருந்தீர்கள், நானும் அப்படியே கவிழ்த்து வைத்தேன் என்றான்.

நான் எனும் அகந்தையினால் தலைகீழாகக் கவிழ்ந்து கிடக்கும் நம் உள்ளம் அளவின்றிப் பொழியும் இறைவனின் அருள் மழையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. நான் என்பது முற்றிலும் ஒழிந்தால்தான் இறைவனை அறியமுடியும்; அடைய முடியும்.

குமர குருபரனார் **"யான் எனதென்றற்ற இடமே திருவடியாய்"** என்று கந்தர்கலி வெண்பாவில் இறைவன் இருக்கும் நிலையைக் குறிப்பிடுகின்றார்.

'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ. இன்புற்றிட நாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே'

என்று தாயுமானவர் இறைவனின் அருள் வெள்ளத்தில் தோய்ந்து பேரின்பம் துய்க்க அழைக்கிறார். எல்லோரும் சென்றார்களா? இல்லையே. அதற்கேற்ற நல்வினை உடைய மக்களால்தான் இறையருளைத் துய்க்க இயலும்.

இவ்வாறு இறையருள் எல்லையற்றுப் பரந்து விரிந்து அனைத்து உயிர்களின் ஊடேயும் பரவி, அவர்கள் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றியும் தடுத்தும் தன் இச்சைப்படி ஆட்டுவிக்கின்றது.

இறையருள் இன்றேல் ஏதும் இல்லை. அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும். வினைநீங்கி, ஏக வுருவாய் உள்ள பேரின்ப வெள்ளத்தில் நாம் மூழ்க வேண்டும்.

அருள் நாட்டத்தின் அவசியம்:-

உலகில் வாழும் எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ள உயிர்கள் துன்பமின்றி வாழும் இன்ப வாழ்வையே நாடுகின்றன. ஆனால்

நாம் விரும்புகின்றபடி இன்பமே நமக்குக் கிடைக்கின்றதா எனில், அதுதான் இல்லை. நமக்கு வரும் இன்பதுன்பங்கள் எங்கிருந்து வருகின்றன? யாரால் கொடுக்கப்படுகின்றன? என்னும் வினாக்களுக்கு விடை நம்மால் அறியக்கூடவில்லை. முன்னைவினையின் பயன் என்பது அறிஞர் கூறும் விடையாக உள்ளது

"வினையினால் செனிக்கும்இத் தேகம், நீவீண்காலம் போக்குவது மோகம்," **"நாம் தேடும் கர்மமிது நம்மை விட்டகலாது"** என்று இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருள் செய்கின்றார்." **வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்; வினை மாண்டளவில் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்"** என்பது பட்டினத்தடிகளின் அருளுரை.

இவ்வாறு வினையினால் தேகம் எடுத்து வந்த நாம், வினைகளை ஒழிப்பதைவிட்டு, மேலும் மேலும் வினைகளைச் சேர்த்துக்கொண்டே இருக்கின்றோம். பிறப்பு இறப்பு என்பது நீங்காத சங்கிலித் தொடராக இருக்கிறது. இவ்வாறு பிறந்து, இறந்து கொண்டே இருக்கின்ற துன்பச் சங்கிலியை அறுத்து எறிய விரும்பினர் மெய்ஞ்ஞானிகள்.

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று பிறப்பினால் உற்ற இளைப்பை, வருத்தத்தை எடுத்துக் கூறுகின்றார் மணிவாசகர்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்பது திருக்குறள். "இறவாத இன்ப அன்பு வேண்டிய காரைக்கால் **அம்மையார், பிறவாமை வேண்டும்"** என்று கயிலைநாயகனிடம் **வேண்டுகின்றார்.**

> **"வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்,**
> **பாதியும் உறங்கிப் போகும்; நின்றதில் பதினையாண்டு**
> **பேதை பாலகனதாகும்; பிணி, பசி, மூப்புத் துன்பம்**
> **ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே".**

என்று மனிதப் பிறவியின் துன்பத்தை விளக்கமாகக் கூறுகின்றார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

''போதும் போதும் ஐயே; எடுத்த ஜென்மம் போதும் போதும் ஐயே'' என்றும்,

''ஜென்மம் எடுக்க இனி முடியாது முடியாது''

என்றும் குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இறைவனிடம் முறையிடுகின்றார்.

'மனிதப் பிறவியே உயர்ந்தது' என்பர் பெரியோர். அதற்கே இத்தகைய துன்பம் என்றால், மற்ற பிறவிகளின் கதி என்ன?

பிறவி எடுப்பது மிகவும் துன்பம் தருவது என்பதை மெய்ஞ்ஞானிகள் உணர்ந்தனர், துன்பம் தரும் இப்பிறவிப் பிணியிலிருந்து நீங்குவது எப்படி? இதற்கு வழி என்ன? என்று நாடினர். நம் பிறவித் துன்பத்தை நாமே நீக்கிக் கொள்ள முடியாது. இறைவனருளால் தான் பிறவி நீங்க வேண்டும். எனவே இறைவனருள் நாட்டம் கொண்டனர் மெய்ஞ்ஞான தாகம் கொண்ட பெரியோர்கள்.

இன்பம் என்று நாம் நினைப்பதும் நிலையான இன்பம் அல்ல. ஒரு உயிருக்கு இன்பம் அளிக்கும் செயல் மற்ற உயிருக்குத் துன்பம் தரலாம். ஒரு உயிருக்கே ஒரு சமயம் இன்பம்தரும் ஒருசெயல், மற்றொருசமயம் துன்பம்தருகின்றது. ஆக நாம் ஐம்புலன்களால் நுகரும் இன்பம் நிலையானதல்ல என்பது வெளிப்படை ஆயிற்று. அப்போது நிலையான இன்பம் எது? இறைவனின் திருவடி இன்பமே என்றும் நிலையான இன்பமாகும். அத்திருவடி நிழலில் அமர்ந்து பேரின்பம் துய்ப்பதற்குக் கொள்ளும் நாட்டமே அருள் நாட்டமாகும்.

"நிழலருமை வெய்யிலிலே போயறிமின்" என்ற அறிவுரை அனைவரும் அறிந்ததே. இவ்வுலகத் துன்பங்களில் உழன்று மிகவும் அலக்கணுற்ற போதுதான் இறைவனின் திருவடி நிழல் எவ்வாறு இருக்கும் என்று உண்மையின்பத்தைப் பற்றி நாம் உணர முடியும்.

எனவே துன்பம் கலவாத, என்றும் நிலையான பேரின்ப முத்தியை அடைவதற்கு நாம் கொள்ளும் நாட்டம் அருள் நாட்டமாகும். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இதுவாய்க்கும். அவர்கள் உலக மாயையிலிருந்து விடுபட்டு அருள் நாட்டம் கொள்வர்.

அருள் உடையார் செயல்

மக்கள் அனைவரும் தோற்றத்தால் ஒன்றாகவே காணப்படுவர். அவர்களுள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என எவ்வாறு அறிவது? "பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்று குறளாசிரியர் கூறுகிறார். பொன்னைப் பார்த்தால் மாற்றின் தரம் நமக்கு விளங்காது. உரைகல்லில் இட்டு உரைக்கும் போதுதான் அது எத்தனை மாற்றுத் தங்கம் என்பது புரியும். அதுபோல எல்லாமக்களையும் பார்த்தஉடனே நல்லோர், தீயோர் எனஅறிய நம்மால் இயலாது. இவர்களையும் உரைகல்லில் தேய்த்துப் பார்த்தால்தான் தெரியும். அது என்ன உரைகல்? 'கர்மம்' அதாவது செயல், ஒரே செயலை உயர்ந்தோர் செய்வதற்கும், தாழ்ந்தோர் செய்வதற்கும் வேறுபாடு உண்டு. அச்செயலின் ஏற்றத் தாழ்வை வைத்தே அவர்கள் இத்தகையவர் என்பதை நாம் அறிய முடியும். கௌரவர்களையும், பாண்டவர்களையும் சோதித்து அறிய எண்ணிய துரோணர். இருவரிடமும் ஒரே அளவு பொருள் கொடுத்து, வீடு நிறைந்த பொருள் வாங்கி வைக்குமாறு கூறினர். கௌரவர்கள் வீடுநிரம்ப வைக்கோலை வாங்கி அடைத்து வைத்தனர். பாண்டவர்கள் வீட்டைத் தூய்மை செய்து ஒளி விளக்கேற்றி, தூப மணம் கமழ்வித்து, ரத்தின கம்பளம் விரித்து, சந்தனம், புஷ்பம், பழம், தாம்பூலம், முதலியன அமைத்து வைத்தனர். காணவந்த பெரியோர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று. கால் கை கழுவ நீர் கொடுத்து, உள்ளே அழைத்துச்சென்று அமரவைத்து, மஞ்சள் பிள்ளையார்க்கு நைவேத்தியம் செய்து, அனைவர்க்கும் சந்தனம் புஷ்பம் பழம் தாம்பூலம் தந்து உபசரித்தனர். இருவருடைய மனத்தின் உயர்வு தாழ்வை இச்செயல் மூலம் அறியலாம். இதுபோன்றே அருள் உடையார் செயலும், அருளில்லார் செயலும் மாறுபடும். பிற உயிர்கள் படும் துன்பங்களைத் தாம் படும் துன்பமாக எண்ணிக் கண்ணீர் சிந்துவர் அருளுடையார். பிறஉயிர்களைத் துன்பப்படுத்துதலே தொழிலாகக் கொண்டு இருப்பர் அருளிலாதார்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்" என்பது குறள்.

அவரவர் உள்ளத்தில் உள்ள எண்ணங்களை அவரவர் முகம் தெளிவாக எடுத்துக் காட்டிவிடும். அருள் உடையார் கண்களில் அருள் ஒளி வீசும். அவ்வருள் ஒளி, பட்ட இடமெல்லாம் தூய்மை செய்யும். எல்லா உயிர்களும் இவ்வருளாளர் இருக்கும் இடத்தில் பகை மறந்து குலாவும். மகான்களின் முன்னிலையில் கொடிய விலங்குகளும் குழந்தைகள் போல் குலாவி மகிழ்வதை அனைவரும் அறிவர், ஒரு ஒளி விளக்கு சுற்றியுள்ள இருளை நீக்குவதுபோல, அருளாளர் ஒருவர் தன்னை யடுத்து வரும் உயிர்களைத் தூயவ ராக்குகிறார்.

கடமை, பண்புநலன், அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, கொல்லாமை, பணிவு முதலிய நற்குணங்கள் நிரம்பியவராய், இன்பம், துன்பம் எது வரினும் கலங்காத உள்ளம் உடையவர்களாய், பிறர் துன்பங்கண்டு, ஆற்றாது அவர்களுக்கு உதவி செய்பவர்களாய், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்பவர்களாய், நீதி நெறிகளில் இருந்து சற்றும் மாறாதவர்களாய், இறைவன் திருவருளை நினைந்து உருகும் நெஞ்சினராய், தன்னோடு வாழும் உயிர்களில் வேற்றுமை காணாதவராய், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய், தன் செயலற்று இறைவன் செயலாகவே வாழ்ந்து வருபவராய், பற்றற்ற தூய உள்ளம் உடையவராய் வாழ்பவர்களே அருளாளர்கள் ஆவார்கள். அருளுடையார் எங்கும் இறைவனைக் காண்பர்.

சதாசிவ பிரம்மேந்திரர்:-

சதாசிவ பிரம்மேந்திரர் என்ற அவதூதர் ஒருநாள் முகமதியர் தெருவழியே சென்று கொண்டிருந்தார். ஆடை இன்றி ஒருவர் தம் தெருவழியே வருவதைக் கண்ட முஸ்லீம் ஒருவர் சினங்கொண்டு வாள் எடுத்து அவதூதரின் ஒரு கையை வெட்டிவிட்டார். அவதூதர் ஏதும் சலனமின்றி சென்று கொண்டே இருந்தார். குருதி ஒழுகும் கையுடன் ஒன்றும் பேசாது செல்லும் அவர் செயலைக் கண்டு அதிர்ந்துவிட்டார் முஸ்லீம் அன்பர். இவர் ஒரு பெரிய ஞானி என்பதை உணர்ந்தார். 'நாம் தவறு செய்துவிட்டோமே' என்று பதறினார். அறுபட்டுக் கீழே விழுந்து கிடந்த அவதூதரின் கையை எடுத்துக்கொண்டு அவர் பின்னே ஓடினார். அவரை வலம்வந்து விழுந்து வணங்கி "சுவாமி என்னை மன்னித்து

விடுங்கள் தங்கள் கையை வெட்டிவிட்டேன்.'' என்று கூறினர். திரும்பிப் பார்த்தார் அவதூதர். 'உம்' என்ருர். அறுபட்ட கை ஒட்டிக்கொண்டது. அவர் தன் போக்கில் போய்க் கொண்டே இருந்தார்.

ஒரு சிறு முள் தைத்தாலும் "ஐயோ, அம்மா,'' என்று அலறித் துடிக்கின்ருேம். தன் கையே அறுபட்டு விழுந்த போதும் தன்நிலை மாருமல் இருந்தாரே அவர், இதுதான் அருளுடையார் செயல்.

சாந்தலிங்க சுவாமிகள்:-

கோவைக்கருகில் உள்ள பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் என்ற மகான் வாழ்ந்து வந்தார். அவர் பேரருளாளர். அவர் தம் மடத்தை விட்டு வெளியே எழுந்தருளினுல் அவருக்கு முன்னே ஒருவன், "சாந்தலிங்க சுவாமிகள் வருகிருர், சாந்த லிங்க சுவாமிகள் வருகிருர்'' என்று பறையறைந்து கொண்டு போவான். அவர்தம் அருட்கண் பார்வை பட்டால் எல்லாப் பற்றுகளையும் விட்டு அவர்பின்னே சென்று அவர்தம் சீடர் ஆகிவிடுவார்களாம். பின்னர் அவர்களுக்கு உலகியல் நினைவே இருக்காதாம். எவ்வளவு எளிதாகத் தவநிலை அடையலாம்! ஆனல் பாசச்சேற்றில் உழலும் மக்கள் 'நாம் எங்கே அவர்தம் பார்வை பட்டு சாமியாராகி விடுவோமோ' என்று பயந்து பறையறையும் ஒலியைக் கேட்டவுடன் உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொள்வார்களாம். தம் அருட்கண் பார்வையால் பற்றுகளை அறுத்து, முத்தி வழிகாட்டக் கூடிய சக்தியை உடையவர்கள் அருளாளர்கள்.

வடலூர் வள்ளலார்:-

வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஆறறிவு உடைய மக்களுக்காக மட்டுமின்றி ஓரறிவுயிராகிய பயிர்களுக்கும் இரக்கங் கொண்டார். ஒருநாள் வள்ளலார் வயல்கள் நிறைந்த வழியாகச் சென்ருர். இருமருங்கும் உள்ள வயல்களில் பயிர்கள் மழைமுகம் காணுது, தாய்ப்பால் இல்லாத குழந்தையைப் போல வாடி, முகம் சுருங்கி இளைத்து நிற்பதைக் கண்டார், மனம் துடித்தார். அப்பயிர்கள் போன்று தாமும் வாடினர். இதுவே அருளுடைப் பெருமக்களின் உயர் செயல். எல்லா உயிர்களையும் தம் உயிர்போன்றே எண்ணி அவைகளின் இன்ப துன்பங்களைத் தமதாக ஏற்றுக் கொள்வர்,

> ''எவ்வுயிரும் என்னுயிர்போல்
> எண்ணி இரங்கவும் நின்
> தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே''

என்பது தாயுமானவர் திருவாக்கு. அவர்கள் உள்ளம் மிக மென்மையானது. தூரத்தே உலக்கையால் குற்றும் ஓசையைக் கேட்டால் வள்ளலாரின் கைகள் கன்றிவிடுமாம். யாராவது இரைந்து பேசினாலும் அவரால் பொறுக்க இயலாதாம், எத்தகைய உயர்ந்த உள்ளம்!

முகம்மது நபி:-

நபிகள் நாயகம் திருவுலா செய்த காலம். ஒருமுறை பண்டிகை வந்தது. அனைத்து முகமதியப் பெருமக்களும் விரதம் முடித்து புத்தாடை புனைந்து பள்ளி வாசலுக்குச் சென்று கொண்டிருந்தனர். நபிகள் நாயகமும் மெதுவாகச் சென்று கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் ஓரமாக ஒரு சிறுவன் அழுக்கு நிறைந்த கந்தலாடையுடன் நின்றுகொண்டு தேம்பித் தேம்பி அழுதுகொண்டே இருந்தான். நபிகள் அச்சிறுவனிடம் சென்றார். அன்போடு தலையைத் தடவிக் கொடுத்தார். ''அப்பா, ஏன் அழுகிறாய்? என்று பரிவோடு வினவினார். அச் சிறுவனுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. தேம்பிக் கொண்டே, ''எனக்கு அப்பா, அம்மா இல்லை. எல்லோரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் உள்ளனர். எனக்கு உடுத்தவும் ஆடை இல்லை'' என்றான். இதைக் கேட்ட நபிகள் உள்ளம் கரைந்தார். அவனை அன்போடு அணைத்துக் கொண்டார் தாமே புத்தாடைகளை வாங்கி அச்சிறுவனுக்கு அணிவித்து மகிழ்ந்தார். பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்றார். இறைவன் ஏழை பங்காளன் என்பார்கள். இறை நிலைபெற்ற அருளாளர்களும் ஏழை பங்காளர்தாம் என்பதை இந்நிகழ்ச்சியால் அறிகிறோம்.

இயேசு கிறிஸ்து:-

இவ்வுலகில் மக்கள் தங்கள் குற்றங்களைப் பிறர்மீது சாட்டிவிட்டு, தான் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பார்கள். ஆனால் பிறர் நலத்துக்கென்றே திருவவதாரம் செய்த இயேசு பெருமான் கருணை நருத்துளிக்கும் திருக்கண் பார்வையால் அநேக ஆயிரம் மக்களுடைய பாவங்களைப் போக்கி உள்ளார். பிறர் குற்றங்களைத் தமதாக ஏற்று அதற்காக உயிர்நீத்தார்.

அன்பும் அருளும் உருவான இயேசு நாதர் செய்த அற்புதங்கள் அவர்தம் அருள்நிலையை அகில உலகுக்கும் பறை சாற்றிக் கொண்டுள்ளன. எங்கெல்லாம் பாவமாகிய நோய் பரவியிருந்ததோ அங்கெல்லாம் அருளாகிய மருந்து கொடுத்து அப்பாவங்களைக் கழுவினார்.

அவர்தம் மலைப்பிரசங்கம் அனைத்து மக்களுக்கும் நிலைத்து வழிகாட்டும் உபதேசங்களாகும். மக்களேயன்றி விலங்குகள் மீதும் கருணைகொண்டு ஆட்டுக்குட்டியைத் தம் தோள்மீது போட்டுக்கொண்டு பரிவு காட்டினார்.

என்னே அருளாளர்தம் இயல்பு!

இரெட்டியப்பட்டி சுவாமிகள்:-

கருணாமூர்த்தியாகிய இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளுலா செய்து வந்த காலத்தில் திருத்துறைப் பூண்டியை அடுத்த வேளூர் என்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளினார். ஊருக்குள் நுழையும்போதே சுற்றிலும் உள்ள வயல்களில் பயிர்கள் வாடியிருப்பதைக் கண்டார்; உளம் கரைந்தார். இறைவனை நினைந்து உருகி, "இப்பயிர்கள் தழைக்க மழை பொழிந்தால் நலம்", என்று எண்ணினார். மகான்களின் எண்ணம் உடனே செயல்படும் அன்றோ? சுவாமிகள் வருகையை அறிந்து ஊர்மக்கள் அழைக்க வருமுன் எங்கிருந்தோ வந்த கார்மேகம் பலமாக மழை பொழிந்தது. வெள்ளம் பெருக் கெடுத்தோடியது. சிறிது நேரத்தில் அனைத்து நீர்நிலைகளும் நிரம்பிவழிந்தன. கண்டனர் ஊர்மக்கள், சுவாமிகளின் வருகை யால் தான் பல நாட்களாக இல்லாதிருந்த மழை பொழிந்தது என உணர்ந்தனர். உளமுவந்து வணங்கிப் போற்றினர். மழை போதும் என்ற நிலை ஏற்பட்டது. மக்கள் சுவாமிகளை வணங்கி மழை போதும் என்று வேண்டிக்கொண்டனர். சுவாமி களும் கருணை சுரந்தார். மழை நின்றது, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழும் பெருமக்களின் அருள் நிலையை என்னென்று கூறுவது? அவர்களுக்கு ஒப்பாவார் அவரே.

அருளாளர்கள் இறைவனை எங்கும் காண்பர்:-

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் எல்லாப் பொருள் களும் அருளாளர்களுக்கு இறைவனாகவே காட்சி அளிக்கும்.

வடலூர் வள்ளற் பெருமான் வடலூரிலிருந்து மேட்டுக் குப்பம் செல்லும் வழியில் ஒரு ஓடைக்கரையில் அமர்ந்தார். வெயில் நேரம். ஓடைக்கரையில் இருந்த மாமர நிழல் இதமாக இருந்தது. இறைவனே அம்மரமாகவும், மரம்தரும்நிழலாகவும் கனியாகவும் இருப்பதாக உணர்ந்தார். ஓடையிலே உள்ள நீரை அருந்தினுர். அந்நீரின் சுவையை உணர்ந்தார். பின்னர் அத்தண்ணீரில் மலர்ந்திருக்கின்ற அழகு மிக்க நறுமண மலர் களைக் கண்டார் அவையாவும் இறைவனுகவே அவருக்குத் தோற்றம் அளித்தன. மேடையிலே வந்து அமர்ந்தார். அங்கு வீசிய மெல்லிய பூங்காற்றும் இறைவனுகவே தோன்றியது. அக்காற்றில் விளைந்த சுகம், அச்சுகத்திலுறும் பயன் அனைத்துமே இறைவடிவமாகக் கண்டார்.

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளை சுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனை மணந்த மணவாளா மன்றில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே''

என்னும் அருமையான பாடலைப்பாடியருளினுர். நாமும்தான் அவர் கூறிய அனைத்துப் பொருள்களையும் காண்கின்ருேம். நமக்கு அந்த இறை எண்ணம் எழவில்லையே ஏன்? நாம் அருள் நிலையில் உயரவில்லை. உயர்ந்தால் எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும் இறைவனுகவே காணும் பக்குவம் வரும்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்,

''எல்லா உயிர்களையும் ஈசனென்றே உன்னடிமை
பல்காலும் போற்றிப் பணிந்தேன் பராபரமே''

எனவும்,

''சரம் அசரங்கள் யாவும் அவனென்று சத்தியமாகச் சுருதி சொன்ன மொழி'' எனவும் அருளியுள்ளார். திருநாவுக் கரசு சுவாமிகள் **அரியானை** என்று தொடங்கும் தமது திருத் தாண்டகத்துள்'

''கரியானை நான்முகனைக், கனலைக் காற்றைக் கனை கடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானை'' என சிவ பெருமான், விஷ்ணுவாகவும், நான்முகனாகவும், கனலாகவும், காற்றாகவும், கடலாகவும், மலையாகவும் காட்சி அளிக்கும் தன்மையை அருமையாக உணர்த்துகின்றார்.

இது இயற்கை வழிபாடு ஆகும், நக்கீரர் விடியற்காலை எழும் இளங்கதிரவனைக் கண்டதும் முருகனை நினைக்கிறார். அக் காட்சி அவருக்கு முருகன் எதிர் நிற்பதாகவே எண்ணச் செய்கிறது. இதுவே அருளாளர் நிலை.
தாயுமானவர்.

''பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற மலரூடு
நீயே இருத்தி'' என தம் உள்ளம் விரிவடைந்து அருள் நிறைந்து, மலரெடுத்து வழிபாடு ஆற்றவும் இயலாத தன்மையை எடுத்துக் கூறுகின்றார். என்னே அருளாளர் இயல்பு! என்னே அவர்தம் பெருமை!

அருளாற் பெறும் பயன்

அருள்நிலை அடைவதால் பயன் யாது? என ஆராய்வோம்.

ஆணவாதி மலம் நீங்கப் பெறுதல்:-

உயிர்கள் இவ்வுலகிற்கு வரும்போதே ஆணவம், மாயை கன்மம் என்னும் மும்மலங்கள் உயிரோடு பின்னிப்பிணைந்து, உயிர் தன் நிலையை அறியாவண்ணம் மறைத்து நிற்கின்றன. இம்மலங்களைப் போக்கப் பல ஞானிகள் பலவாறு முயன்று இருக்கின்றனர்.

அருள் பெற்ற ஞானிகள் இம்மலங்களினின்று முற்றிலும் விடுபடுவர். அருள்வெள்ளம் உள்ளே உள்ள இந்த மலங்களை முற்றிலும் அடித்துச் சென்று உயிரைத் தூய்மையாக்கிவிடும். நான் எனும் அகந்தையாகிய ஆணவமும், நிலையானது இது, நிலையற்றது இது என உணர இயலாமல் மறைக்கும் மாயையும், சங்கிலித்தொடர் போன்று உயிரை விடாமல் பற்றி நிற்கும்

கன்மமும் அருளாளர்களிடத்தில் ஒன்றும் செய்யா. சேற்றில் வாழும் மீன் உடலில் அச்சேறு சிறிதும் படியாமல் இருப்பது போலவும், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போலவும், கடைந்தெடுத்த வெண்ணெய் தண்ணீரில் கரையாமல் இருப்பது போலவும், இவ்வுலகில் வாழ்ந்தாலும் அருளாளர் மலங்களால் கட்டுண்ணப்பெறுது, தூய்மையாகத் திகழ்வர்.

மன நிறைவு:-

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"

என்பது பழமொழி. ஆனுல் இவ்வுலகில் வாழும் உயிர்கள் தமக்குக் கிடைத்திருப்பதைக் கொண்டு மனநிறைவு கொள்கின்ருர்களா? எனில், அதுதான் இல்லை. எவ்வளவு பெரிய செல்வந்தர்களும் இனியும் செல்வம் சேர்க்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள், இப்பூவுலகம் முழுவதும் ஆட்சி செய்தாலும், கடல்மீதில் தம் ஆணையைச் செலுத்த நினைப்பர்" என்று தாயுமானவர் அருளியுள்ளார். இந்த மனநிறைவின்மை காரணமாகப் பலர் தமக்குக் கிடைத்துள்ளதையும் நன்கு நுகர முடியாது அல்லலுறுகின்றனர். இத்தகைய அல்லல் அருள் ஆள்வார்க்கில்லை.

அல்லல் அருள் ஆள்வார்க்கில்லை:-

"அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலங் கரி."

என்று ஆணித்தரமாகக் கூறுகின்ருர் வள்ளுவர். அருள் நிலையில் உயர்ந்த சான்றோர்களுக்கு அல்லல் என்பது இல்லை, எப்போதும் மனநிறைவுடன் இருப்பர். இந்தப் பெருஞ் செல்வம் கைவரப் பெற்றபின் வேறு என்ன வேண்டும்?

"வந்ததை ஒப்புக் கொள்வாய்—மனமே
வந்ததை ஒப்புக் கொள்வாய்.
வந்ததுவே சிவன் தந்ததென் றறிந்து
சிந்தை மகிழ்ந்தே தேறித் தெளிந்து
வந்ததை ஒப்புக் கொள்வாய்"

என்று ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளிச் செய்கிருர். நாம் எதை நுகர வேண்டுமோ, அது நமக்கு இறையருளால் வருகின்றது என்று மனநிறைவு கொள்ள வேண்டும். சிந்தை

மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத் தெளிந்த அறிவு வேண்டும். சொல்வது எளிது; செய்வது அரிது. இந்த நிலை பெற மனோதிடம் வேண்டும்.

நமக்கு இன்பம் வரும் போது மட்டும் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் துன்பம் வரும் போது வருந்து கின்றோம். மற்றவர்களையும் வருத்துகின்றோம். வள்ளுவர் இவ்வாறு நாம் செய்வதைக் கடிந்துரைக்கின்றார்.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவ தெவன்?
என்று வினவுகின்றார்.

அருள்நிலை அடைந்தவர்கள் இன்பம் வரும் போது மகிழ்வதும் துன்பம் வரும்போது வருந்துவதும் செய்யார். இத்தகைய மனநிறைவு ஆத்ம முன்னேற்றத்திற்கு ஏற்ற சாதனமாகும்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை:-

அருள் நிறைந்த நெஞ்சினர்க்கு எப்போதும் எஞ்ஞான்றும் இன்பமே அன்றி துன்பமில்லை.

ஒரு முறை துரோணர் தருமரையும், துரியோதனனையும் அழைத்து அஸ்தினபுரத்தில் உள்ள நல்லவர் தீயவர்களைக் கணக்கெடுக்கும்படி அனுப்பினர். இருவரும் தனித்தனியே சென்றனர். ஊரைச் சுற்றிப்பார்த்துத் திரும்பினர். ஆசிரியர் இடம் வந்த தருமர், நகரில் நல்லவர் தவிர யாரும் தீயவரே இல்லை என்று கூறினர். சற்றுநேரம் கழித்து வந்த துரியோதனன் நகரில் தீயவர் தவிர யாரும் நல்லவரே இல்லை என்றான். நன்மை நிறைந்த நெஞ்சினராம் தருமருக்கு யாரைக் கண்டாலும் நல்லவர்களாகவே தோன்றியது. தீமையே நிறைந்த நெஞ்சினனாகிய துரியோதனனுக்கு அனைவரும் தீயவ ராகவே காட்சி அளித்தனர்.

நம்முடைய உள்ளத்தின் பிரதிபலிப்பே உலகம் என்பது இதனால் உணரப் படுகின்றது. இறையுணர்வு மிக்கஅருளாளர் கள் நிறை நெஞ்சினராய், பிறரிடம் உள்ள குறைகளைக்காணாது குணங்களையே காண்பவர்களாய் இருப்பர். அதனால் அவர் களுக்கு எஞ்ஞான்றும் இன்பமே அன்றி, துன்பம் இல்லை. பிறர்

கொடுமைகள் செய்தபோதும் அக்கொடுமைகள் அவர்களை ஒன்றும் செய்வதில்லை

தன் மகனை பிரகலாதனுக்கு அளவின்றிப் பல கொடுமைகள் செய்தான் இரணியன். விடம் கொடுத்தான் வாளால் வெட்டினன், மலைமீதிருந்து உருட்டினன். ஆனால் பிரகலாதனே இச்செயல்களால் துன்பம் அடைந்தானல்லன். மாறாக அளவிலாத இன்பப் பெருக்கில் ஆழ்ந்து பொலிந்தான். இறைவன் திருநாமத்தைக் கூறியவாறு அமைதி கண்டான்.

இவ்வாறு பல அருளாளர் செய்திகளை நாம் நம் புராண இதிகாசங்களில் காண்கிறோம். துன்பம் கலவாத இன்பவாழ்வு அருளாளர்கள் அடையும் பெரும்பயன் ஆகும்.

> **"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த**
> **இன்னா வுலகம் புகல்"**

என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வுலகில் இன்ப வாழ்வு வாழும் அருளாளர்கள் எப்போதும் கொடிய நரகத்தில் புகுவது இல்லை.

அருளாளர்கள் பேரின்ப முத்தியை இவ்வுலகிலேயே துய்ப்பர்:

அருளாளர்கள் இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலந்திருப்பதால், அத்திருவடிப் பேற்றினால் வரும் பேரின்பத்தை இவ்வுலகில் வாழும் போதே அனுபவிப்பர்.

சீவன் முத்தர்களாய், மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் இறையடியில் வைத்துத்தம் வயம்இன்றி இறைவன் வயமாய்த் திகழ்கின்ற அருளாளர்கள், தோற்றத்தில் சாதாரண மக்களைப் போல் காணப்படுவர். ஆனால் இவ்வுலக பந்தபாசங்கள் அவர்களை அணுகுவதில்லை. இறைவன் தன்மை அவர்களிடம் படிந்து விடுவதால், இறைவனுடைய பேரின்பத்தை நுகரும் வாய்ப்பினைப் பெறுகின்றார்கள். இதுவே இப்பிறவியினால் பெறவேண்டிய மாபெருஞ் செல்வமாகும்.

பிறவிப் பிணியை வெல்வர்:-

இறைவன் உயிர்களை இவ்வுலகில் அனுப்பியதன் நோக்கம் உயிர்கள் பக்குவப்பட்டுத் தம் திருவடியை வந்து

அடையவேண்டும் என்பதேயாகும். நாம் கோடிக்கணக்கான முறை பிறந்தும் இறந்தும் சகடம்போல் உருண்டு உழல்கிறோம். பசிப்பிணி, உடற்பிணி, பிறவிப்பிணி என, பிணி மூன்று வகைப்படும். பசிப்பிணிக்கு மருந்து உணவு, உடற்பிணிக்கு மருந்து இயற்கை, பிறவிப்பிணிக்கு மருந்து இறைவன் திருவடி. பிறவிப்பிணியைக் கண்டு சாதாரண மக்கள் அஞ்சுவதில்லை. ஆனால், பெரியோர் நடுங்கினர். இனியும் கருவறைக்குள் புகுந்து துயருற இயலாது எனக்கதறித் துடித்தனர். இறைவன் திருவடிகளே தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்தனர்.

அவ்வாறு இறைவனிடம் அடைக்கலம் புகுந்த அருளாளர்கள் இப்பிறவியிலேயே பிறவிக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். காலனும் இவர்களிடம் வர அஞ்சுவான். பிறவியும் இவர்களிடம் வர அஞ்சும். பிறவிப்பிணி அற்றவர்களாகத் திகழ்வர்.

அருள் அடைந்து உய்ந்தோர்:-

அருளடைந்து உய்ந்தோர் அருளடைவதற்கு என்னென்ன துன்பப் பட்டார்கள் என்பதையும், இந்த உலக சுகங்களை எவ்வாறு உதறித் தள்ளி முன்னேறினர் என்பதையும், அவர்களுடைய வரலாற்றையும், அவர்கள் அருளியுள்ள அருட் பாடல்களையும் கண்டால் விளங்கும். அழிந்துபோகும் இவ்வுலகப் பொருட்களை அடைவதற்கே அரும்பாடுபட வேண்டியிருக்க, அடைவதற்கு அருமையான அழியாப் பொருளான அருளைப் பெற அருளாளர்கள் எவ்வளவு பாடுபட்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் அறிவது நம்முடைய ஆன்ம முன்னேற்றத்திற்குச் சாலச் சிறந்த துணையாகும்.

'பரமே உறவென்று துறந்திடில்
பவமானது வெந்து தணிந்திடும்'

—ஆண்டவர் அருட் பாடல்.

நமக்கு உறவு எது? பரம்தான் என்ற நினைவு அருளுடையவருக்கு வரும். அந்நிலையான உறவை அடைய முயல்வர்.

'பக்குவ ஞானிகள் பட்டபாடுகள் பொய்யோ'

—ஆண்டவர் அருட் பாடல்.

ஒவ்வொரு நிலையிலும் ஞானிகள் அரும்பாடு பட்டிருக்கின்றார்கள். நாம் அவற்றை உணர்ந்து கொண்டால், அது

நமக்குப் பாடமாக அமையும், நாம் அந்தந்த நிலைக்குச் செல்கையில் ஞானிகள் அடைந்த உணர்ச்சி நமக்கும் வரும். அதனால் அவர்கள் வரலாறுகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அருள் நாட்டம் கொள்கையில், நம்முள் இருக்கும் இறைவன் வெளிப்பட்டுத் துணையாக இருக்கின்றான். அருளாளர்களுடைய நினைவு, சொல், செயல், அனைத்துக்கும் துணையாக உள்ளான்.

பல சான்றுகள்:-

அருளாளர்கள் தவறுதலாக ஏதாவது கூறினாலும் இறைவன் அதை மெய்யாக்கி விடுவான். இறைவனுக்கு ஏன் இவ்வளவு கருணை? உயிர்கள் அருள் நாட்டம் பெறுவதால் அவனுக்கு என்ன லாபம்? நம்மால் படைக்கப்பட்ட கோடானு கோடி உயிர்களில் ஒரு சிலவாவது நம்மை நாடி வருகின்றனவே என்ற மகிழ்ச்சிதான்.

அருளாளர் வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களைத் தனதாக ஏற்றுக் கொள்கிறான் இறைவன். எனவே நடமாடும் இறைவனாக விளங்குபவர்கள் அருளாளர்கள். இறைவனைக் காணவேண்டும் என்றால், அருளாளர்களைக்கண்டு அவர்களுக்குச் சேவை செய்தால் அதுவே போதும்.

இமயமலையில் ஏறும் ஒருவர் எவ்வளவோ ஆபத்தை எதிர் நோக்கி மிகக் கவனமாகத் தன் உயிரையும் திரணமாக மதித்து, ஏறுவதுபோல், அருள்நாட்டம் உள்ளவர்கள் சூக்கும உணர்வு உள்ளவர்களாகவும், மிக்க ஜாக்கிரதையோடும் இறையருளை அணுவளவும் மறவாதவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் வாழ்வில் நாம் கண்டறிய வேண்டுவது இதுவே.

அருள் நாட்டம் கொண்டவர்களுக்கு இவ்வுலக நாட்டம் கூடாது.

> "பேய் உலக மீதுறவை நீவிடுவையேல்
> உயர்வு பெற்றிடுவை
> மெய்ப் பொருள் அருட்கனி பழுத்தொழுகும் விரைவாக"
>
> —ஆண்டவர் அருட்பாடல்.

இவ்வுலக நாட்டத்தை விட்டால் உயர்நிலை பெறலாம்; உண்மையான அருளாகிய கனி நம்முள் பழுத்து ஒழுகும் என்பது தெளிவு.

யாரை நாம் குருவாக ஏற்றுக் கொள்கின்றோமோ அந்த குருவின் உபதேசத்தை நன்கு கடைப்பிடித்தால், அக்குருவே தெய்வம் எனப் பூரணமாக எண்ணி அவருக்குப் பணிவிடை செய்தால், அருள் நிலையில் நாம் முதிர்ச்சி அடைய முடியும்.

"பாவ மகன்றிட வேதம் முழங்கிட பந்தம் உனக்கினி
ஏனோ, துன்பம் சொந்தமென்றே நினைப்பேனோ
அருள்வந்த தென்றால் விடுவேனோ."

—ஆண்டவர் அருட்பாடல்.

அருள் வந்தால் பாவம் அகன்றுவிடும். அருளாளர்கள் வாக்கு முழுவதும் வேத வாக்காகும். அருள்நிலை வந்தபின், துன்பம் தரும் பந்தத்தை சொந்தமென நினையார். அரும் பாடு பட்டபின்னர் அருள்வந்தால் யாரேனும் விடுவார்களோ?

அருளாளர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? இறைவனோடு அவர்கள் எப்படி இருப்பார்கள்?

"ஏகபோகமாய் நீயும் நானுமாய் இறுகும்வகை
பரமசுகம் அதனை அருள் இடை மருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர்-பெருமாளே!"

—அருணகிரி நாதர்.

இறைவனும் அருளாளர்களும் ஏகமாய்க் கலந்திருப் பார்கள். அந்நிலையில் அருளாளர்களுக்கு இறைவன் ஒருவன் தான் இனிமையுடையவனாக இருப்பான். மற்றவை இனிக்கா.

அருளாளர்களே தொடக்க நிலையில் சிலசமயம் மகிழ்ச்சி உடனும் சிலசமயம் துன்பப்படுவது போன்றும் தம் அருட் பாடல்களில் பாடியிருப்பது ஏன்? அவர்கள் இறைவனைக் காணும்போதும் அவன் இன்பத்தை நுகரும் போதும், மகிழ்ச்சியிலும், இறைவன் இமைப்பொழுது பிரிந்ததுபோல் தோன்றினாலும் அதனை ஆற்ற மாட்டாது கொண்ட வேதனை யினாலும் அவ்வாறு பாடியிருக்கின்றார்கள். எனவே அவர்கள் பாடல்கள் மாறுபட்டன போலத் தோன்றுகின்றன.

குகன்:-

அருள் அடைந்து உய்ந்தோர் முதலில் தன்னோடு வாழும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவர். உலக மக்களுக்கு வழிகாட்டி தருமத்தைப் போதிக்க அவதாரம் செய்தவர் இராமபிரான். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற பழமொழிப்படி தசரதச் சக்கரவர்த்தியின் வாக்கைக் காப்பாற்றக் கானகம் வந்தார்.

கங்கைக் கரையில் வேடுவர் குலத்தலைவனும் குகனைச் சந்தித்தார். அவன் தன் மீது கொண்ட பேரன்பின் முதிர்ச்சியை உணர்ந்தார். தூய்மை செய்யப்பட்ட தேனையும் மீனையும் கொணர்ந்த அவன் உள்ளத்து அன்பை உணர்ந்தார். தன்னுடன் வருவதாகவும், தனக்கு ஆவன செய்து தருவதாகவும் கூறிய அன்புரைகளைச் செவி மடுத்தார். உள்ளம் நெகிழ்ந்தார். உடல் தோற்றத்தில் முரட்டுத்தனம் காணப்பட்டாலும், உள்ளம் அன்பால் நிறைந்த தன்மையை அறிந்தார். கட்டித் தழுவினர். இதுவரை என் தந்தைக்கு நாங்கள் நால்வர் புதல்வர்களாக இருந்தோம். இன்றுமுதல் ஐந்து பேரானோம் என்று அருளிச் செய்தார். அன்பு மழையைப் பொழிந்தான் குகன். அருள் மழையைப் பொழிந்தார் இராமர்.

முதலாழ்வார்கள்:-

நல்வளம் மிகுந்து திகழும் நடுநாட்டின்கண் செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூரில் ஒரு சிறந்த அருட்செயல் நிகழ்ந்தது.

கதிரவன் ஒளி மறைந்து இருள் சூழும் மாலைநேரம். மழை சிறு தூறலாகப் பெய்து கொண்டுள்ளது. குறுகிய சிறு திண்ணையொன்றில் பொய்கையாழ்வார் எனும் வைணவப் பெரியார் நாராயணன் திருவடிமலரில் சிந்தையைப் பதித்த வண்ணம் படுத்துக் கொண்டிருந்தார். அத்தருணத்தில் பூதத்தாழ்வார் எனும் மற்றொரு வைணவப் பெரியார் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து "இருக்க இடம் கிடைக்குமோ" என்று வினவினர். "ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" எனக்கூறிய முன்னவர் எழுந்து அமர்ந்து, அடுத்தவர் தம் அருகில் அமர இடம் கொடுத்தார். அவ்வமயம் பேயாழ்வார்

எனும் மற்றொரு வைணவப் பெரியார் அங்கு வந்து சேர்ந்து 'தங்க இடம் கிடைக்குமோ' என்று வினவினர். அதுகண்ட இருவரும் "ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" எனக் கூறிய வண்ணம் எழுந்து நின்று மூன்று மவரும் தம்முடன் நிற்குமாறு இடம் தந்து உதவினர்.

இவர்கட்குக் கருணை புரியத் திருவுளம் கொண்ட பகவான் இவர்களூடே அருவத்திருமேனி தாங்கி நெருக்கத் தொடங்கினர். இந்த இருட்டில் குளிர் வருத்தும் இத் தருணத்தில் நம்மை நெருக்குபவர் யார் என்று புரியவில்லையே என மூவரும் கருதினர். திருவிளக்கேற்றி நெருக்குபவர் யார் என அறிய முற்பட்டனர். உடனே பொய்கையாழ்வார்

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக-செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று"

என அருட் பாசுரம் ஒன்றைத் திருவாய் மலர்ந்தருளினர்.

உடனே பூதத்தாழ்வார்,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியாய்-நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்ற அருட் பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். அன்பெனும் தகளியைப் பயன்படுத்தி ஞானச சுடர் விளக்கேற்றிய உடனே பெருமான் தம் அருட்டிருமேனி காட்டி அற்புதத் திருக்காட்சி தந்தருளினன். உடனே பேயாழ்வார்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைகண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று"

என்னும் அருட்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். மூவரும் இறைவனின் அருட்காட்சி கண்டு ஆனந்த பரவசத் தாழ்ந்து பேரின்பம் பெருகு நிலையெய்தித் திகழ்ந்தனர். தாம் தொடங்கிய நூலை அந்தாதியாகப் பாடி முடித்தனர்.

இவர்கள் மூவரும் முதலாழ்வார்கள் எனப்போற்றப் பெறுகின்றனர்.

திலகவதியார்

மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகள் மணம் பரப்பி மகிழ் வூட்டும். சுவை நிறைந்த நறுங்கனிகள் அகங்குளிரச் சுவை யூட்டும், அருள் நிறைந்த அருளாளர் அருள்பரப்பி அகங் குழைவர். மலரைக் காணுமலேயே அது மலர்ந்திருப்பதை உணர முடிகின்றது. பழத்தை உண்ணுமலேயே நாவில் நீர் சுரக்கிறது. அருளாளர்களைக் காணுவிடினும் அவர் அருள் நம் உள்ளத்தை ஈர்க்கும்.

இறைவன் ஒரு சிறந்த அருளாளரைக் கொண்டு தலை சிறந்த மகான்களை உருவாக்குவார். வடநாட்டில் தோன்றிய இராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்ற அருளாளர் உலகம் புகழும் உத்தம சீடராம் விவேகாநந்தரை உருவாக்கினுர். தென்தமிழ் நாட்டில் சைவசமய குரவர்களில் இருவரை ஈன்றெடுத்துப் புகழ்கொண்டது திருமுனைப்பாடி நாடு.

தோற்றம்:-

நீர்வளமும் நிலவளமும் அருள்வளமும் பொருள்வளமும் கொழிக்கின்ற அந்நாட்டில் திருவாமூர்என்னும் திருத்தலத்தில் இல்லறமாம் நல்லறம் பேணி அருட்பயிர் வளர்த்துவந்த புகழனுர் மாதினியார் என்ற பெற்ருேர் ஈன்றெடுத்த இரு முத்துக்களில் மூத்தவர் திலகவதியார். இளையவர் மருள் நீக்கியார்.

இறையருள் நாட்டம்:-

பெற்ருேர்களைப் பின்பற்றியே குழந்தைகள் வாழ் வார்கள். தம் இல்லம் நாடிவரும் அடியார் பெருமக்களை இறைவனுகவே எண்ணி அவர்களுக்குத் திருவடி பூசை ஆற்றி உள்நெகிழ்ந்த அன்போடு அறுசுவை உணவூட்டி உபசரிக்கும் பெற்ருேராம் புகழனுர்க்கும் மாதினியார்க்கும் அருள்மகவாகப் பிறந்த அம்மையார், இறையருள் நாட்டம் மிக்கவர்களாகத் திகழ்ந்ததில் வியப்பேதும் இல்லை. தம் வாழ்க்கையில் எத்தகைய இடையூறு ஏற்பட்டாலும் இறைவனை நாடி

அவனிடம் முறையிட்டு வழிகாண்பர் புகழனர். திலகவதியார் தம் பிஞ்சு உள்ளத்தில் இந்த வழி ஆழமாகப் பதிந்துவிட்டது.

தியாகம்:-

பெற்ரேரும் அவர்களால் நிச்சயிக்கப் பெற்ற வருங் காலக் கணவனும் கலிப்பகையாரும் சிவனடி சேர்ந்த பின்னரும் தம் ஒரே தம்பியார், ஒப்பற்ற மணி விளக்கு, சைவசமயம் செய்த நற்றவப் பயனல் உதித்தவர், வாழவேண்டும் என்பதற் காக உயிர் தாங்கி இருந்தார் திலகவதியார்.

தம்பியார் புறச்சமயம் புகல்:-

கூர்த்த மதியுடைய மருள் நீக்கியார், திராத கல்விப் பசியினல் பலநூல்களைக் கற்ருர்; ஆய்ந்தார். முன்னைவினையின் காரணமாகவும், நம்பன் அருளாமையாலும், கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகினர்.

தமக்கையாரின் ஏக்கம்:

வேற்றுச்சமயம் புகுந்து தலைமைப்பதவி ஏற்றுச் சீரும் சிறப்புமாக விளங்கும் தம்பியைப் பற்றிக் கேள்வியுற்று, மனம் பதைத்தார் திலகவதியார். ஏன்? நம்முன்னேர் வழிவழியாகக் கடைப்பிடித்து உய்ந்த ஒப்பற்ற சைவ நெறியை விட்டுத்தம்பி இவ்வாறு புறச்சமயம் புகுந்தானே என்ற ஏக்கம். அந்த ஏக்கத்தை யாரிடம் கூறினர் திலகவதியார்? இங்குதான் திலகவதியாரின்இறைப்பற்று, அருள்நாட்டம், இறைவனுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு இவை புலனகின்றன.

குறைகளைக் கூறவேண்டிய இடம்:-

நம்வாழ்வில் ஏதேனும் ஒருசிக்கல் நேரின் உடனே அதை நமக்கு நெருங்கிய நண்பர்களிடம் கூறிவிடவேண்டும் என்று எண்ணுகின்ருேம். அவர்கள் கூறும் ஆறுதல் மொழி கேட்டு மன அமைதி உறுகின்ருேம். ஆனல் அவர்களால் நம் சிக்கலைத் தீர்க்க முடியுமா எனில், சில சமயம் இறையருள் இருப்பின் முடியும். பலசமயம் முடியாது பின்யாரால்முடியும்? இறைவன் ஒருவனல்தான் நம் சிக்கலைத் தீர்க்க முடியும். இதை நன்கு உணர்ந்திருந்தனர் அருளாளர்கள். எத்தகைய இடுக்கண் நேர்ந்தாலும் இறைவனிடம் முறையிட்டனர்; தீர்வுகண்டனர்.

தம்தப்பியார் மீண்டும் சைவசமயத்திற்கு வரவேண்டும் என்று எண்ணினர் திலகவதியார். நேரே தம்பியாரிடம் சென்று அவரை அழைத்திருக்கலாம். அல்லது தக்கார் சிலரை அனுப்பி அவருக்கு அறிவுரைகூறச் செய்திருக்கலாம். அம்மையார் இந்த வழிகள் எதையும் நாடவில்லை. அவனருள் இன்றி அணுவும் அசையாது என்னும் உண்மையை நன்று உணர்ந்த அம்மையார் இறைவனையே நாடினர்;

நித்தலும் எம்பிரானும் சிவன் கோயில் புகுந்து, புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி, புகழ்ந்துபாடி, தலையாரக் கும்பிட்டு, கூத்துமாடி, 'சங்கரா ஜெய போற்றி போற்றி' என்று உளமார வழிபாடு செய்வார் அம்மையார். இறுதியில், "என்னை ஆண்டருளும் பெருமான் நீர் என்பது உண்மையாகில் அடியேன் பின்வந்தவனை ஈண்டுவினைப் பரசமயக் குழி நின்றும் எடுத்தாள வேண்டும்" என விண்ணப்பம் செய்வார் அம்மையார்.

சிவபெருமான் அருள் புரிந்தமை:-

அனைத்து அண்டங்களிலும் உள்ள கோடானுகோடி உயிர்களின் தேவைகளை அறிந்து அருள் செய்து பரிபாலித்து வரும் இறைவன் அம்மையாரின் உருக்கமான, உறுதியான வேண்டுகோளைக் கேட்டு அவர்களுக்கு அருள் பாலிக்கத் திருவுளம்கொண்டார்.

அம்மையாரின் அருள்வளத்தை என்னென்பது? சிவபெருமான் அம்மையாரின் கனவில் தோன்றினர். இவ்விடத்தில் அம்மையாரின் அருள் நிலையைச் சேக்கிழார் பெருமான், "மன்னு தபோதனியார்", என்று கூறுகின்றார். நிலையான தவத்தைச் செய்தவர்கள் என்பது அதன் பொருள். எந்தக் காட்டிற்குச் சென்று தவம் செய்தார்கள்? வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். இல்லற தர்மத்தில் பெண்கள்எவ்வாறு வாழ வேண்டுமோ அவ்வாறு வாழ்ந்தார்கள். கேவலம் உடலிச்சையைப் பெரிதாக எண்ணாமல், அருள் நிலையை நாடி வாழ்ந்தார்கள். அதுவே தவமாயிற்று.

சிவபெருமான் கனவின் கண் எழுந்தருளி, அருள் செய்வதென்றால், எத்தகைய பக்குவம் அம்மையார் பெற்றிருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரத்தக்க தொன்றாகும்.

"உன்னுடைய மனக்கவலை ஒழி நீ" என்று அபயம் கொடுத்து, "உன் உடன்பிறந்தான் முன்னமே முனியாகி எனை அடையத் தவம் முயன்ருன்; அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வன்" என்று அருளிச் செய்தார், சிவபெருமான்.

இறைவனின் அருட்காட்சியைக் கனவின்கண் கண்டதையும், அவர் அருளிச் செய்ததையும் எண்ணி **அனலிடைப் பட்ட மெழுகு போல** அகங்குழைந்து மெய்ம்மயிர் பொடிப்ப, கண்ணீர் வார சிவநாமத்தை உச்சரித்த வண்ணம்இறைவனின் பெருங்கருணையை நினைந்து நினைந்து தம் திருப்பணிகளைச் செய்யச் சென்ருர்.

தம்பியார் தமக்கையை நாடல்:-

இறைவன் ஆணைப்படி சூலைநோய் தம்பியாரை அடைந்தது. எவ்வகையிலும் எள்ளளவும் குறையாமல் உயிரை உலுக்கி எடுத்தது. இனி உயிர் பிழையோம் என்றுணர்ந்த தம்பியார் தமக்கையை நாடிச் சென்ருர்.

தாங்காத சூலைநோயினுல் வருந்தி வந்த தம்பியார், தம் தமக்கையாராம் திலகவதியாரின் திருவடிகளில் வணங்கி, "நந்தமது குலம்செய்த நற்றவத்தின் பயன் அனையீர்! இந்த உடல் கொடுஞ் சூலைக்கிடைந்தடைந்தேன். இனி மயங்காது உய்ந்து **கரை ஏறும் நெறி உரைத்தருளும்", என விண்ணப்** பித்தார்.

அம்மையார் அருளிய திறம்:-

நம்குலஞ்செய்த நல்தவத்தின்பயன் எனமருள்நீக்கியார் திருவாக்கால் திலகவதி அம்மையாரின் சிறப்பினை உணர்த்து கின்ருர் சேக்கிழார் பெருமான்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் அருள்உடையவராக இருந்தால் அக்குடும்பத்தில் உள்ள மற்றவர்களையும் நல்வழிக்கீர்ப்பார்கள் என்பது அம்மையாரின் செயல் மூலம் நாம் அறிகிருேம். உண்மை நெறியாது என அறியாது மயங்கிக் கிடக்கின்றேன். இனியும் மயங்காமல் பிறவித்துன்பத்திலும், சூலைநோய்த் துன்பத்திலும் இருந்து உய்ந்து கரையேற ஒரு வழி கூறுங்கள் என்று பணிந்தேத்தினர் தம்பி.

இங்கு உறவு இல்லை. குரு சீட நிலை இருக்கின்றது. தன்னை முற்றிலும் அழித்துக் கொண்டு உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருநாதருக்கு ஒப்புக் கொடுக்கும் உண்மைச் சீடராக மருள் நீக்கியார் விளங்குகின்றார்.

அருள் நிலையில் மிக உயர்ந்து விளங்கும் அம்மையார், இறைவன் அருளிச்செய்தமையும், இவர்தம் மனம் திருந்திய நிலைமையையும் அறிந்து **"ஆளுடைய தம்பெருமான் அருள் நினைந்து கை தொழுதார்"**.

முன்னைத் தவப்பயனால் ஒரு சிலர்க்கு ஒருசில சித்துக்கள் கை கூடும். அதைப் பெரிதாக எண்ணி தம்மைத்தாமே பெருமைப்படுத்திக் கொள்வர் நிறைமதி இல்லாதவர்.

அருள் நிலையில் மிக உயர்ந்து தம் செயலற்று **'எல்லாம் இறைவன் செயல்'** என்ற எண்ணத்துடன் இவ்வுலகில் வாழும் அருளாளர்கள் எதைச் செய்தாலும் இறையருளை எண்ணிச் செய்வர். அம்மையாரும் தம்பியார் புறச் சமயத்தினின்று மீண்டுவந்தது இறைவன் அருளால் எனும் உண்மையை இனிது உணர்ந்தவராய் சிவபெருமானை மனத்துள் இருத்தி வழிபட்ட வண்ணம் தம்பியாரை நோக்கி, **"மூளும் அருந்துயர் உழந்தீர் எழுந்திரீர்"** என்று திருவாய் மலர்ந்தார்கள்,

தம்பீ, எழுந்திரு! என்றுகூறியிருந்தால் பற்றும் பாசமும் பிணைந்திருக்கும். அஃதன்றி துயர்உழந்தீர், எழுந்திரீர் என்று உபதேசித்தமை உலக மக்களையும் நோக்கிக் கூறியதாக அமைந்துள்ளது! **'எழுந்திரீர்'** என்ற அருளுரை கேட்டு எழுந்து தொழுதார் மருள்நீக்கியார். அம்மையார் அவரை 'நோக்கி, "கற்றை வேணியர் அருளே காணும் இது; **கழலடைந்தோர் பற்றறுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்"**. எனப் பணித்தார், இவ்வருட் கட்டளையைச் செவிமடுத்த தம்பியார் அவர் அருள் கிடைத்ததென எண்ணி, அம்மையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். தவத்தில் சிறந்துவிளங்கும் அம்மையார் சிவபெருமானின் பேரருளை நினைத்து, புறச்சமயத்தில் இருந்து வந்த மருள்நீக்கியாரைச் சைவ சமயத்தில் சேரச் செய்து சைவராக விளங்கவைக்க எண்ணி, திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக் கொடுத்தார்.

புறச்சமயம் புகுந்தவர்களை மீண்டும் நம் மதத்தில்

சேர்த்துக் கொள்வது எப்படி என்ற அருள் வழியை அன்றே நம் அம்மையார் செய்து காட்டியிருப்பது அறிந்து போற்றற் குரியது. **திருநீறு உடல் தூய்மையோடு உள்ளத்தூய்மையும் செய்யும் வல்லமை வாய்ந்தது** என்ற உண்மை அறியத்தக்கது.

சைவ சமயத்தில் தலைசிறந்தவர்களாகத் திகழும் நால்வர்களுள் ஒருவராக விளங்கப்போகும் தம்பியை எவ்வாறு எல்லாம் திலகவதி அம்மையார் ஆட்கொண்டு வழிப்படுத்தி இருக்கின்றார்கள் என்பதை எண்ணுந்தோறும் உள்ளம் உருகு கின்றது அன்றோ?

முதலில் இறைவனிடம் வேண்டி சூலைநோய் தந்து ஆட்கொள்ளச் செய்தார். பின்னர் தம்மிடம் வந்த தம்பியாரை 'எழுந்திரீர்' என்று கூறி மயக்கத்தில் இருந்து நீக்கினார். **''இறைவனைப் பணிந்து பணி செய்வீர்''** என, இனி செய்ய வேண்டிய பணிகளைக் கட்டளையிட்டார். சைவராக மாற்றத் திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார்.

இவ்வாறு தம் தமக்கையாரால் வழிப்படுத்தப்பட்ட நாவுக்கரசர் பெருமானின் அருள் தன்மையைக் காண்போம்.

திருநாவுக்கரசர்

திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்பெருவாழ்வு வந்ததெனப் பணிந்தேற்று உருவார அணிந்து உய்ந்த பெருந் தகையார் அருள்நிலையில் எவ்வாறு உயர்ந்து விளங்கினார் என்பதைக் காண்போம்.

தமக்கையாரிடம் உபதேசம் பெற்று வீரட்டானத்தில் உள்ளே அமர்ந்திருக்கும் சிவபெருமானிடம் சென்று பொங்கு புனல் கண்கள் பொழிந்திழியப் புவிமீது புரண்டயர்ந்தார். **''கூற்றாயினவாறு''** என்று தொடங்கும் திருப்பதிகம் உலகில் வரும் துயரம் போமாறு சிவபிரான் மீது பாடியருளினார்.

கற்பூரத்தருகே நெருப்பைக் கொண்டு சென்றால் உடனே தீப்பற்றுவது போல, பல பிறவிகளாய் அருளில் பழுத்துக் கனிந்த இவர் உள்ளம் பாகாய் உருகியது. தன் தவறை

உணர்ந்து மனங் கசிந்தார்' இறைவன் அருளால் செந்தமிழ்த் தொடை பாடிய பான்மையினுல் '**நாவுக்கரசெனும் நன்னுமம் உலகேழினும் நின்று நிலைபெறுக**' என இறைவனின் அருள் வாக்கு அனைவரும் கேட்ப வானிடை ஒலித்தது.

அமணர் சூழ்ச்சி:-

தம் சமயத்தை விட்டுச் சென்றதால் சினமும் அச்சமும் கொண்ட அமணர் பல்லவ வேந்தனிடம் கூறி நாவுக்கரசரை அழைத்து வருமாறு ஆணையிட்டனர். தன்னை அழைக்க வந்தவர்களை நோக்கி, "**நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், நரகத்திலிடர்ப்படோம், நடலையில்லோம், ஏமாப் போம், பிணியறியோம், பணிவோமல்லோம், இன்பமே எந் நாளும் துன்பமில்லை**" என முழங்கினர் நாவரசர்.

எவ்வளவு உறுதிப்பாடு! அருளாளர்களுக்கு எத்தகைய துன்பமும் இல்லை என்பதும் அவர்கள் இறைவனைத் தவிர யாருக்கும் அஞ்ச மாட்டார்கள் என்பதும் நாவுக்கரசர் வாயிலாக அறிகின்றோம்.

அமணர் சூழ்ச்சியால் நீற்றறையில் இடப் பெற்றார். சில நாள் கழித்துத் திறந்து பார்க்கையில், ஒளிவீசும் திருமேனி யுடன், அணிந்திருந்த மலர்மாலையும், திருநீறும், ருத்திராக்க மும் சற்றும் கலையாமல் அழகுடன் விளங்கும் காட்சியைக் கண்டு அனைவரும் வியந்தனர். தாம் அடைந்த இன்பத்தையும் எங்கு எவ்வாறு இருந்தார் என்பதையும் "**மாசில் வீணையும்**" என்று தொடங்கும் பாடல் மூலம் அருமையாக விளக்குகின்றார். நாவரசர் இறைவன் திருவடி நீழலில் இனிது அமர்ந் திருந்ததாகக் கூறுகின்றார்.

இறைவன் திருவடி நீழலில் அமர்ந்து பேரின்பம் துய்க்கும் அருளாளர்களை இவ்வுலகத் துன்பங்கள் ஏதும் செய்யா என்பதற்கு இதைவிட என்ன சான்று தரமுடியும்? தம் செயல் அற்று இறைவன் செயலாகவே இருந்தார் நாவுக்கரசர். நமக்கு அவர்கள் காட்டிய பெரிய வழி இதுதான்.

இறைவன் அருளால் துன்பங்களை வென்றமை -

பின்னர் அமணர் நஞ்சு அளித்தனர். அதை உண்டும் இறைவன் திருவருளால் நாவுக்கரசர் நலமுடன் விளங்கினர்.

அமணர் மதகளிற்றை அனுப்பினர். அதுகண்ட வாகீசர் **"அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை"** என அருட்பதிகம் பாடினர். களிறு அவரை வணங்கித் திரும்பிச் சென்றது. பின்னர் இவரை அமணர்கள் கல்லில் கட்டி நடுக்கடலில் தள்ளினர்.

"கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்,
நற்றுணை யாவது நமச்சி வாயவே" என்று இறைவன் திருநாமத்தைக் கூறிய வண்ணம் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலில் மிதந்து கரை சேர்ந்தனர். இவை அனைத்தும் நாவுக்கரசருடைய உயர்நிலையை உலகறியச் செய்ய இறைவன் புரிந்த அருள் விளையாடல்களே யாகும்.

எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்து விட்டேன் என்று உதட்டளவில் கூறி, ஏதேனும் இடர்வரின் அழுது புலம்பி அரற்றும் மக்களுக்கு மிக மிகத் தூய்மையான இன்பமான எளிய வழியைக் காட்டியிருக்கின்றார் நாவுக்கரசர்.

"குற்றம் புரிதல் எனக்கியல்பே, குணமாக் கொள்ளல் உனக்கியல்பே" - என்று வடலூர் வள்ளல் அருளுகின்றார். உயிர்கள் குற்றம் செய்யும் இயல்புடையன. ஆனால் அருளாளர்கள் தாம் முன்னர் அறியாது செய்த குற்றங்களை எண்ணி எண்ணி மனங்கரைவர்.

தம்குற்றம் நினைந்து கரைந்து உருகல்:-

நம்பர் அருளாமையினால் புறச்சமயம் புகுந்த தம் குற்றத்தை எண்ணியும், சூலைநோய் கொடுத்துத் தம்மை தடுத்தாட் கொண்ட இறைவனின் பெருங்கருணையை எண்ணியும் பல இடங்களில் கசிந்து கரைந்து உருகுகின்றார். நாவுக்கரசர். தம் அருட்பாடல்களில் மனம் விட்டுத் தம் குற்றத்தைக் கூறி வருந்துகின்றார். அருளாளர் செயல் இதுவே. நாம் செய்த குற்றங்களைக் குற்றங்களாக எண்ணவும் மாட்டோம். பிறர் அதைச் சுட்டிக் காட்டினாலும் சினங் கொள்வோம். ஆனால் அருளாளர்கள் தாம்செய்த குற்றங்களை மனம் விட்டுக் கூறி வருந்துவர்.

"பொய் வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறியில்
சமணீசர் புறத்துறையாம் அவ்வாழ் குழியின் கண்
விழுந்தெழுமா றறியாது மயங்கி அவம் புரிவேன்"

என்று இன்னே பலவாகத் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்கு மனம் வருந்துகின்றார் வாகீசர்.

இறைவனிடம் இடபமும் சூலமும் இலச்சினையாகப் பொறிக்கும்படி வேண்டுகின்றார். இறைவன் அருளால் அவ்வாறே ஒரு சிவபூதம் யாரும் காணாமல் வந்து பொறித்துச் சென்றது. வேண்டுவோர் வேண்டுவன ஈயும் பெருமான் அன்றோ இறைவன்?

திருவடி தீட்சை.

தீராக் காதலால் உள்ளம் நீராய் உருகி திருச்சத்தி முற்றம் என்னும் திருப்பதியில் சிவபெருமானிடம் திருவடி தீட்சை செய்தருளுமாறு வேண்டினர் வாகீசர். ஏன் திருவடி தீட்சை வேண்டும் என்பதற்கும் காரணம் கூறுகின்றார். சிவ பெருமானின் திருவடிகள் சிரமேல் இருந்தால் எமன் வர மாட்டானாம். நாவுக்கரசர் தம் செந்தமிழ்ப் பாடலில் **''கூற்றம் வந்து குமைப்பதன் முன் பூவாரடிகள் என்றலைமேல் பொறித்து வைப்பாய்''** என்று போற்றுகின்றார்.

இவரது வேட்கையை அறிந்த சிவபெருமான் **''நல்லூரில் வா! வா!''** என்று அருள் செய்தார். உள்ளம் களி துளும்ப உயர் அருளைப் போற்றி செய்து திருநல்லூர் அடைந்தார் நாவேந்தர். கூறியவாறே தம் திருவடிகளை நாவுக்கரசரின் புனிதமார் சிரமேல் சூட்டினார் இறைவர். அப்போது வாகீசர் அடைந்த ஆனந்தத்திற் களவுண்டோ? இதோ அவர் அருளிய அருமை சான்ற செந்தமிழ்ப் பாடல்.

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம் பெருமானார் நல்ல வாறே.

தன்னை நினைந்துருகும் அடியார்களுக்குத் துன்பம் தந்து நைய வைப்பானும் இறைவன். இன்றும் கடவுளை நினைந்துருகும் சிலர் துன்பப் படுவதை நாம் காண்கின்றோம். காரணம் விளங்காமல் இருந்தோம். நாவுக்கரசர் காரணம் கூறுகின்றார்.

தீவினைகள் அருளாளர்களை விட்டு நீங்கவே துன்பம் தருகின்றானும் இறைவன். இறைவன் திருவடி தம் சிரமீது சூட்டப்பட்டதும், '**தண்**' என்று குளிர்ந்திருப்பதை உணர்ந்தார். எவ்வாறு திருவடிகள் நனைந்தன என்பதற்குக் காரணம் கூறுகின்றார். தேவர்கள் தங்கள் சிரமேற் சூடியுள்ள மணி மகுடங்களைச் சுற்றிலும் மலர்மாலை அணிந்துள்ளனர். அவர்கள் சிவபெருமானை வணங்கும்போது அம்மலர் மாலைகளில் உள்ள தேன் சிந்தி நனைந்துவிட்டனபோல் இறைவனின் திருவடிகள் இலங்குகின்றன. ஆகா! என்ன அருமையான விளக்கம்.

அருட் செயல்கள்:-

இத்தகைய அருளாளராம் நாவுக்கரசர், இறையருளால் ஆற்றிய அற்புத அருட்செயல்கள் பலப்பல. திங்களூரில் தம்மையே குருவாக ஏற்று வாழ்ந்து வந்த அப்பூதி அடிகளின் மூத்த மகன் விடந்தீண்டி இறந்தபோது எழுப்பித் தந்தார். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று வறுமையைப் போக்கி, அடியார் குழாங்களுக்குச் சோறளித்தார்.

திருமறைக் காட்டில் வேதங்களால் மூடப்பெற்றிருந்த திருக்கோயில் கதவுகளைத் திறக்கப் பாடினார். இறைவன் அருளால் கதவுகள் திறந்தன. பிறகு திருஞானசம்பந்தர் கதவுகள் மூடிக்கொள்ளப் பாடினார். கதவுகள் மூடிக் கொண்டன. அதுமுதல் அக்கதவுகள் மூடவும் திறக்கவும் வழக்கம் ஏற்பட்டது.

இறைபணி ஆற்றல்:-

இறைவன் உறை பதி பலவும் சென்று இடையறா அன்பு பொங்க அருளூறும் செஞ்சொற் கவிதைகள் புனைந்து அருளுலா செய்து வந்ததுடன், திருக் கையில் உழவாரப் படைஏந்தி ஒப்பிலியாம் இறைவன் உறை திருக்கோயில்களில் புல், பூண்டு, முள், கல் முதலியவற்றை நீக்கித் தூய்மை செய்து, அடியவரும் அவ்வாறே செய்ய ஊக்கி வழிகாட்டி வந்தார். திருக்கோயில் களில் திருநந்தவனம் உண்டாக்கினார். இறைவன் திருவுலா வரும் மாடவீதிகளைத் தூய்மை செய்தார். தமக்கையார் பணித்தபடி இறைவன் பணியினைத் திரிகரணங்களாலும் இனிது ஆற்றி வந்தார்.

அருட் பொலிவு:-

இவரது அருட் கனிவுசால் திருமேனியின் அருளழகை, பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டக் கவி புனைந்த சேக்கிழார்

பெருமான் பல இடங்களில் மிக அழகாகச் செஞ்சொற் கவிதைகளாம் சொல்லோவியங்களால் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

''தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே''

தூய பொன் போன்ற அருளொளி வீசும் திருமேனியில் திரு வெண்ணீறும் உருத்திராக்கமும் காட்சியளிக்கின்றன. சிவ பெருமான் திருவடிகளைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இருக்கும் சிந்தையும், இறைவனை நினைந்து உருகி உருகிப் பாய்ந்து வருகின்ற அன்பு வெள்ளம் போன்று கண்ணீர் அருவி பொழியும் திருக்கண்களும், இறைவன் திருப்புகழைச் செஞ் சொற் கவிதைகளாக, புனிதம் மிக்க தேவாரத் திருப்பதிகங் களாகப் பாடிக்கொண்டே இருக்கும் செம்மையான திருவாயும் உடையவர் திருவதிகை என்னும் திருத்தலத்தின் வீதியுள்ளே புகுந்தார் என்று மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

இன்னொரு சொல்லோவியத்தைப் பார்ப்போமா?

''மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

இறைவனின் பெருங்கருணையை எண்ணிஎண்ணிப் பொழிகின்ற கண்ணீர் மார்பை நனைத்து விட்டதாம். அத்துடன் நிற்க வில்லையாம் கண்ணீர் மழை. நாவுக்கரசரின் திருமேனியையே நனைத்து விட்டதாம். அருளாளர்கள் இறையருளை எண்ணி எண்ணி உருகுகின்ற உருக்கத்தை என்னென்று அளவிட்டு உரைக்க இயலும்? தீந்தமிழ்த் தொடை பாடும் திருவாய், செம்மையான இறைவன் பொற்றாமரைத் திருவடிகளையே சார்ந்திருக்கின்ற திருமனம், நான் ஒரு வேலைக்காரன், இறை வனின் பணியாள் என்று பறை சாற்றுவதைப் போன்று கையில் உழவாரப் படை இத்தனையும் கொண்ட கோலமே

நாவுக்கரசரின் அருள் திருக்கோலம். பார்வாழ, திருக்கோயில்களிலும், இறைவன் பவனிவரும் திருவீதிகளிலும் உழவாரப் பணி செய்தார். பணிவுடன் செய்வது பணியாகும். இறைவனைப் பணிந்து போற்றிப் பரவிய வண்ணம் பணிசெய்து கொண்டே செல்வார் என்று சேக்கிழார் பெருமான் அருளுகின்றார்.

அருட் கடலும் அன்புக் கடலும்:-

இறைவனிடத்தில் உண்மையான அன்பு கொண்ட அருளாளர்கள் இவர்களைப் போன்ற அருளாளர்களைக் கண்டால் பெருமகிழ்ச்சி யுறுவர். ஒருவர் மற்றவருக்குப் பணி செய்ய விரும்புவர் என்ற செய்தியைத் திருநாவுக்கரசர் பெருமானும், திருஞானசம்பந்தப் பெருமானும் சந்தித்த காட்சியில் படம் பிடித்துக் காட்டுகின்றார் சேக்கிழார். அருட்பெருகு தனிக்கடலும் அன்பு செறி கடலுமாம் எனவும்; சைவ நெறி தான்பெற்ற புண்ணியக் கண் இரண்டெனவும்; சிவன் அருளும், உலகம் ஈன்ற பார்வதியின் அருளும் எனவும் தெருட்கலை ஞானக்கன்றும், திருநாவுக்கரசரும் திருக்கோயில் புகுந்தனர் என்ற விளக்கம் அருளுடையார் பெருஞ்செயலைக் குறிப்பதாகும்.

தன்னடக்கம்:-

அருளுடையார் தம்மை எப்போதும் பெருமைப்படுத்திக் கொள்வதில்லை என்பதை நாவரசர் வரலாற்றில் காண்கிறோம். அப்பூதி அடிகளின் திருமனை வாயிலில் நின்ற வாகீசர் அப்பூதியாரை நோக்கி, "ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர் வைத்த ஈறில் பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என் கொல்," என்று வினவினார்.

இம்மொழி கேட்டுச் சினங் கொண்ட அப்பூதி அடிகள் "திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் தம் திருப்பேரோ வேறொருபேர்? இவ்வாறு கூறும் நீர் யார்?" என்று சினந்து வினவினார்.

தம்மீது அளவு கடந்த பக்திகொண்ட அப்பூதி அடிகளின் உரைகேட்ட நாவுக்கரசர் எவ்வாறு தம்மை அறிமுகம் செய்து கொள்கின்றார் என்பதைப் பார்க்க வேண்டும். பிறதுறை

யினின்றேற அருளுபெருஞ் சூலேயினுல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த, தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்,'' என்ருர். தான் என்ற முனேப்பு சிறிதுமின்றித் தன்னே முற்றிலும் கரைத்துக் கொண்ட பேரருளே இங்குக் காண்கின்ருேம். அருளாளர் நிலே இதுவே.

குருவாய் வந்த தமக்கையாராம் திலகவதி அம்மையார் நாவுக்கரசருக்கு இட்ட பணி யாது? "கழலடைந்தோர் பற்றறுப்பார் தமைப் பணிந்து பணி செய்வீர்'' எனப் பணித்தார். அக் கட்டளேயைத் தம் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது ஆற்றி வந்தார் நாவுக்கரசர். அதைத்தம் திருவாக்காலே அருளுகின்ருர்.

நங்க, டம்பனேப், பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனேயும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

என்பது அவர்தம் திருவாக்கு. இறைவனுடைய பணி என்ன என்பதையும், தம்பணி என்ன என்பதையும் மிக அழகாக எடுத்துக் கூறி நம்மை வழிப்படுத்தும் பெருந்தகையின் அடி பணிந்து பணி செய்து உய்வோமாக!

மாணிக்கவாசகர்

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது ஆன்ருேர் வாக்கு. என்பையும் உருக்கும் இயல்புடைய அருட்பாடல்களே அருளிச்செய்து, தமிழ்மக்கள் மட்டுமல்லாமல் வேற்று நாட்டாரும் அகங்குழைந்து உருகிப் போற்றும் அளவிற்கு அருள்நிலேயில் உயர்ந்தவர் மாணிக்க வாசகர்.

தோற்றம்:-

திருவாதவூர் என்னும் திருத்தலத்தில் ஆமாத்தியர் குலத்தில் அவதரித்தவர் மணிவாசகப் பெருந்தகையார். முன்னேத் தவப்பயனுல் கூர்த்த மதியுடையவராய் விளங்கினுர். அரிமர்த்தன பாண்டியன் அவையில் முதல் அமைச்சராகப் பணியாற்றி வந்தார். மதுரை மாநகரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சொக்க நாதப் பெருமானிடத்தும் அங்கயற் கண்ணியம்மையிடத்தும் ஆராப்பேரன்பு கொண்டவராயினர்.

இறை திருவடிகளை இமைப்பொழுதும் நீங்காமல் பேரன்புடன் நினைந்து உருகித் தம் இதயத்தில் பதித்து வாழ்ந்தார். நன்கு அருளில் பழுத்துப் பக்குவம் அடைந்தது அவர் உள்ளம். தமக்கும் இறைவனுக்கும் உள்ளதொடர்பை அவர் யாரிடமும் எப்போதும் கூறியதில்லை.

தம் கடமையிலிருந்து சிறிதளவும் வழுவாமல், அதே சமயத்தில் சித்தத்தைச் சிவன்பால் வைத்து நிதமும்போற்றி செய்தவராய் வாழ்ந்துவந்த மணிவாசகரின் உயர் அருள் நிலையை உலகறியச் செய்யத் திருவுளம் கொண்டார் சிவ பெருமான்.

குதிரை வாங்கச் செல்லுதல்:-

ஒருநாள் அரசவையில் குதிரை இலாயக்காரர் வந்து அரசனைப் பணிந்து புதிதாகக் குதிரைகள் வாங்க வேண்டும் என விண்ணப்பிக்க, அரசன் குதிரைகளை நன்று தேர்ந்து வாங்குவதில் திறமை யுடையவர் தம் முதல் அமைச்சராம் வாதவூரரே எனத் தெளிந்து அவரை நோக்கி "வேண்டும் பொருள் கொண்டு சென்று குதிரைகள் வாங்கி வருக!" எனப் பணித்தான். வாதவூரரும் அரசன் கட்டளையை ஏற்று ஒட்டகம் குதிரை முதலிய வற்றின்மேல் பல பொதிகளாகப் பொன்னும் பொருளும் எடுத்துக் கொண்டு குதிரைகள் வாங்கச் சென்றார். வேதாரண்யம் கடற்கரையில் குதிரைகள் வேறு நாடுகளில் இருந்து வந்து இறங்கும். அவற்றை வாங்க எண்ணிப் புறப் பட்டார். வாதவூரர். புறப்படும்போது அங்கயற்கண்ணியைப் பங்கிலே கொண்ட சொக்கநாதர் ஆலயம் சென்று வணங்கி, வழிபட்டார். உள்ளத்தில் பொங்கியெழும் உவகையுடன், "இறைவா! இப்பெரும் பொருள் உனக்கும் உன் அடியார்களுக் கும் பயன்பட வேண்டும்", என்றுஇறைஞ்சினர். அடியார்கள் உண்மையன்போடு வேண்டுவதை வேண்டியபடியே ஈந்தருளும் இறைவன் அவ்வேண்டுகோளை ஏற்றார். வாதவூரர் கண்களைத் திறந்ததும், திருக்கோயில்பட்டர் இறைவனுக்குத் தீபாராதனை செய்து கற்பூர ஆரத்தியைக் கொண்டுவந்து காட்டி, திருநீறும் மலர்களும் அளித்தார். இதையே நல்ல சகுனமாக நினைத்த மணிவாசகர் குதிரைகள் வாங்கப் புறப்பட்டார். எல்லாம் வல்ல இறைவன் அருளால் ஓர் அற்புதம் நடைபெற்றது.

இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்றமை :-

ஒரு பெருஞ்செல்வர்; தினமும் அவர் இல்லத்திற்குப் பல கடிதங்களும், அழைப்பிதழ்களும் வரும். எல்லாவற்றையும் படிப்பார், சிலவற்றிற்குப் பதில் எழுதுவார். ஒரு சில அழைப்பிதழ்களுக்குத் தன் பணியாட்களை அனுப்புவார். இன்னும் முக்கியமாயின் தன் மகனையோ, மனைவியையோ பரிசுப் பொருள்களுடன் அனுப்புவார். மிக மிக நெருங்கியவ ராயின் தாமே நேரில் செல்வார். அதுபோன்றே பக்குவம் மிகுந்த அருளாளர்களை ஆட்கொள்ளுகின்முன் இறைவன். சிலருக்கு வேறு அருளாளர்களைக் குருவாக அனுப்பி உபதேசம் செய்விக்கின்முன்.

ஆனுல் மணிவாசகப் பெருந்தகையின் உயர் தவத்தின் பயனுல் சிவபெருமானே நேரில் திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் குருந்தமர நீழலில் அடியார்களோடு எழுந் தருளியிருந்தார். இந்தநற்பேறு அருளாளரில் தலைசிறந்தவர்க் கன்றி வேறுயாருக்குக் கிடைக்கும்?

காந்தத்தால் ஈர்க்கப்பட்ட இரும்புபோல் தன் செயல் அற்றுத் திருப் பெருந்துறையுள் நுழைகின்ருர் வாதவூரர். காட்டில் குருந்தமர நீழலில் சிவபெருமான் அடியார்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்த அரிய காட்சியைக் கண்டார். உடல் சிலிர்க்க உரோமம் புளகிப்ப கண்ணீர் மழை பொழிய இருகரங்களையும் சிரமேற்கூப்பி அஞ்சலிசெய்தார். அங்கங்கள் எட்டும் பூமியில் படிய சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

இவரது கனிவைக் கண்டார் பெருமான்; திருக்கண் பாலித்தார்; உபதேசம் செய்தார். அன்றே, அப்பொழுதே தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவன் திருவடி களில் அர்ப்பணம் செய்தார் திருவாதவூரர்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே யனையாய் எனையாட் கொண்ட
போதே கொண்டிலையோ"

என்பது அவர்தம் அருட்பாடல். சிவபெருமாளுக உணர்ந்தே மணிவாசகர் தம் குருவுக்கும் அடியார்களுக்கும் பணிவிடை செய்கின்ருர்.

மாணிக்கம் போன்ற அருள் மொழிகளை அன்பினால் இணைத்து (தொடுத்து) இறைவனுக்குச் சொன்மாலைகள் புனைந் தேத்துகின்றார். அப்போது இவர்தம் அருள்மணித் தொகுப் பினைச்சுவைத்து மகிழ்ந்த இறைவன் இவர்க்கு **'மாணிக்க வாசகர்'** என்று திருநாமம் சூட்டியருளினார்.

"நீ கொண்டு வந்த பொருளைக் கொண்டு திருக்கோயில் ஒன்று அமைப்பாயாக" என்றுகூறிஇறைவன் மறைந்தருளினார். தம் குருவைக்காணாமல் திகைத்துச் சோர்ந்தார் மணிவாசகர். இமைப்பொழுதும் அவரை விட்டு வாழ மனமில்லை. துடித்துக் கதறினார். ஆணையைச் சிரமேற் கொண்டு மிகநல்ல திருக் கோயில் ஒன்றை அமைத்தார். அடியார்களுக்கும் அமுது செய்வித்தார்.

செய்தியை அறிந்தான் பாண்டியன் அரிமர்த்தனன். ஓலை அனுப்பினான். மணிவாசகர் இறைவனிடம்முறையிட்டார். 'ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும்' எனக் கூறச்சொன்னார் இறைவன். அவ்வாறே மதுரை சென்று அரசனிடம் கூறினார். குறித்த நாளில் குதிரைகள் வரவில்லை. மன்னனின் பணியாளர் கள் மணிவாசகரைச் சிறையில் அடைத்தனர். மணிவாசகர் ஏதும் புகன்றாரில்லை. இறைவனையே நினைந்த வண்ணம் இருந்தார்.

இறைவன் தன் அருளால் காட்டில் இருந்த நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி தேவர்களை யெல்லாம் குதிரைப் பாகர்களாக்கி அழைத்துக்கொண்டு நால்வேதங்களைக் குதிரை யாக்கி தாம் அதன்மேல் அமர்ந்து பாண்டிய நாட்டை அடைந்தார்.

ஓர் அருளாளரது உயர்வை உலகறியச் செய்ய இறைவன் எத்தனை அருளாடல் புரிகின்றான்? இதெல்லாம் அவனுக்குத் திருவிளையாட்டு. குதிரைகளின் இலக்ஷணங்களை எல்லாம் முறையுடன் கூறிப் பாண்டியனிடம் குதிரைகளை ஒப்புக் கொடுத்தபின் மறைந்தார். மறுநாள் இரவு குதிரைகள் நரிகளாயின. சினங்கொண்ட மன்னன் வாதவூரரைக் கடுந் தண்டனைக்கு உள்ளாக்குகின்றான். தம் அடியார் படுதுயர் கண்டு தரிக்கஇயலாத சிவபெருமான் வைகைநதியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தார். பிட்டுக்கு மண் சுமந்தார்.

பிரம்படியும் பட்டார். அந்தப் பிரம்படி எவ்வுயிர்மீதும் படச் செய்து எல்லா உயிர்க்குள்ளும் இருந்து இயக்கும் பரம்பொருள் தானே என்பதை உணர்த்தியருளினார். இவ்வளவும்யாருக்காக? மணிவாசகருக்காக. அவர்தம் இனிய பாடல்களில் தம் மனத்தைப் பறிகொடுத்தமைக்காக யாராலும் காணமுடியாத பேரருளாளராம் இறைவன் தம் அடியார் பொருட்டுப் படும் அரும்பாடு என்னே! கண்கள் காணக் காட்சி தந்து அடியும் பட்டு மறைந்தார்.

மணிவாசகரின் உயர்வை அறிந்த மன்னன் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கோரினான். அமைச்சர் பதவியில் மீண்டும் இருக்கும்படி வேண்டினான். பற்றற்றவராய் முற்றிலும் துறந்த மணிவாசகர் பதவியை விரும்பினாரல்லர். இனி இறைவனைப் பாடிப் போற்றுவதும் தவம் புரிவதுமே தம் தொழில் எனக்கருதினார். அவ்வாறே புறப்பட்டார்.

தமிழ் நாட்டில் உள்ள திருத்தலங்களுக்குத் தலயாத் திரை செய்தார். ஆங்காங்கும் அருள்கவிதை மழை பொழிந் தார். இறைவன் தன்னை ஆட்கொண்ட இயல்பையும், இறைவனின் பேரருட் பொலிவினையும், ஆற்றலையும் தம் சிறுமையினையும் பலபடப்புனைந்து எத்தகைய உள்ளமும் உருகுமாறு கவிதைகள் பாடினார்.

திருவாசகத்தின் அருமை :-

"முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவா ருார் பெறுவார் அச்சோவே"

என்ற பாடல் இறைவன் ஆட்கொண்டு அருள்புரிந்த கருணைத் திறத்தை விளக்குகின்றது.

பல தலங்களைத் தரிசித்துத் தில்லையை அடைந்தார் மணிவாசகர். பெருமான் இவர்தம் பாடல்களின் பெருமையை உலகறியச் செய்ய எண்ணினார். தாமே ஓர் அந்தணராக வந்து மணிவாசகர் அருளிய பாடல்களைப் பாடச் சொல்லித் தம் திருக்கரத்தாலேயே ஓலைச் சுவடியில் எழுதி ஈற்றில் மாணிக்கவாசகர் சொல்ல, திருச்சிற்றம்பலம் உடையான் கைச்சாத்து எனக் கையொப்பமிட்டுக் கட்டி எடுத்துச்சென்று நடராஜர் திருமுன் வைத்து மறைந்தருளினார்.

அருளாளர்களுக்கு இவ்வுலகம் ஏவல் செய்யும்; இயற்கை அடிபணியும்; இறைவனே தொண்டு செய்வான் என்ற உண்மையை மணிவாசகர் வரலாற்றின் மூலம் நாம் அறிகிறோம் தாமே வேண்டிப் பெற்றுக் கொண்டார் திருவாசகப்பாடல்களை இறைவன்.

சிவபெருமானால் விரும்பிக் கேட்கப் பெற்ற திருவாசகப் பாடல்களில் மூழ்கித் தம்மை மறந்தவர்கள் பலர்.

ஓரிடத்தில் திருவாசகம் ஓதுகின்றார்கள். ஓதுவா மூர்த்திகள் கண்ணீர் வாரப் பாடலைப் பாடுகின்றனர். அவரைத் தொடர்ந்து அன்பர்கள் கண்ணீர் மழை பொழியப் பாடலைப் பாடுகின்றனர். கண்ணீர் என்பது சாதாரணக் கண்ணீர் அன்று. தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய் வதைப் போன்று வெள்ளம் ஓடுகின்றது.

இக்காட்சியைக் கண்டார் உவமை கூறுவதில் ஒப்பற்றவராகிய அருட்கவிஞர் சிவப்பிரகாச சுவாமிகள். நால்வர் நான்மணிமாலை என்ற தம் அருள்நூலில் அருமையான துதியாக மாணிக்க வாசகருக்கு அமைத்திருக்கின்றார்.

"திருவாசகம்இங் கொருகால் ஓதின்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே."

திருவாசகம் ஓதுபவர் உள்ளத்தை உருக்கும் தன்மையது என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

"திருவாசகத்தில் மனம் ஒருவாசகப்
படுவ தறியாயோ" என்பது ஸ்ரீஇரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்பாடல். வடலூர் வள்ளற்பெருமான்,

"வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ் சுவை கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று பாராட்டியுள்ளார். நான் என்பது அற்று பாடலில் ஒன்றிப்பாடும் போதுதான் அதன் உயர்வு நமக்குப் புலனாகும்.

நல்ல கரும்புச்சாறு. அதில் தேனை ஊற்றிக் கலக்கின்றார் கள். பின் பாலையும் ஊற்றுகின்றார்கள். நல்ல சுவைமிகுந்த பழச்சாற்றினையும் பெய்கின்றார்கள். அத்தகைய இனிய சாற்றினை உண்டால் எப்படி இனிக்குமோ அப்படி திருவாசகம் நான் என்பது அற்ற நிலையில் நம்மை மறந்து பாடும்போது நம் ஊனில் அது கலந்து. பின் உயிரில் கலந்து தெவிட்டாமல் இனிக் கின்றதாம். நாவினால் உண்ணும் சுவையுணவுகள் தெவிட்டி விடும். ஆனால் உள்ளத்தால் மாந்தும் சுவைமிக்க இறையின்பம் என்றும் தெவிட்டுவதில்லை.

இதுபோன்ற பலப் பாடல்களை அருளியுள்ளார். வள்ளற்பெருமான்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் நம் நாட்டிற்கு கிறித்தவ மதம் பரப்புவதற்கு வந்த ஆங்கிலேயர்களில் ஜி. யு. போப் என்பவரும் ஒருவர். அவர் முதலில் தமிழைக் கற்றார். அவருக்குத் தமிழ் கற்பித்த தமிழாசிரியர் மூலம் திருவாசகத் தையும், திருக்குறளையும் அறிந்தார். திருவாசகத்தில் தம் மனத்தைப் பறிகொடுத்தார். படிப்போர் கண்ணில் மட்டும் நீர்சுரக்கும் தன்மைவாய்ந்ததன்று திருவாசகம். படிப்போர் கேட்போர் அனைவரின் என்பும் கரையச் செய்யும் இயல்பு வாய்ந்தது என்றுணர்ந்தார், திருவாசகக் கடலுள் மூழ்கித் திளைத்தார். தம் மொழியாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தார். அத்துடன் நின்றாரில்லை போப்பையர். ''**என்புருக்கி**'' என்ற திருநாமத்தையும் அந்நூலுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

என்னே திருவாசகத்தின் மகிமை! என்னே அருளாளரின் பெருமை!! அத்திருவாசகத் தேன்கூட்டில் ஓரிரு சொட்டுக்களை நாம் சுவைக்கலாமா?

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண் டாய்
வேண்டி நீயாது அருள்செய் தாய்
யானும் அதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென் னில்
அதுவும் உன்றன் விருப் பன்றே

என்னும் திருப்பாடலில் இறைவனின் பேரருள் தன்மையை மிக நன்றாக விளக்குகின்றார். குழந்தைக்கு என்ன வேண்டும் என்பது தாய்க்குத்தான் தெரியும். குழந்தை என்ன அறியும்? இனிப்பு சுவையாக இருக்கிறது என்று அதிகமாக உண்டுவிடும், பின்னர் வயிற்றுவலியால் அவதியுறும். அதற்குத் தேவையான அளவை தாய் அறிந்து ஊட்டுவாள். அதுபோல் இறைவனின் குழந்தைகளாகிய நாம் வேண்டத்தக்கவைகளை இறைவன்தான் அறிவான், அவனை வேண்டினால், நாம் வேண்டும் பொருள் முழுதும் தருவான், அவனையே முழுதும் தந்து விடுவான். வேண்டி நம்மைப் பணிகொள்கின்றான். நாம் விரும்புவன எல்லாம் அவன் விருப்பேயன்றி வேறில்லை என்னும் கருத்துக்களைச் சுவைபடக் கூறுகின்றார்.

வேண்டத் தக்கது அறிவோய் நீ:-

யான் வேண்டத் தகுந்தது எது? வேண்டத் தகாதது எது என்பதை நீதான் அறிவாய். அதாவது யான் எதை வேண்டிப் பெற்றால் உயர்வுற்று உய்தி பெறுவேன்? எதை வேண்டிப் பெற்றால் தாழ்வுற்றுத் துன்புறுவேன் என்பதை நீ தான் அறிவாய்; தெளிவாக அறியும் ஆற்றல் எனக்கில்லை.

வேண்ட முழுதும் தருவோய் நீ:-

யான் எது வேண்டினாலும், எத்தனை வேண்டினாலும், எவ்வளவு வேண்டினாலும், முழுதும் தந்தருள்பவனாக நீ இருக்கிறாய்.

வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ:-

உன் தரிசனம் பெற வேண்டும்; உன் அருள் பெற்று உய்யவேண்டும் என்னும் விருப்பத்தால் வேண்டி நிற்கும் அயன் திருமால் முதலிய தேவர்கள் பலர்க்கும் அரியவனாக விளங்குகின்றாய்.

வேண்டி என்னைப் பணி கொண்டாய்:-

அவ்வளவு உயர்வுடைய நீ, தகுதி சிறிதும் இல்லாத என்னை நீயாக விரும்பி ஆட்கொண்டாய். உன்பணியாளன் ஆக்கிக் கொண்டாய்.

வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின்:-

நீயாக விரும்பி ஒரு பொருளை எனக்கு அருள்கிறாய். யானும் அந்நேரத்தில் அதே பொருளை விரும்புபவனாக இருக்கிறேன். எனக்குள் இருந்து எனக்கு விருப்பத்தை உண்டாக்குபவனும், யான் விரும்புமுன் அதனை எனக்கு அருள் பவனும் நீயாகவே உள்ளாய்.

அல்லால்—அதுவன்றி,
வேண்டும் பரிசொன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே:-

யான் விரும்புதற்கு உரியது ஒன்று உண்டு என்றால் அதுவும் உன்னுடைய விருப்பம்தானே?

அதாவது உன்னையடைய வேண்டும் என்னும் விருப்பமே யாகும். அந்த விருப்பமும் யானாக விரும்ப இயலாது. நீ என்னுள் இருந்து கொண்டு அந்த உயர்ந்த விருப்பத்தை என்னிடம் உண்டாக்குகின்றாய். என்னுடைய கருவிகரணங்கள் அனைத்தையும் நீயே உன் திருவுள்ளப்படி இயக்குகின்றாய். இவ்வுலகில் உள்ள எல்லா அணுக்களினுள்ளும், என் உடம்பில் உள்ள எல்லா அணுக்களினுள்ளும் நீயே அணுவுக்கணுவாகி அமைந்து அசைவிக்கின்றாய். ஆதலால் அந்த மேலான விருப்பமும் நீ என்னுள் அமைந்து உண்டாக்கும் விருப்பமே யாகும் என்பதை உன்னருளால் உணர வைத்துப் பேரின்பம் ஊட்டுகின்றாய். உன்னுடைய தனிப் பெருங் கருணையை எவ்வாறு உன்னி உருகுவேன்? எச்சொல்லால் இயம்பிப் போற்றுவேன்? எம்பெருமானே! என்பது இப்பாடலின் சுருக்க மான விளக்கமாகும். இன்னும் இதன் விரிந்த பொருளினை அருள்ஞான அனுபவம் மிகுந்த மேலோரிடம் கேட்டுணர்ந்து போற்ற வேண்டும்.

இறைவன் தம்மை ஆட்கொண்ட விதத்தைக் கூறும் போது,

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழ் வுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்க, என்னை யாண்டாய்க்கு

உள்ளந்தாள் நின்றுஉச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால், உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால், நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையினேற்கே.

என்று உருகுகின்றார். சிவபெருமானின் திருநாமத்தைக் கேட்ட அளவில் உள்ளம் நிறைந்த காதலால் மேலிருந்து கீழே பள்ளத்தை நோக்கிப் பாய்கின்ற வெள்ளம் கலங்கி, கீழ் மேலாகப் பொங்குவதைப் போன்று "இன்னும் நம்பெருமானை அடையாது வீணே நாள் கழிக்கின்றோமே, என்று அவர் நமக்குக் காட்சி தருவாரோ, எப்பொழுது நம்மை ஆட்கொள்வாரோ" என்று பதைத்துத் துடித்துக் கலங்கியழும் உண்மை அன்பர்கள் நிற்கின்றார்கள். அவர்களை ஆள வேண்டுவதுதான் முறை. அவர்கள் பக்குவம் உற்றவர்கள். ஆனால் நீயோ ஒன்றும் அறியாத, ஒருவகைப் பக்குவமும் பெற்றிராத என்னை விரும்பி வந்து ஆட்கொண்டாய் அவ்வாறு நீ ஆட்கொண்டமைக்காக உச்சி முதல் உள்ளங்கால் வரை நெஞ்சாக இருந்து உருக வேண்டும். உடல் முழுவதும் கண்களாக இருந்து கண்ணீர் பெருக்கிக் கதற வேண்டும். ஆனால் நான் அப்படிச் செய்ய வில்லையே. என்ன காரணம்? என் நெஞ்சம் கல். அதனால் அது உருகவில்லை. என் கண் இணைகள் மரம். அதனால் அவை கண்ணீர் பெருக்கவில்லை என்று கூறி நம்மை யெல்லாம் உருக்குகின்றார்.

சிறந்த நிலையடைந்த அருளாளர்களுக்கும் சங்கல்பம் சிறிது தோன்றலாம். முத்தியடைய வேண்டும் எனும் விருப்பம் தோன்றலாம், அப்போதெல்லாம் இறைவனிடம் தம்மை முழுக்க முழுக்க ஒப்படைப்பதன் மூலம் உய்வுபெறுவர். இந்த உண்மையை

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து
நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்
டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோ தான்?
என்னதோ இங் கதிகாரம்?
காயத் திடுவாய், உன்னுடைய கழற்கீழ்
வைப்பாய் கண்ணுதலே."

எனப் பாடியருள்கிறார்.

அளவிறந்த கோடானுகோடி அண்டங்களும் என்னதிகாரத்தாலா இயங்குகின்றன? சூரிய, சந்திரையும், விண்மீன், காற்று முதலிய வற்றையும் இயக்கு பவர்யார்? இறைவா, உன் பேரருளால் எல்லாம் நடைபெறுகின்றன. எந்த எந்த உயிருக்கு எவ்வெக்காலத்தில் எவ்வெவற்றை அளிக்க வேண்டும் என்று திட்டமிட்டு நடத்தி வருகிறாய். நாயினும் கீழாகக் கிடந்த என்னை விரும்பிவந்து உன்அடிமை ஆக்கிக்கொண்டாய். உண்மையை அறிய ஒட்டாமல் தடுத்து நிறுத்தும் மாயப் பிறவியை உன் வசம் வைத்து வாழ வேண்டும். அதுவன்றி எனக்கு இந்தத் துன்பம் ஏன் வந்தது? இந்த இன்பம் ஏன் வந்தது? என்று ஆராயும் ஆராய்ச்சி எனக்கு ஏன்? எனக்கு ஏது இங்கு அதிகாரம்? எஜமானன் கட்டளைப் படி இட்ட பணியைச் செய்து, கொடுத்ததை உண்டு வாழ வேண்டியது அடிமையின் கடமை. என் எஜமானன் நீ. நீ என்ன கூறுகின்றாயோ அதைச் செய்வது தானே என் கடமை? அதைவிட்டு இது ஏன் வந்தது என்று ஆராயும் அதிகாரம் எனக்கு ஏது? நீ விரும்பினால் இன்னொரு பிறவியைக் கொடுத்து அனுப்புவாய், அன்றி உன் திருவடித் தாமரையில் சேர்த்துக் கொள்வாய்; உன் விருப்பம் எதுவோ அதைச் செய். என் விருப்பம் எதுவும் வேண்டாம் என்று கூறுகிறார்.

நம்மைப் பெரிதாக எண்ணி இறுமாந்து திரியும் நமக்கு எவ்வளவு பெரிய ஆழமான, தெளிவான அறிவுரை இது? பாடலின் உயர் கருத்துகளை நாம் தினமும் எண்ணி வந்தால் நான் என்பது தலைதூக்காது ஓடும் என்பதில் எள்ளளவும் ஐயம் உண்டோ? நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக விஞ்சுபுகழ் திருவாசகம்அளித்த மணிவாசகப் பெருந்தகையார் இறைவனை அடைந்த நிலை சாயுஜ்ய நிலையாகும். இறைவனை அடைய நான்கு வழிகள் உள்ளன என்றும், அவை சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யம் என்றும் பெரியோர் கூறுவர். அவற்றுள் மிக உயர்ந்த நிலை சாயுஜ்யம் ஆகும்.

இறைவன் ஒருவனே ஆண். மற்ற ஆத்மாக்கள் எல்லாம் பெண்கள் எனவும் சான்றோர் கூறுவர். அந்நிலையில் மணிவாசகர் தம்மையே தலைவியாக்கி இறைவனைத் தலைவன் ஆக்கி உருகி உருகித் தமிழ் இலக்கிய இலக்கண முறைவழுவாது பாடிய நூல் திருக்கோவையார் என்னும் அரிய அகப் பொருள் நூலாகும். இறைவன் அற்புதமாகிய அமுத தாரை

களை மணிவாசகரது எற்புத் துளைதொறும் ஏற்றினன் என்று களிதுளும்பப் பாடுகிறார். ஒன்றை ஒரு பாத்திரத்தில் ஊற்ற வேண்டுமாயின் அப்பாத்திரத்தில் உள்ளதை வெளியேற்றிச் சுத்தம் செய்த பிறகே ஊற்ற வேண்டும். முதலில் தம்மிடம் உள்ள மும்மலமாம் அழுக்குகளை நீக்கினனும் இறைவன். பின் அற்புதமான அமுத தாரைகளைப் பெய்தானும். இப்போது ஒரு பரிமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இறைவன் மணிவாசகரிடம் இருந்து ஒன்றைப் பெற்றான் ஒன்றைக் கொடுத்தான்.

இறைவன் எடுத்துக் கொண்டது மணிவாசகரை. ஆனால் தந்தது அவனையே. இதில் யார் கெட்டிக்காரர், என்று மணிவாசகர் வினவுகின்றார். ஏன் எனில் அவனைக் கொடுத்த தால் அந்தமிலா ஆனந்தம் பெற்றாராம். ஆனால் இறைவன் பெற்றது என்ன? ஒன்றுமில்லையே. இவ்வாறு நகைச்சுவை ததும்பப் பாடும் மணிவாசகரின் அருள்நிலையை என்னென்று உரைப்பது. திருவாசகக் கடலில் மூழ்குவோம். உருகுவோம். உயர்வுறுவோம்.

ஆண்டாள்

மூதறிஞர் புகழ் முத்தமிழ் வளர்த்த பாண்டி நன்னாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் திருத்தலத்தில் திருமால் அடியார்களில் சிறந்தவரான பெரியாழ்வார் வாழ்ந்து வந்தார். பெருமாளுக்கு விதவிதமான பூமாலைகள் சிரசிற்கும், மார்புக்கும், கைகளுக்கும், திருவடிகளுக்கும் வெவ்வேறு இயல்பில் திறம்படப் புது மலர் கொய்து அமைத்து தினமும் சாத்தி அழகுக்கு அழகுசெய்து தம் கண்ணார அந்த அரு ளழகைக் கண்டு களிப்பதையே தம் அன்றாட வாழ்வாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். பூ மாலையோடு தீந்தமிழ்ப் பாமாலையும் சாத்தும் பண்புடையவர் அவர்.

அவதாரம்:-

நல்ல ஒழுக்க சீலரான இவர்தம் முன்னைத் தவத்தால் ஒருநாள் அதிகாலையில் பூந்தோட்டத்தில் ஒரு துளசிச் செடி யின் கீழ் பெண் குழந்தையாக எம்பெருமாட்டி இலக்குமி தோன்றி யருளினள். குழந்தையைத் தம்மை ஆளவந்த தெய்வமாகவே எண்ணிய பெரியாழ்வார் "ஆண்டாள்" எனத் திருநாமம் சூட்டினர். எந்த ஒரு பொருளையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தே வழக்கமுடைய அவர், அருளால்

கிடைத்த அக்குழந்தையை பெருமாள் சந்நிதியில் கிடத்தி இக் குழந்தை உமக்கே அர்ப்பணம் என்று உளமார மொழிந்து வணங்கினார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை வளர்ந்தது; பெற்றோர் செய்யும் நற்றவப் பணிகளைத் தானும் உடன் செய்தது.

அருளழகுப் பூங்கொடியாகத் திகழ்ந்த ஆண்டாளை யாருக்குத் திருமணம் செய்வது எனப் பெற்றோர் கவலை கொண்டனர். இதைச் செவியுற்ற ஆண்டாள் எல்லாம் வல்ல எந்தை அரங்கனைத் தவிர மற்றை மானிடர்களை மணக்க மாட்டேன் என்று பெரியாழ்வாரிடம் கூறினாள். தான் அப் பெருமானுக்கு ஏற்ற அழகியா என்ற ஐயம் கொண்டாள்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி:-

ஒருநாள் பெருமானுக்குத் தொடுத்துவைத்திருந்த மலர் மாலைகளை யாரும் அறியாவண்ணம் எடுத்து, தான் அணிந்து கண்ணாடியில் அழகு பார்த்துவிட்டு, பின்னர் அம்மாலைகளை அப்படியே பூக்குடலையில் வைத்து விட்டாள் ஆண்டாள்.

இவ்வாறு சில நாட்கள் நிகழ்ந்தன. ஆண்டாளுக்குத் தன் பேரில் உள்ள அளவற்ற காதலை உலகறியச் செய்ய எண்ணங்கொண்டார் பெருமாள்.

ஒருநாள் மாலைகளைச் சாத்தும்போது அதில் நீண்ட தலை மயிர் ஒன்று இருப்பதைக் கண்டு அர்ச்சகர் பதறிப்போய் பெரியாழ்வாரிடம் செய்தியைக் கூறினார். தாம் தூய்மை யாகவே தொடுத்துக் கொணர்ந்ததாக ஆழ்வார் கூறினார். அடுத்தநாள் மாலைகளை அணிந்துகொண்டு ஆண்டாள் ஆடியில் பார்ப்பதைக் கண்டார் ஆழ்வார்; பதறித் துடித்தார். மகள் மீது சினம் கொண்டார். வேறு பூக்களைப் பறித்துக் கொணர்ந்து அவசர அவசரமாக மாலைகள் தொடுத்து பெருமாளுக்குக் கொடுத்தார். அன்று பெருமாளின் முகத்தில் ஒளி குறைந்து காணப்பட்டது. காரணம் அறியாத அடியார்கள் மனங்கலங்கினர்.

நிகழ்ந்த செய்கையால் மனம் நொந்தவண்ணம் உறங்கிய பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி "இன்று

நீர் சாத்திய மாலைகளை யாம் ஏற்கவில்லை'' என்றார். "சுவாமீ! மன்னிக்கவேண்டும். தெரியாமல் மகள் ஆண்டாள் மாலைகளை அணிந்து கொண்டாள். இனி அவ்வாறு நிகழாமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் ஆழ்வார். இறைவன் "அன்று அன்று, கோதை அணிந்து எடுத்துக்கொடுக்கும் மாலைகளையே யாம் விரும்புகின்றோம்'' என்று கூறி மறைந்தருளினார். இந் நிகழ்ச்சியை அவ்வூரில் உள்ள வைணவ அடியார்கள் அனைவரின் கனவிலும் பெருமாள் உணர்த்தியருளினார்.

ஆண்டாளின் உயர் மனப்பக்குவத்தையும் அருள் நிலையையும் உணர்ந்த ஆழ்வார் மகளிடம் மன்னிப்புக் கேட்டார். அன்று முதல் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்ற திருநாமத்தைப் பெற்றாள் ஆண்டாள்.

பாவனை நிலை:-

இறைவனை அடைய பாவனை மிகவும் அவசியம். அதாவது உணர்வு நிலை. அந்த பாவனை நிலையில் மிகமிக உயர்ந்து விளங்கினாள் கோதைப் பெருமாட்டியார். தன்னை அக்கண்ணனுக்கே முழுதும் அர்ப்பணித்து விட்டாள். இந்த உலக எண்ணங்களை அறவே மறந்து சதா சர்வகாலமும் இறைவனையே நினைந்து அவன் எண்ணத்திலேயே மூழ்கி, தன்னைக் கரைத்துக் கொண்டாள் ஆண்டாள்.

ஒரு குளத்தில் கல்லால் ஆகியதும், பஞ்சினால் ஆகியதும், உப்பினால் ஆகியதும் ஆகிய மூன்று பொம்மைகள் போடப் பட்டன. சிலநாள் கழித்துப் பார்க்கும்போது கல்லால் ஆன பொம்மை போட்டவாறே இருந்தது. பஞ்சால் ஆன பொம்மை சற்றுப்பருத்துக் காணப்பட்டது. ஆனால் உப்பினால் ஆன பொம்மையோ ஒரு சிறிதளவும் இன்றி முழுக்க நீரில் கரைந்துவிட்டது.

இறைவன் ஆகிய அருள் வெள்ளத்தை, உள்ளத்தில் பக்தியில்லாதவர்களால் நுகர முடியாது. பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து இறைவனைக் காணாமல் திகைக் கின்றவர்கள் கல்லால் ஆன பொம்மைக்கு ஒப்பாவார்கள். இவர்களுக்கு எத்தனை தான் எடுத்துக் கூறினாலும் இறையுணர்வு ஏறாது.

நல்ல அருளுரைகளைக் கேட்கும்போது மட்டும் ஈர நெஞ்சுடையவர்களாய் இருப்பவர்கள் பஞ்சு பொம்மைக்கு ஒப்பாவார்கள். இவர்கள் முயன்றால் மேலும் உயர்வு பெறலாம்.

ஆனால் உப்பு பொம்மையோ தண்ணீரில் இரண்டறக் கலந்துவிடும். உயர் அருளாளர்கள் இத்தன்மையர்கள். தாம் என்ற உணர்வையே அடியோடு அழித்துக்கொண்டு முற்றிலும் இறைவன் மயமாகவே ஆகிவிடுவர். அவர்கள் பேச்சு மூச்செல்லாம் இறைவனைப்பற்றியதாகவே இருக்கும். இத்தகைய அருளாளர் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்த சிறப்புடையவர் ஆண்டாள் அம்மையார்.

தென் தமிழ் நாட்டில் பிறந்த இவள் வட நாட்டில் கண்ணன் வளர்ந்த ஆயர்பாடியையே நினைவில்வைத்து வாழ்கின்றாள். அவ்வெண்ணம் முதிர முதிர ஸ்ரீவில்லிபுத்தூரையே ஆயர்பாடியாக எண்ணிக் கொண்டாள். தன்னையொத்த பருவ மங்கையரை ஆயர்பாடியில் உள்ள இடைப்பெண்களாக எண்ணுகின்றாள். பாவை நோன்பு நோற்க அழைக்கின்றாள். 'திருப்பாவை' என்னும் அழகியதொரு தமிழ்ப் பாமாலையை ஆக்கி உலகுக் களித்தாள்.

பெண்கள் எவ்வாறு வாழவேண்டும்? அருள் நிலையில் நாமும் உயரமுடியும் என்ற உயர் நோக்கம் வேண்டும். அது முழு மூச்சாக, முழு நம்பிக்கையுடையதாக இருந்தால் எண்ணிய எண்ணியவாறே அடைய இயலும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது ஆண்டாளின் அருள்வாழ்வு.

கண்ணன் திருக்கையில் உள்ளது வெண்சங்கு. அதைப் பார்த்து ஆண்டாள் ஒருவினா எழுப்புகின்றாள். ஏ வெண்சங்கே! நீ கண்ணனின் செவ்விய அதரங்களைச் சுவைக்கின்றாயே, அது எப்படி இருக்கும்? பச்சைக்கருப்பூரம் போன்று மணம்வீசுமோ? செந்தாமரையைப் போன்று நறுமணம் கமழுமோ, பவளம் போன்ற செவ்விதழ்களில் உன்னை வைத்து ஊதுகின்றானே! அவ்விதழ்கள் மிக இனிப்பாக இருக்குமோ? அத்திருவாயில் இருந்து ஊறும்அமுதம் எவ்வாறு இருக்கும்? அறிந்துகொள்ளும் விருப்புடையேன் நான். சற்றே கூறுவாயாக என்பது ஆண்டாளின் காதற் புலம்பல்.

மிக அதீத நிலையில் சென்றவர்களுக்கு எல்லாப் பொருள்களும் பேசும் திறம் வாய்ந்தவைகளாகத் தோன்றும். என்ன என்று கூறுவது இந்த அருள்பித்தை? இவ்வாறு தன்நினைவின்றி எப்போதும் பெருமாளின் நினைவாகவே இருந்த ஆண்டாள் அப்பெருமாளே தன்னை வந்து மணம்செய்து கொள்ளவேண்டும் என்று எண்ணினாள். இந்த எண்ணம் முதிர்ந்தது. ஒரு நாள் அழகிய தொரு கனவு காண்கின்றாள் "வாரணம் ஆயிரம் சூழ" என்று தொடங்கும் பதிகத்தில் பெருமாள் எவ்வாறு தேவர் புடை சூழ வந்து தன்னை மணம் கொண்டான் என்ற அரிய தொரு காட்சியை அழகோவியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றாள்.

ஒவ்வோர் உயிரும் இறை நாட்டம் கொள்ள வேண்டும்; அவனை அடைய வேண்டும் என்பதை உலகுக் குணர்த்தவே ஆண்டாள் அவதாரம் செய்தாள். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினாள்.

அருள் திருமணம்:-

இவளுடைய மனப் பக்குவத்தை அறிந்த பெருமாள் விரகதாபத்தால் மேலும் அவளை வருத்தவிட நினையாமல் பெரியாழ்வார் கனவில் தோன்றி "ஆண்டாள் திருமணத்திற்கு நீர் ஏற்பாடு செய்வீர் யாம் வந்து மணம் முடித்துக் கொள்வோம்." என்று அருளிச் செய்தார்.

இறைவனின் கட்டளையைச் சிரமேற் கொண்ட பெரியாழ்வார் பெருமாள் குறிப்பிட்ட நாளில் சிறப்பான முறையில் திருமண ஏற்பாடுகள் செய்தார். பூவுலகோர் வியக்கும்வண்ணம் கருடாழ்வார் மீது பெருமான் எழுந்தருளி ஆண்டாளைத் திருமணம் செய்துகொண்டார். என்னே வியப்பு! கற்பனையிலும் காண முடியாத செயல் உண்மையாகவே நடந்தது இது எப்படி நிகழ்ந்தது? எந்த ஒரு உயிர் '**நான்**' என்ற முனைப்பு இன்றி, தன்னை முற்றிலும் அர்ப்பணம் செய்து வாழ்கின்றதோ, அந்த உயிர் என்ன நினைக்கின்றதோ அதை அப்படியே முடித்து வைக்கின்றார் இறைவன். "**வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட**" என்பது திருமுருகாற்றுப் படை. தான் வேண்டியவாறே (ரங்கமன்னார்) பெருமாளைக் கணவனாக அடைந்தாள் ஆண்டாள். அருளாளர் பெருமையை அளவிட்டுக் கூற முடியுமோ?

திருவரங்கனுடன் கலத்தல்:

திருமணம் நடைபெற்றபின் பெருமாள் ஆழ்வாரை நோக்கி "ஆண்டாளைத் திருவரங்கத்திற்குக் கொண்டு வந்து விடவும்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். பிறவிப் பெரும்பேறு பெற்றவராகிய பெரியாழ்வார் ஆண்டாளைப் பல்லக்கில் ஏற்றி அடியார் புடை சூழத்திருவரங்கம் வருகின்றார் திருவரங்கத்தில் உள்ள அர்ச்சகர்கள் கனவில் அரங்கநாதன் எழுந்தருளி "ஆண்டாள் வருகின்றாள். போய் எதிர்கொண்டு அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். அவர்களும் பூர்ணகும்பம் ஏந்தி மேளதாளத்துடன் ஊரின் நுழைவாயிலில் இருந்து எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். இந்த உலக எண்ணம் சிறிதும் இன்றி அரங்கநாதனையே சிந்தனையில் தேக்கிப் பருகியவண்ணம் இருந்த ஆண்டாள் நேராகக் கோயிலின் கருவறைக்குள் புகுந்தாள். பெரிய கடலில் கலக்கும் ஆறுபோல அமைதியாக அரங்கனை நோக்கியவாறு தீராக் காதலுடன் புகுந்தாள். பின்னர் ஆண்டாளை யாரும் காணவில்லை. அரங்கன் அரவணைப்பில் பேரானந்தம் நுகர்ந்த வண்ணம் இன்றும் அமர்ந்து அடியார்களுக்கு அருள்பாலிக் கின்றாள் ஆண்டாள்.

அருளாளர் வாழ்வின் குறிக்கோள் என்ன என்பதை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுவது ஆண்டாளின் சரித்திர மாகும்.

காரைக்கால் அம்மையார்

சைவம் வைணவம் ஆகிய இருபெருஞ்சமயங்களின் சிறப்பை உலகறியச் செய்த அடியார் பெருமக்கள் பலர். அவர்களுள் பெண்பாலரும் உளர். வைணவ சமயத்தில் தலை சிறந்த பெண்பால் அடியாராக விளங்கி அன்பே உருவமாய் அன்பால் உருகி அரங்கனை மணாளனாக ஏற்று அருட்பாக்கள் பல பாடி அருள் வழி காட்டிய ஆண்டாள் அம்மையாரின் பெருமையைக் கண்டோம்.

சைவ சமயத்தின் தலைசிறந்த அடியார்களுள் ஒருவராகிய காரைக்கால் அம்மையாரின் அருள்நெறியைக் காண்போம்.

வங்கமலி கடல் காரைக்கால் என்ற ஊரில் வணிகர் குலத் தலைவராக விளங்கியவர் தனதத்தனார் என்பவர்.

செல்வத்தில் சிறந்து விளங்கிய இவர் அருள் நிலையிலும் உயர்ந்து விளங்கினர். முன்னைத் தவப் பயனல் செல்வத்துட் சிறந்த மக்கட் செல்வத்தை இவர்க்கருள எண்ணினர் சிவபெருமான்.

தோற்றமும் இளமையும்:-

வணிகர் பெருங்குலம் விளங்க அழகிற் சிறந்த புனிதவதி யெனும் பெண் மகவு ஒன்று திருமடந்தை அவதரித்தாற் போன்று அவதரித்தது. பெற்ருரும் மற்ருரும் மகிழத் தளர் நடையிட்டு, மழலைமொழிபயின்று, வண்டல்விளையாடி, அழகின் கொழுந்தென வளர்ந்து வந்தார் புனிதவதியார். உடன் விடையவர் பால் அன்பும் வளர்ந்து வந்தது. வண்டல்பயின்று விளையாடும் போதும் சிவபெருமான் தொடர்புடைய விளையாடல்களாகவே விளையாடுவார்.

சிவன் அடியார்கள் தனதத்தனர் இல்லம் நாடி வரும் போது புனிதவதியாரும் தந்தையுடன் சேர்ந்து அடியார்களின் திருவடிகளுக்குப் பூசை செய்து வலம் வந்து அமுதூட்டி ஆனந்தம் உறுவார்.

இந்நிலையில் அங்க இலக்கணங்கள் கூறும்நலம் யாவும் குறைவறநிரம்பி மிக்க அழகுடன் பொலிந்தார் புனிதவதியார். நலம் பெருகும் நன்மை அடைந்த உடன் இல் இகவாமல் காத்தனர் பெற்ரேர்.

திருமணம்:-

அம்மையாரின் அழகும், செல்வக்குடியின் பெருமையும் உணர்ந்த நாகப்பட்டினத்தில் வாழும் நிதிபதி என்பவர் தன் மகன் பரமதத்தனுக்கு மகள்பேசி மணம் நிகழ்த்த இசைந்தார். தனதத்தனும் பெருமகிழ்வு கொண்டு சுற்றம்போற்ற தளிரடி மென் நகை மயிலாம் புனிதவதியாரைத் தாதவிழ்தார்க் காளையாம் பரமதத்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். ஒரு தனித்திருமகள் என்னும் முறையில் காரைக்காலிலேயே தனித்திருமாளிகையில் மணமக்கள் இருவரையும் குடி அமர்த்தினர்.

இறைவனிடம் அன்பு:-

இல்லறமாம் நல்லறமேற்றுத் தன் கணவன் பணி

விடையில் அணுவளவும் பிறழாது வாழ்ந்துவரும் புனிதவதியார் இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து, பொரு விடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருகியவராய் வாழ்ந்து வந்தார்.

பெண்கள், சிறப்பாக பாரத நாட்டுப் பெண்கள் சமயத்தை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்ற பேருண்மையை அம்மையார் வாழ்க்கை மூலமாக உணர்த்தஉன்னிய சேக்கிழார் பெருமான், இல்லறம் மேற்கொண்ட அம்மையார் எவ்வாறு வாழ்ந்தார் என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். புறத்தே உள்ள எல்லாச் செல்வங்களும் நிலையானதல்ல' என்பதை நன்கு உணர வேண்டும், செல்வம், அழகு, மற்று உள்ள யாவும் அழியும் தன்மையுடையன; எடுத்த இப்பிறவியில் அடைய வேண்டிய பெருஞ்செல்வம் இறை திருவடிகளே, என்பதைப் பெண்கள் உணர வேண்டும். அம்மையார் இந்த உண்மையை நன்கு உணர்ந்திருந்தனர்.

சிவபெருமான் திருவடிக்கீழ் காதல் கொண்டிருந்தனர். எத்தகைய காதல்? அன்புறு காதல், ஓங்கிய அன்புறு காதல், ஒழிவின்றி மிகப் பெருகிய நிலையில் வாழ்ந்து வந்தார். ஏதோ வாரத்தில் ஒருநாளைக்கு அனைவரும் காணும்படி கோயிலுக்குச் சென்று வந்து விட்டால் பக்தி அதிகம் வந்து விடும் என்று நினைக்கும் இக்காலப் பெண்களுக்கு அம்மையார் எவ்வாறு வழி காட்டுகிறார் என்று பாருங்கள்.

நீங்காத அன்பு இறைவனிடம் கொண்டவராய் வாழ்ந்து வந்த அம்மையார், நம்பன் அடியார் அணைந்தால் நல்ல திருவமுதளித்தும், செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் மற்றும் வேண்டும் பொருள்களும் மிக்க பரிவோடு அளித்தும் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார்.

சிவனடியார்க்குத் திருவமுதளித்தல்:-

அம்மையாரின் அருள்திறத்தை அகில உலகுக்கும் உணர்த்தத் திருவுளம் கொண்டான் பெருமான். ஒருநாள் பரமதத்தன் தனக்கு ஒருவர் அளித்த மாங்கனி இரண்டினை இல்லத்திற்கு அனுப்பி வைத்தான். திருவமுது மட்டும் தயாராக இருந்தது. கறியமுது இன்னும் தயாராகவில்லை. இந்நிலையில் பண அரவம் புனைந்தருளும் பரமனார் திருத்

தொண்டர் ஒருவர் மிக்க பசியுடன் புனிதவதியாரின் இல்லம் புகுந்தார். வந்த அடியவரை உபசரித்தபின் அவர்தம் பசிநிலை அறிந்து, நாதன் தன் அடியாரைப் பசி தீர்ப்பேன் என உள்ளே புகுந்து பரிகலம் வைத்து அடிசில் ஊட்ட முற்பட்டார் அம்மையார். "ஏவா மக்கள் மூவா மருந்து" என்பது முதுமொழி. குறிப்பறிந்து நடப்பதில் பெண்கள் மிகவும் கூர்த்தமதி உடையவர்களாக இருக்க வேண்டும். சிவனடியார் பசியுடன் இருக்கின்றார் என்பதைக் குறிப்பால் அறிந்து அவர் கேட்பதன் முன்னரே உணவு பரிமாற முற்பட்டார் அம்மையார். தற்காலப் பெண்களுக்கும் அம்மையாருக்கும் எவ்வளவு மாறுபாடு.

வெறிமலர் மேல் திருவனைய அம்மையார், "விடையவன் தன் அடியாரே பெறலரிய விருந்தானால், பேறிதன் மேல் இல்லை" என்னும் உயர்ந்த எண்ணத்துடன் உணவு பரிமாறுகின்றார். அடியார்களுக்கு உணவு அளிக்கும் வாய்ப்பு கிடைத்தால் அதைவிடப் பெரும்பேறு வேறு இல்லை என்பது அக்காலத்தில் மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்த எண்ணம்.

அடியார் உண்ணக் கறியமுது ஏதும் தயாராக இல்லை; அவருக்கு உடனே உணவூட்ட வேண்டும்; சற்று சிந்தித்தார் அம்மையார். இல்லாளன் 'வைக்க' என முன்னர் அனுப்பியிருந்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றைக் கொண்டு வந்து அடியார் அமுது செய்யும் வண்ணம் படைத்தருளினார். அவரும் உண்டு பசியாறி அம்மையாரை வாழ்த்திச் சென்றார்.

கணவனார்க்கு உணவிடுதல்:-

பரமதத்தன் நண்பகலில் இல்லம் வந்து நீராடி உணவு உண்ண அமர்ந்தான். அறுசுவை உணவை கடமை உணர்வுடன் ஊட்டிய அம்மையார் மாங்கனியையும் இட்டார். மாங்கனியின் மதுரச்சுவையை நுகர்ந்த வணிகன், "மற்றொரு பழம் உண்டே, அதைக் கொண்டு வா" என்று கூறினான். அம்மையார் ஏதும் பதில் கூறவில்லை. இங்கு நாம் நன்கு சிந்திக்க வேண்டும். கணவன் மிக்க ஆர்வத்தோடு பழம் கேட்கும்போது 'இல்லை' என்று கூற மனம் இல்லை. கொண்டு வரச் செல்பவர் போல் உள்ளே சென்றார். "அருங்கனிக்கு என் செய்வேன்" என்று அயர்ந்தார். மெய்ம்மறந்து நினைந்துற்ற இடத்துதவும் விடையவர்தாள் தம் மனங்கொண்டு உணர்ந்தார்.

யார் ஒருவர் பொறிபுலன்களின் உணர்வின்றி மனம் ஒடுங்கி திரிகரண சுத்தியாக ஒருமை மனத்துடன் வேண்டு கின்ருர்களோ, அவர்கள் வேண்டுவதை வேண்டிய வண்ணமே ஈய வல்லவன் இறைவன்.

கௌரவர் சபைதனில் தன்மானம் இழக்கின்றநிலே ஏற்பட்டபோது திரௌபதி, யாரும் தன்னேக் காப்பவர் இல்லே. என்று கைவிட்ட நிலேயில், இரண்டு கைகளேயும் சிரமேற் கூப்பிக் கண்ணனே நினேத்தாள். உடனே கண்ணன் வந்து அருள் புரிந்தான். அடியார்களின் வரலாறுகளில் காணப்படும் உண்மைநிலே இதுதான்.

இறைவன் அருளால் மாங்கனி பெறுதல்:-

அம்மையார் ஒருமை மனதுடன் சிவபெருமானிடம் ஒரு கனி தந்தருளுமாறு வேண்டினர். எம்பெருமான் அருளால் அம்மையாரின் திருக்கரத்தில் அதிமதுர மாங்கனி ஒன்று வந்தது.

வேதங்களாலும், ரிஷிகளாலும், முனிவர்களாலும் தேவர்களாலும் அறிய முடியாத பரம்பொருளிடம் தமக்கு உற்ற இடர் நீக்குமாறு அம்மையார் வேண்டினுர். பலன் கிடைத்தது. இது எப்படி முடியும்? இதை எல்லாம் நம்ப முடியுமா? என்ற ஐயம் பலருக்கு எழலாம்.

நாள்தோறும் இறைவனே உள்ளத்திருத்தி அவனுக்குப் பூசை ஆற்றி அவனுடன் உறவாடி வந்தவர் அம்மையார் என்னும் உண்மை இதனுல் புலனுகின்றது. கண்ணுல் காண முடியாத கடவுளே அனுதினம் போற்றி உறவாடி வந்த காரணத்தால், இன்று அம்மையார் கேட்டவுடன்சிவபெருமான் மாங்கனியைக் கொடுத்தார். இல்லறத்தில் வழுவாது, அறச் செயல்களேத் தவருது செய்து வந்த அம்மையார் அகத்தினில் இறைவனேச் சிக்கெனப் பிடித்து வைத்திருந்தார். இதன்மூலம் நம் அனேவருக்கும் ஒப்பற்ற அருள்நெறியைப் போதிக்கின்ருர் அம்மையார்.

இடுக்கண் வரும்போது மிகவும் அலக்கணுற்று நம்மைச் சார்ந்தாருக்கும் வருத்தம் கொடுத்து, அனேவரிடமும் வன் சொல் பேசி உழலும் நமக்கு, இடுக்கண் வருங்கால் செய்ய

வேண்டியது என்ன என்பதைத் தெளிவாக விளக்குகின்றது அம்மையாரது அருஞ்செயல்.

இறைவனை நாடினால் எத்தகைய இடுக்கணுக்கும் வழி ஏற்படும்.

இறையருளால் பெற்ற மாங்கனியைக் கணவனரிடம் கொடுத்தார். அவனும் வாங்கி உண்டான், அமுதினும் மேலான சுவையை உணர்ந்தான். "இம்மாங்கனி நான் முன்னே அனுப்பிய மாங்கனி அன்று; மூவுலகிலும் பெறுவதற் கரியது இதை நீ எங்கு பெற்றாய்?" என்று கேட்டான்.

சிவபெருமான் தனக்கு அருளிச்செய்த செவ்வியபேரருள் திறத்தைஎடுத்து விளம்புதல்கூடாது என்றஎண்ணம் ஓர்புறமும் கற்புடைப் பெண்கள் கணவன் வினவிற்கு விடையளிக்காமல் இருப்பது உண்மை வழியன்று என்ற எண்ணம் ஒருபுறமுமாக உள்ளம் இருதலைக்கொள்ளி எறும்பெனத் தவித்தது; இறை அருளால் ஒரு முடிவுக்கு வந்தார். "செய்தபடி சொல்லுவதே கடன்" என்ற எண்ணத்துடன் நீலகண்டன் திருவடிகளை மனத்தில் உற வணங்கி, சிவனடியாருக்குத் தாம் கனி வைத்து உணவு பரிமாறியதையும், கணவனர் கேட்டபோது இறை அருளால் பெற்று அளித்ததையும் நடந்தது நடந்தபடி கூறினர்.

சிவன் திருவடிகளை உள்ளத்துள் நினைத்த வண்ணம் கூறினர் என்ற இடம் சிந்திக்கத் தக்கது.

கணவனர் மற்றொரு கனி கேட்டல்:-

கனி கிடைத்த விதம் அறிந்த கணவன், மனைவியார் கூற்றை நம்பவில்லை. தெளியக்கூடிய அறிவு பரமதத்தனுக்கு இல்லை, அருள் நிலையில் அம்மையார் உயர்ந்த அளவுக்கு அவன் உயரவில்லை. மாட்டு வண்டியில் பயணம் செய்பவன் காணும் காட்சிக்கும், வான வூர்தியில் பயணம் செய்பவன் காணும் காட்சிக்கும் வேறுபாடு உண்டன்றோ? முன்னைத் தவப்பயனால் அம்மையாரை மனைவியாக அடையும் பேறு பெற்றான். மனைவியாரை நோக்கி, "இது சிவபெருமான் திருவருளால் கிடைத்தது எனில், இன்னமும்ஒருகனி அவனருளால் அழைத்து அளிப்பாய்" என்றான்.

இறையருளால் மற்ருெரு கனியும் பெறுதல்:-

கணவனின் ஆணை தனைக் கேட்ட அம்மையார் அவ்விடம் விட்டு மறைவான இடம் சென்ருர்கள். சிவபெருமான் திரு வடிகளை அழுந்த நினைந்து "பெருமானே, உம் அருளால் முன்னர் கிடைத்த கனிதனைக் கொடுத்தேன்; மீண்டும் ஒருகனி வேண்டும் என கணவஞர் கேட்கின்ருர்; இப்போது இங்கு இக்கனியைத் தந்தருளவில்லை எனில் என்னுரை பொய்யாம்" என்று வேண்டினர். **என்னுரை பொய்யாம்** எனில் என்ன பொருள்? இக்கனி ஏதுஎன்றுகேட்ட கணவஞர்க்குஉண்மையை உம் திருவருள் கொண்டு கூறினேன். என் உள்ளத்தில் இருந்து கூறவைத்தது தாங்கள்தானே! தங்கள்உரை பொய்யாகலாமா என்றபொருள்பட என்னுரை பொய்யாம் என்ருர் அம்மையார். அருள்நிலைஉடையவர், எண்ணம், சொல், செயல் அனைத்தையும் இறைவன் தன்னுடையதாக ஏற்றுக் கொள்கின்ருன். எல்லாம் வல்ல இறையருளைத் துணையாகக் கொண்ட அம்மையாரைக் காக்கவும் அம்மையின்பேரருள் திறத்தினை உலகுக்குணர்த்தவும் உன்னிய இறைவன் மீண்டும் ஒரு கனியைத் தந்தருளினுர். அக்கனியைக் கணவஞரிடம் அளித்தார் அம்மையார். அவன் கையில் வாங்கியதும் கனி மறைந்தது.

கணவன் எய்திய அச்சம்:-

நாம் செய்த நற்றவத்தின் பயனுல், அம்மையாரின் அருள் முதிர்ச்சியுற்ற திறத்தால் பரமதத்தன் உள்ளம் பயத்தால் நடுங்கியது.

கிடைத்தற்கரிய பெரும்பேறு நமக்குக் கிடைத்துள்ளதே இறையருள் முழுதும் பெற்ற அம்மையாரை மனைவியாகப் பெற்றுள்ளோமே, அவர்களின் அருள்நிலைக்கு நாம் துணை செய்து, நாமும் உய்வோம் என்ற எண்ணம் பரமதத்தன் உள்ளத்தில் வரவில்லை. இவர் ஒரு தெய்வப்பெண்; இவரோடு நாம் வாழ்க்கை நடத்துதல் இயலாது; இவரை விட்டு நீங்கித் தனியாக வாழ வேண்டும்; வேற்ருருக்குச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, யாரிடமும் இதைக் கூருமல் தன்னுள்ளேயே வைத்துக் கொண்டான். அவன் அப்படி எண்ணவில்லையென்ருல், அருமையான திருப்பதிகங்கள் நமக்குக் கிடைத்திருக்குமா? அம்மையாரின் அருள்நிலையின் உயர்வை உலகறிய முடியுமா? அதுவும் ஈசன் செயலே.

பரமதத்தன் வணிகத்தின் பொருட்டுக் கடல்கடந்து சென்றான். மீண்டும் வரும்போது கன்னி நாட்டில் ஒரு பட்டினம் சேர்ந்து அங்கேயே தங்கி வேறு பெண்ணை மணந்து ஒரு பெண் மகவையும் பெற்றெடுத்தான். அக்குழந்தைக்குத் தன் முதல் மனைவியின் திருநாமமான **'புனிதவதி'** என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தான். மனத்தால் முதல் மனைவியைத் தெய்வமாக வணங்கினான்.

செய்தியை மற்ற வணிகர் மூலம் அறிந்த சுற்றத்தார் கிளைஞரை அனுப்பி உண்மையை அறிந்தனர். கணவன் வாழுமிடத்திற்கு அம்மையாரைச் சிவிகையில் ஏற்றிச் சென்றனர். தாம் வந்துள்ள செய்தியைப் பரமதத்தனுக்குச் சொல்லி விட்டனர்.

அம்மையாரும் அவர்தம் சுற்றத்தாரும் வந்த செய்தியை அறிந்த பரமதத்தன் இரண்டாம் மனைவியையும் அவனுக்குப் பிறந்த பெண்மகவையும் அழைத்து வந்து, மானிளம்பிணை போல் நின்ற மனைவியார் திருவடியில் முடியுற வணங்கி

"யான் உமதருளால் வாழ்வேன்; இக்குழந்தைக்கும்
தங்கள் திருநாமம் இட்டுள்ளேன்" என்று மொழிந்தான்

அம்மையார் அருள்நிலையில் உயர்ந்தவரானாலும் இச் செயலைக் கண்டு அச்சமுற்று, ஒருபுடை ஒதுங்கி நின்றார். அருகு நின்றவர்கள் பரமதத்தனை நோக்கி உன் மனைவியை நீ வணங்குவதென் கொல்? என்று வினவினர்.

இவர் மானிடப் பெண் அல்லர், நாம் வணங்கும் தெய்வம், இதை நான் அறிந்த பின்னரே வெளியே வந்தேன். அவர்தம் பொற்பாதம் பணிந்தேன்; நீவிரும் போற்றுதல் செய்யுங்கள் என்றான்.

பலரறியக் கணவன் தம்மை தெய்வம் என்று கூறிய போது அம்மையாரின் நிலை என்ன? நாமாக இருந்தால் என் கணவனே வணங்குகின்றான் நீங்களும் வணங்குங்கள் என்பது போல ஆங்காரம் தலைக்கேறி நிற்போம்.

அருள்நிலை அடைந்தோரிடம் ஆணவம் தலைதூக்காது என்பதை அம்மையார் மூலம் அறிகின்றோம்.

பேய் வடிவம் பெறுதல்:-

"கணவன் உரையைக் கேட்டவுடனே கொன்றைவார் சடையினுர் தம் குறைகழல் போற்றிச் சிந்தை ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு,

"என் கணவன் கொண்ட எண்ணம் இதுவாகில் அவனுக் காகத் தாங்கிய அழகுமிக்க இந்த தசைப்பொதியை நீக்கி உன் தாள் போற்றும் பேய் வடிவு அடியேனுக்குக் கொடுத்தருள வேண்டும்" எனப்பரவி நின்ருர்.

சிவபெருமான் அருளால் அனைவரும் காண அம்மையார் எற்புடம்பைப் பெற்ருர். அருளாளர் தம் உயர்வை யாரே அறிவர்?

தனதத்தனுர்க்கு ஒரே மகள். அளவற்ற செல்வம், திருமகளை ஒத்த பேரழகு, இவை அனைத்தும் இருக்க ஏன் அம்மையார் எற்புடம்பை வேண்டிப் பெற்ருர்? கணவன் இன்றித் தனியாக வாழ்தல் கூடாதா? அம்மையார் இவ்வுலக சுகபோகங்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. கடமைக் காகக் கணவனுக்குப் பணிவிடை செய்து வந்தார். கணவன் தெய்வமாக நினைத்தபோது தன் வழிபடு தெய்வத்தை வேண்டி எற்புடம்பு பெற்ருர்.

கணவனை வருத்தி, பொன்னும் பொருளும் பெறத் துடிக்கும் தற்காலப் பெண்களுக்கு, வயது முதிர்ந்த பின்னும் தன்னை இளமைப்படுத்திப் பார்க்க நினைக்கும் இக்கால மகளிர்க்கு அம்மையார் எவ்வாறு வழி காட்டுகின்ருர் பாருங்கள்.

அருட் பாடல்கள் அருளுதல்:-

ஞானத்தெளிவால் அற்புதத்திருவந்தாதி, மூத்த திருப் பதிகம், திருஇரட்டை மணிமாலை முதலியன பாடி உமை கோனைப் பரவினர். அவ்வருட் பெருங்கடலுள் ஒன்றிரண்டு பாடல்களை நோக்குவோமா?

அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளேபிறப்பறுப்ப தானல்—அருளாலே

**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு.**

உலகங்கள் எல்லாவற்றையும் ஆள்வது அருள்.

அவ்வருள் இன்றேல் எந்த உயிர்களும் வாழ இயலாது. யாருடைய அருள்? ஈசன் அருள். அதுவே இவ்வுலகங்களை எல்லாம் ஆட்சிசெய்கின்றது. அகிலாண்டகோடி அண்டங்களை எல்லாம் படைத்து அவற்றில் வாழும் உயிர்களை ஆட்டுவித்து வருகின்றது ஈசன் அருள். ஏன் இப்படிச் செய்கின்ருன் இறைவன்? உயிர்களின் வினைகளை நீக்கி பிறப்பறுப்பதற்காக என்று விளக்கம் தருகின்ருர் அம்மையார். பிறப்பறுப்பதற்கு யாரால் முடியும்" ஈசன் அருளால் முடியும். எனவே அவன் அருளையே துணையாகப்பற்றி உண்மைப்பொருளை நோக்குவேன் நான், அதுவே விதியுமாகும். ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? என்பதற்கு எஞ்ஞான்றும், எப்பொருளும் ஆவது எனக்கு ஈசன் அருளே. அஃதன்றி நானில்லை, இந்தஉலகமில்லை, உயிர்களில்லை, அசைவில்லை ஏதுமில்லை. எங்கும் நிறைந்து யாவுமாகி விளங்கு கின்றது அருள். அந்த அருளைப் பெற்ருல்தான் உண்மை ஞானம் விளங்கும். உண்மை ஞானம் விளங்கிஞல்தான் பிறப்பறுக்க முடியும். பிறப்பறுத்தால் தான் துன்பங்கலவாத பேரின்பத்தை நுகர முடியும்.

எந்த ஒரு உயிர் துன்பங்கலவாத இன்பத்தை வேண்டு கின்றதோ, அது செய்ய வேண்டிய செயல் என்ன என்பதை மிக அழகாக எடுத்துக் கூறுகின்றது இந்த அருட்பாடல். என்னே அம்மையாரின் அறிவுக்கூர்மை, அருள்திறம், மேலும் ஓர் அமுதத் துளி.

**ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர் முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.**

அம்மையார் நினைத்த உடன் ஈசன் மாங்கனி கொடுத்தாரே எவ்வாறு இது நிகழ்ந்தது எனக் காரணம் அறியாமல் இருந்த நமக்கு விளக்கம் இப்பாடலின் மூலம் கிடைக்கின்றது. எப்போதும் ஒரே பொருளான இறைவனையே நினைந்திருந்தார் களாம். நம்மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள். அதஞல்

நாம் நினைத்ததைச் சாதிக்க முடியவில்லை. அம்மையார் ஒன்றையே நினைப்பது, அதுவே உண்மை என்று துணிந்து மற்றைக் காமங்களை ஒழித்து, அவ்வொன்றையே உள்ளத்தில் அடைத்து வைத்தார்களாம். அந்த ஒன்று எது? கங்கை திங்கள் இவைசூடிய சடைமுடியை உடையவனும், அங்கையில் அனலேந்துடவனுமாகிய சிவபெருமானுக்கு ஆளாம் அது. எம் பெருமானுக்கு ஆள், அதாவது அடிமை என்ற ஒரு எண்ணமே எப்போதும் உள்ளத்தில் நிறைந்திருந்ததால் அம்மையார் நினைத்ததெல்லாம் நிகழ்த்தினுர் இறைவன்.

கைலையை அடைதல்-

இவ்வாறு அற்புதமான அருட்பாடல்கள் பாடி, எற்புருவோடு சிவபெருமான் வாழும் கைலை மலையை நாடி, ஆகாய மார்க்கமாகச் சென்றனர். அண்மையில் சென்றதும் தலையினுல் நடந்து சென்ருர். மலைமகள் அதிசயித்து சிவனை நோக்கி **''தலையினுல் நடந்திங்கேறும் எற்பின் யாக்கை அன்பென்னே'** என்று வினவினுள், உடனே பரமன் **''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண், இந்தப் பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்''** என அருளிச் செய்தார்.

காரைக்கால் அம்மையார் சிவபெருமானின் அருகே வர **'அம்மையே'** என்றுசெம்மை சான்ற ஒருமொழி உலகம்எல்லாம் உய்யவே அருளிச்செய்தார் சிவபெருமான். அம்மையார் பெற்ற பேறு யார் பெற வல்லார்? அம்மையும் அப்பனும் இல்லாத ஒப்பற்ற பரம்பொருளுக்கு அம்மையாக விளங்கும் ஒப்பற்ற நிலையை அருளால் அடைந்தார். அருளால், **'அப்பா'** என்று அவர் திருவடியில் பணிந்து வீழ்ந்தெழுந்தார்.

பரமன் அம்மையை நோக்கி **''நம்பால் இங்கு வேண்டுவதென்?''** என்று வினவினுர். இந்நிலையில் 'நாமாக இருந்தால் என்ன கேட்டிருப்போம்? பொன், பொருள், போகம் மற்றும் அழியும் பொருள் என்னென்ன உண்டோ அனைத்தையும் கேட்டிருப்போம். அம்மையார் **இறவாத இன்ப அன்பு வேண்டினுர்**, பின் பிறவாமை **வேண்டும்** என்ருர். பிறப்பு வேண்டாம் என்று கேட்க நமக்கு என்ன அதிகாரம் என்ற எண்ணம் வந்தது. **மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும் ஒன்று வேண்டும்.** அறவா

நீ ஆடும்போது உன் அடியின் கீழ் மகிழ்ந்து பாடி இருக்க வேண்டும்'' என்று விண்ணப்பித்தார்.

அம்மையாரது உள்ளத்தின் உயர்வும், அருள் நிலையும் அவர்தம் வேண்டுதலால் தெளிவாகிறதன்றோ! அவர்தம் அருள் நிலையை நோக்கி நாமும் நடப்போமாக!

கண்ணப்ப நாயனார்.

அருள் அடைந்து உய்ந்தோர் வரிசையில் அன்பின் சிகரமாக விளங்கும் கண்ணப்ப நாயனார் அருள் பெற்ற வரலாற்றினைக் காண்போம்.

தோற்றம்:-

செயற்கரிய செயல்செய்து ஆறேநாளில் அடைவதற்கரிய முத்திப்பேற்றினை அடைந்த கண்ணப்பர் வளஞ் சான்ற பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும்ஊரில் வேடர்குலத்தலைவனும் நாகனுக்கும் தத்தை என்பாளுக்கும் மகனாக வேடுவர் குலம் செய்த முன்னைத் தவப்பயனால் தோன்றினார். அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்த நாகன் குழந்தையைத் தூக்கிப் பார்த்து கையில் ஏந்துதற்கு அருமையாக இருந்ததால் **திண்ணன்** எனத் திருநாமம் சூட்டினான்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த திண்ணனார் சிலை பயில் பருவம் சேரலும், சுற்றிலும் உள்ள மலைகளில் வாழும் வேடர்கள் கூட்டமெல்லாம் கூடி வாழ்த்த, தங்கள் தொல் மரபின் விஞ்சை தனுத் தொழில் வலவர் தம்பால் விற்றொழில் பயிற்றும் விழா மிகச் சிறப்பாக நிகழ்த்தினான் தந்தை. வண்ண வெஞ்சிலையும் ஏனைப் படைகளும் மலரக்கற்று எண்ணிரண்டாண்டுடைக் காளைப் பருவம் அடைந்தார் திண்ணனார். குலத்தொழிலாம் வில் முதலிய படைத்தொழிலில் சிறந்து விளங்கினார்.

கன்னி வேட்டை:—

நாகன் தன் மகனுக்கு வேடுவ அரசர் பதவியைக் கொடுத்துக் கன்னி வேட்டையாடத் தக்க ஏற்பாட்டுடன் அனுப்பினான். திண்ணனாரும் சில வேடர் குழுவுடன் சென்று சிறப்பான முறையில் வேட்டையாடி இறுதியில் ஒருபன்றியைத் துரத்திச் சென்று வெட்டி வீழ்த்தினார்.

தன்னை விடாமல் தொடர்ந்து வந்த நாணன், காடன் என்ற இருவரில் நாணனை நோக்கி இங்கு நல்ல தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று வினவினார். அவன் அதோ தெரியும் தேக்கு மரவரிசைக்கு அப்புறம் நீண்ட குன்றினுக்கு அயலே குளிர்ந்த பொன் முகலி ஆறு ஓடுகின்றது என்றான். அது கேட்ட திண்ணனார் நாம் அங்கே போவோம்; இக் கேழலைக் கொண்டு வருக என்று மலையை நோக்கி நடந்தார். அரைகாதம் சென்று திருமலைச் சாரல் சோலையை அடைந்தார்.

திருக்காளத்தி மலையைக் காணல்:—

திண்ணனார் முன்னைத் தவப்பயனால் காளத்தி மலையைக் கண்டார். நாணனே! எதிரில் தோன்றும் குன்றின் மேல் நண்ணுவோம் என்று கூறினார். நாணனும் திருக்காளத்தி மலைமிசை குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம் என்றான். இங்கு இறையருளால் ஒருஅதிசயம் நடைபெற்றது. இதுவரை வேடர் குலத்தினராக இருந்த திண்ணனார் பற்றுகள் நீங்கிப் பரமனின் திருத் தொண்டராகும் பக்குவம் பெற்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் திண்ணனார் வாயிலாகக் கூறுகின்றார்.

"ஆவதென்? இதனைக் கண்டிங் கணைதொறும் [என்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்; ஆசையும் பொங்கி [மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்றார் திண்ணனார் [தாம்".

—பெரிய புராணம்.

வினைப்பாரம் நீங்கல்:—

ஒரு பாரம் திண்ணனாரை விட்டு நீங்கியதாம். அது என்ன பாரம்? வினைச்சுமை, இறைவன் மீது பேரன்பு பொங்கியது. இவ்வளவும் இறையருளால் நிகழ்ந்தது. விட்டகுறை தொட்டகுறை என்பார்களே அதுதான் இது. முற்பிறவிகளில் இவர் செய்த தவப்பயன் இப்போது கை கூடிற்று.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில் கண்ணப்ப நாயனாரைப் பற்றிக் கூறும் போது, "கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்று குறிக்கின்றார். வேடுவர்குலத்தில் பிறந்த திண்ணனார் எவ்வாறு எல்லாக் கலைகளையும் கற்றார்?

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற் (கு)
எழுமையும் ஏமாப் புடைத்து"—என்பது குறள்.

எனவே முற்பிறவிகளில் எல்லாக் கலைகளையும் கற்றதனுல் ஆய பயனுக இறைவனடியை இப்பிறவியில் அடைந்தார்.

காளத்தி மலை ஏறி இறைவனைக் காணல்:-

காடனிடம் நீ நெருப்புண்டாக்கிவை; நாங்கள் இம்மலை ஏறிக் கண்டு வருகிறோம் என்று பணித்து, நாணனை உடன் அழைத்துக் கொண்டு, முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட, அளவிலா ஆர்வம் பொங்கி, மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி, என்பு நெக்குருகி உள்ளத்தெழு பெரு வேட்கையோடும் திண்ணனுர் திருக்காளத்தி மலைமிசை ஏறினுர்; ஒரு முகமுடைய லிங்கவடிவில் இறைவனைக் கண்டார்; இறைவனின் அருள் திரு நோக்கம் பட்டது; முன்னைவினை முற்றிலும் நீங்கியது; ஒப்பற்ற அன்புருவம் ஆனுர், வேகமாய் ஓடிச் சென்று கட்டித்தழுவினுர், 'எனக்கு இங்கே இவர் அகப்பட்டார்' என்று மகிழ்ந்தார். இறைவன் மீது பச்சிலையும் பூவும் இருப்பது கண்டு நாணனை வினவி இறைவனுக்கு உகந்த செயல், நீராட்டி, மலர்சூட்டி, உணவூட்டுவது என அறிந்தார்.

திருப்பணி செய்தல்:—

சிவபெருமானைப் பிரிய மாட்டாமலும், அவருக்கு உணவூட்ட எண்ணியும், பிரிய மனமின்றி பிரிந்து சென்று, காடன் உண்டாக்கிவைத்திருந்த தீயில் பன்றியின் இறைச்சியை முறையுறக் காய்ச்சி, வாயினில் அதுக்கிப் பார்த்து சாலவும் இனிய எல்லாம் தேக்கிலையில் சேர்த்து, ஏனையவற்றை எறிந்து விட்டார். பதம் பார்த்த சுவைசால் இறைச்சியைத் தேக்கிலையில் எடுத்துக்கொண்டு, வாயினில் மஞ்சன நீரும், தம் குடுமியில் பூக்களுமாக இறைவனைநோக்கி ஓடோடி வருகின்றுர் திண்ணனுர். இறைவன்முடி மீதிருந்த மலர்களைத் தம்செருப்புக் காலால் தள்ளினுர். வாயிலிருந்த நீரை இறைவன் சிரமீது ஊற்றினுர். பூவைச் சொரிந்தார். பெற்ற தாயை விட மிக்க அன்போடு எதிரில் அமர்ந்து நல்ல சுவைமிக்க ஊன், உண்ணுங்கள் என்று ஊட்டினுர். இறைவன் அன்புக்குக் கட்டுப்பட்டவன் அன்றோ? திண்ணனுர் ஓங்கிய பேரன்பினுல் ஊட்டிய ஊனமுது வானமுதினும் மேலாயிற்று. இறைவனுக்கு ஊட்டிய பின் வில்லும் அம்பும் கொண்டு இறைவன் முன்னே காவல்காத்தார்.

தண்ணீர் குடிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வந்த திண்ணனுர் தாகம், பசி, உறக்கம் அனைத்தையும் மறந்து அடங்காப் பேரன்புடன் இறையருளில் ஒன்றிப் போனுர்.

சிவகோசரியார் வருத்தம்:—

திருக்காளத்தி நாதருக்கு நிதமும் பூசை ஆற்றிவரும் சிவகோசரியார் என்னும் மறையவர் சுவாமியின் முன்னர் இறைச்சியும் எலும்பும் சிதறிக் கிடப்பதைக் கண்டு பதறித் துடித்து, தூய்மை செய்து நீராடி பூசைஆற்றினுர். இவ்வாறே ஐந்து நாட்களாகத் தொடர்ந்து இருப்பதைக் கண்டு மனம் மிகவும் நொந்து உணவும், உறக்கமும் இன்றி இறைவனிடம், "என்னுடைய நாயகனே! இது செய்தார் தமைக் காணேன் உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும்" என்று உளமுருகி முறையிட்டார்.

இறைவனின் அருளுரை:—

ஐயர் சற்று கண்ணயர்ந்த போது சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, "வேடுவன் என்று அவனை நினைக்காதே. அன்பே உருவான அவன் செருப்படி, முருகன்திருவடி போன்று உள்ளது. வாயிலிருந்து உமிழும் தீர்த்தம், ஆகாய கங்கையை விடப்புனிதமானது. அவன் தலையால் இடும் அன்பு மலர், தேவர்கள் இடும் மலர்களை விட உயர்ந்தது" என்று திண்ணனுரின் அன்பின் திறத்தை விளக்கி "நாளை நீ ஒளித்திருந்து என்பால் அவனுக்குள்ள பேரன்பைக் காண்பாய்" எனக் கூறி மறைந்தருளினர். என்னே திண்ணனுர் பெருமை! தம் அன்புத் திறத்தால் தேவர்களையும் மிஞ்சிய சிறப்புடையவர் ஆனுர் திண்ணனுர்!

இறைவன் திருக்கண்ணில் குருதி பெருகுதல்:—

மறுநாள் காலை சிவகோசரியாருக்குத் திண்ணனுரின் அன்புத்திறத்தை எடுத்துக்காட்டத் தமது வலத்திருக்கண்ணில் குருதி ஒழுகச் செய்தார் இறைவன்.

இறைவன் கண்ணில் குருதி கண்ட திண்ணனுரின் துடிப்பு:-

இறைவனுக்குத் திருமஞ்சன நீர் முதலியன கொண்டு வரும் திண்ணனுர் தீய சகுனங் கண்டு என் அத்தனுக்கு என்ன

ஆயிற்றே என்று வல்விரைந்து ஓடிவந்தார். இறைவன் வலக் கண்ணில் குருதி கண்டு நிலத்தில் பதைத்து வீழ்ந்தார். நாமும் திருக்கோயில்களுக்குச் செல்கின்ருேம். ஏதோ வணங்கினேம் என்று வணங்கி வருகின்ருேம். இறைவன் அழுக்குத் துணியை அணிந்திருந்தாலும் நம் துணி வெண்மை யாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருகின்ருேம். அதாவது அங்கு இருப்பது இறைவன் தான் என்ற முழு நம்பிக்கை கொள்வதில்லே. திண்ணனுர் முழுநம்பிக்கை கொண்டார். எனவே குருதி கண்டவுடன் மயங்கி வீழ்ந்தார். சற்று நேரம் கழித்து மயக்கம் தீர்ந்து எழுந்தார். இறைவனின் திருக்கண்ணில் ஒழுகும் குருதியைத் துடைத்தார். குருதி நிற்கவில்லே. என்ன செய்வதென்று தெரியாமல் பெருமூச் செறிந்தார். மீண்டும் மயக்கமுற்று வீழ்ந்தார். பின்னர் தேறித் தெளிந்து, "யார் இதைச் செய்தார்கள்" என்று சினத்துடன் எழுந்து சுற்று முற்றும் பார்த்தார். யாரையும் காணவில்லே. நல்ல காலமாக இறைவன் பின்னே மரத்தின் அருகில் ஒளித்திருந்த சிவகோசரியார் திண்ணனுர் கண்ணில் படவில்லே. அதுவும் இறைவன் செயல்.

மீண்டும் இறைவனிடம் வந்து அவர்தம் மலர்ப்பாதம் பற்றிக் கொண்டு கண்ணீர் வாரக் கதறுகின்ருர்.

பாவியேன் கண்ட வண்ணம் பரமனுர்க் கடுத்த தென்னே?
ஆவியின் இனிய எங்கள் அத்தனுர்க் கடுத்த தென்னே?
மேவினுர் பிரிய மாட்டா விமலனுர்க் கடுத்த தென்னே?
ஆவதொன் றறிகிலேன்யான் என்செய்கேன் என்று
பின்னும்

—பெரிய புராணம்.

இறைவனிடத்தில் எத்தகைய ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தார் திண்ணனுர் என்பதை இப்பாடல் படம் பிடித்துக் காட்டு கின்றது.

பின்னர் சற்றுத்தெளிந்து பச்சிலேகளேக் கொண்டு வந்து பிழிந்தார். குருதி நின்ற பாடில்லே. மாருக அதிகமாக ஒழுகுகின்றது.

நன்கு தெளிந்த அறிவுடைய மருத்துவர் ஒருவர். ஊரில் நல்ல பெயர். அவர் மகனுக்கு உடல் நலமில்லே. மிக்க ஆபத்தான நிலே. மருத்துவருக்கு ஒன்றும் புரியவில்லே.

செய்வதறியாமல் சோர்ந்து விட்டார். அனைவருக்கும் இந் நிலைதான். நமக்கென்று வரும்போது நம் அறிவு பயன் படுவதில்லை. வேடுவர் குலத்தில் பிறந்த திண்ணனர் குருதி யைக் கண்டு திகைக்க வேண்டியதில்லை. விலங்குகளைக் கொன்று தினமும் குருதி கண்டவர். ஆனல் தன் முழு அன்பையும் செலுத்திய இறைவனர் கண்ணில் குருதி ஒழுகிய உடனே மயங்கி வீழ்ந்தார். என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கின்றார்.

செயற்கரிய செயல்:-

இன்று இந்நிலைமைக் கென்னே இனிச் செய்வதென்று பார்த்தார். இறையருளால் உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊனெனும் உரை நினைவிற்கு வந்தது. மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து இறைவனுக்கு முன்னே அமர்ந்து முதற்சரம் எடுத்து தன் வலக்கண்ணைப் பெயர்த்து வாங்கி முதல்வர் தம் கண்ணில் அப்பினர். படிப்பதற்கும் கேட் பதற்கும் நன்றாக இருக்கின்றது. இச்செயலை நாம் செய்ய முடியுமா என்றால் அது சிந்திக்க வேண்டிய விஷயம். தலை அன்பு உடையவர்களால் தான் இச்செயல் செய்ய இயலும்.

ஒருதாய் தன் குழந்தை கிணற்றில் விழுந்து விட்டது என்பதை அறிந்த உடன் குழந்தையை எடுக்க வேண்டும் என்ற உணர்வு மிகுதியால் கிணற்றில் குதித்து விட்டாள். இங்கு பகுத்தறிவு வேலை செய்யவில்லை. அன்பு வேலை செய்கின்றது. இது போன்றதுதான் திண்ணனரின் செயல். என்னே அன்பின் மிகுதி!

திண்ணனர் மகிழ்ச்சி:-

குருதி நின்றது கண்ட திண்ணனரின் நிலை என்ன? இதோ சேக்கிழார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

நின்ற செங் குருதி கண்டார்; நிலத்தினின் றேறப்பாய்ந்தார்;
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர்; கூத்தும் ஆடி
'நன்று நான் செய்த இந்த மதி' என நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பினலே உன்மத்தர் போல மிக்கார்,

—பெரிய புராணம்

மேலும் திண்ணனரின் அன்பைக் காட்ட இவறவன் தன் இடக்கண்ணில் குருதி பெருகச் செய்தார். வேடர் குலப்

பெருந் தவத்தால் வந்து கொள்கையின் உம்பர்களை விட மேலானவராகிய திண்ணனுர் இதனைக் கண்டார். ''மற்றிதனுக் கஞ்சேன்; மருந்துகைக் கண்டேன்; இன்னும் உண்டொரு கண்; அக்கண்ணை இடந்தப்பி குருதி பெருகுவதை ஒழிப்பேன்,'' என்று மகிழ்ச்சியோடு இறைவன் அருகில் சென்ருர். தன் கண்ணைப் பெயர்த்து விட்டால் இறைவனின் குருதி ஒழுகும் கண் இருக்குமிடம் தெரியாதே என்ற எண்ணத்துடன் இறைவன் இடக்கண்ணில் தன் இடதுகாலை ஊன்றிக் கொண்டு உண்ணிறைந்த விருப்பத்தோடு ஒரு தனிப் பகழி கொண்டு தன் கண்ணில் ஊன்றினுர்.

அன்பின் சிகரத்தில் நின்று அன்பின் உருவமாகத் திகழும் திண்ணனுரின் செயற்கருஞ் செயலை என்னென்று போற்றுவது. நாம் இறைவனுக்கு வழிபாடு செய்து கொண்டு இருப்போம். ஒரு எறும்பு கடிக்கும். உடனே ஆ! அம்மா! என்று அலறுவோம். தன் கண்ணில் குருதி வடிவதையும் கருதாது, ஒரு கண் அன்றி மற்ற கண்ணையும் பெயர்த்தெடுக்க முற்பட்டாரே, இச்செயல் யாரால் செய்ய இயலும்?

இறைவன் அருள் புரிதல்:-

இச்செயல் கண்டு, காளத்தி அப்பரால் தரிக்க இயலவில்லை. தம் திருக்கையால் திண்ணனுரின் கையைப் பிடித்துக் கொண்டு **''நில்லு கண்ணப்ப''** என்று மும்முறை கூறி, **'அன்பில் மாறிலாதவனே என் வலத்தில் நிற்க'** என்று இறைவன் அருள் புரிந்தார். இதைவிட என்ன பேறு வேண்டும்.

'கண்ணப்ப' என்று இறைவனுல் அன்போடு அழைக்கப் பெற்ற இவர்தம் அன்பின் பெருக்கைப் பலர் பாராட்டியுள்ளனர். மாணிக்க வாசகர்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பி என்னையும் ஆட்கொண்டருளி''

என்று பாடியிருக்கிருர். அன்பே உருவமாக வாழ்ந்தவர் மணிவாசகர். அவரே தன்னைப்பற்றி இவ்வாறு கூறி கண்ணப்பரை உயர்த்தி இருப்பது உன்னி உணரத்தக்கது.

நக்கீரர் திருக் கண்ணப்ப தேவர் திருமறம் என்ற நூலில் கண்ணப்ப நாயனுரது பெருமையை அழகாக விளக்குகின்ருர்.

கல்லாட தேவரும் திருக் கண்ணப்ப தேவர் திருமறம் என்ற தம் நூலில் அருமையாக விளக்கியுள்ளார்.

பட்டினத்தடிகள் **"நாளாறில் கண்ணிடந்தப்ப வல்லே னல்லேன்"** என்று கண்ணப்பரின் செயற்கருஞ் செயலைப் பாராட்டியுள்ளார்.

இந்த உலகத்தில் உள்ள புராண இதிகாச சாஸ்திர வேதங்கள் ஆகமங்கள் மற்றுமுள்ள நூல்கள் யாவையும் கல்லாமல் தூய அன்பினுல் மட்டும் அருளைப் பெற முடியும் என்பதற்கு கண்ணப்பர் வரலாறு ஒரு சிறந்த சான்ருகும்.

வேத சாஸ்திர புராணங்கள் பொய்யா? அவை பொய் அன்று. அருளால் உயர்ந்த ஞானியர்களுக்கு அவை தேவை இல்லை. அன்பின் சிகரமாகி தூய அன்பினை உலகுக்கு எடுத்துக் காட்டிய கண்ணப்பரது வரலாறு நம் உள்ளத்தை உருக்கி, நாம் எவ்வாறு அன்பு செய்து வாழவேண்டும் என்பதைக் காட்டுகின்றது. அதன்படி நடந்து உய்வோமாக!

அருட் குருநாதர்.

பூவுலகில் வாழும் உயிர்கள் பிறவிக் கடலை நீந்திக் கரை ஏறும் பொருட்டு இறைவன் பல அவதாரங்கள் எடுக்கின்ருன். தன் அடியார் பெருமக்களையும் அனுப்புகின்ருன். நம்நாட்டில் உள்ள புராண இதிகாச வரலாறுகள் இதற்குச் சான்று பகரும்.

ஒரு செல்வந்தர் வீட்டில் ஒருவருக்குக் காதுவலி. காது பற்றிய மருத்துவ நிபுணர் வந்து மருத்துவம் பார்க்கின்ருர். மற்ருெரு சமயம் வயிற்றுவலி. வயிறு சம்பந்தமான மருத்துவ நிபுணர் வந்து குணப்படுத்துகின்ருர். ஒருமுறை உடல் முழுவதும் கோளாறு. அப்போது அனைத்து மருத்துவமும் அறிந்த பேரறிஞர் வருகின்ருர்.

அதுபோன்றே வளமிகுந்த நம் பாரத நாட்டில் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு சிக்கல் ஏற்பட்டது. அவ்வப் போது அது அதற்குரிய அவதார புருடர்கள் தோன்றி அச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தனர். பத்தொன்பதாம் நூற்ருண்டில் பாரத மக்கள் தங்கள் மெய்ஞ்ஞான வழியை, விட்டு நெடுந்தூரம் அகன்று சென்றனர். வறுமை, நோய்

அறியாமை, அச்சம், தன்னம்பிக்கையின்மை, ஊக்கமின்மை, தெய்வ நம்பிக்கையின்மை, போலிப் பகட்டு போன்ற பல சிக்கல்களில் சிக்கி அவதி உற்றனர்,

இந்த நேரத்தில் ஒருபெரிய புரட்சி தேவைப்பட்டது. சாஸ்திர புராணங்களைக் கற்பதற்கு நேரமில்லை, வசதியில்லை, அறிவுமில்லை. இந்நிலையில் மக்களை உய்விக்க வேண்டும் என்று எண்ணினான் இறைவன். மதச்சார்பின்றி பொதுவான நோக்கோடு மக்களுக்கு தெய்வ நம்பிக்கை யூட்ட அன்னை காளியை வழிபடு தெய்வமாகக் கொண்ட இராமகிருஷ்ண பரமஹம்சர் வடநாட்டில் தோன்றினார். மக்களை நெறிப்படுத்தி தெய்வ நம்பிக்கை ஊட்டினார்.

சமரச சுத்த சன்மார்க்கத்தை குறிக்கோளாகக் கொண்டு சாதிமத வேறுபாடற்ற தூய வழிபாட்டை ஏற்படுத்தினார், அருட்ஜோதி வழிபாட்டை முதன்மையாகக் கொண்ட வடலூர் வள்ளற் பெருமான்.

ஆனாலும் மக்கள் நெறிப்பட இன்னும் ஒருவர் தேவைப் பட்டார். கைலாயத்தில் அனைத்து மந்திரங்களுக்கும் மூலமாய், எல்லாச் செயல்களையும் நன்கு நடத்துவிப்பவனாய் விளங்கும் விநாயகப் பெருமான் தாமே திருவவதாரம் செய்ய எண்ணினார். அவர் தாம் ஒப்பற்ற உயர் நெறி கண்ட அருட் குருநாதர். இச்செய்தியை குருநாதரே தம் அருட்பாடலில் விளக்குகின்றார், இதோ அப்பாடலின் அடிகள்

"சுருதி மொழி பகர் குருவென அருளொடு
துயர முறுபவ வினைகளும் அடியொடு
தொலைய உலகினில் மனுவடி வெனவுருக்—கொளநாடி
தொழும கரிஷிக ளமரர்கள் பலரொடு
துரிய கணபதி கலியுக மதில்வரு
துறவை யொருவரும் அறிவது கடினமென்-றறவோது"

வழிகாட்டும் வான்பொருள்.
அருட்பாடல்கள்—பக்கம் 87

வேதங்களெல்லாம் குருவின் உயர்வைக் கூறுகின்றன. அத்தகைய குருநாதராக இந்த உலகில் வாழும் மக்களின் துயரமும், பாவ வினைகளும் அடியொடு தொலைய மனித உருவில் வரவேண்டும் என்று எண்ணினாராம் கணபதி.

அவருடன் மகரிஷிகளும், அமரர்களும் வந்தார்களாம். கலியுகக் கொடுமைகளை ஒழிக்க வந்த துறவியாகிய இவ்வருள் மூர்த்தியை விநாயகப்பெருமானின் திரு அவதாரம் என அறிந்து கொள்வது கடினம் என்று அருளுகின்றார். இதைவிட அகச்சான்று வேறு என்ன வேண்டும்?

இவர்தம் வரலாற்றை இந்நூலின் தொடக்கத்தில் மிகச் சுருக்கமாகக் காணலாம். அப்படி இவர் செய்த அருஞ்செயல் என்ன என்று கேட்கத் தோன்றுகின்றதன்றோ?

மேலே கூறிய சிக்கல்களில் உழன்று கரையேறத் தெரியாமல் தவிக்கும் மக்களுக்கு ஒப்பற்ற உயர்நெறி ஒன்றை வகுத்துத் தந்தார். இந்தா இந்த மருந்து. இது ஒன்றைச் சாப்பிட்டால் போதும்; உன்னிடம் உள்ள எல்லா நோய்களும் போய்விடும் என்று திட்டவட்டமாகக் கூறிய தோடு தாமே பல ஊர்களுக்கும் சென்று பக்குவமுற்ற மக்களைக் கண்டு தாம் கண்ட அருள் நெறியைப் போதித்தார். வெற்றியும் கண்டார்.

அவ்வொப்பற்ற நெறியின் சுருக்கம் இந்நூலின் இறுதி யில் தரப்பெற்றுள்ளது. **'அருட் சட்டம்'** என்ற தலைப்பில் அதனைக் காணலாம். அதன்படி அணுவளவும் தவறாது முழு நம்பிக்கையுடன் நடந்து வந்தால் எல்லா நோய்களும் அகன்று விடுவதோடு, பிறவிநோயும் அகன்றுவிடும்.

ஒரு தாய் தன் கைக்குழந்தைக்கு நோய் வந்ததென்று மருத்துவரிடம் சென்று மருந்து வாங்கி தான்உண்டு, பத்தியம் இருந்து குழந்தையின் நோயைப் போக்குகிறாள்.

அதுபோல, அருட்குருநாதர், மக்கள் உய்ய வேண்டி குற்றாலத்தில் பன்னீராண்டு அருந்தவம் ஆற்றியதோடு, தற்போதும் தம் அவதாரத் திருத்தலத்தில் தவம் ஆற்றிக் கொண்டு வருகிறார். அத்தவத்தின் பயனை, தன்னை நாடி வரும் அருமை அடியார்களுக்குக் கொடுத்து வருகின்றார். என்னே இவர்தம் அருட்கருணை. அருளின் சிகரமாக, தன்னலம் சிறிதுமின்றி, பொருளாசை சற்றுமின்றி, அடக் கத்தின் உருவாக பாரதநாடு முழுதும் அருளுலா செய்து ஆங்காங்கு அடியார்களை உருவாக்கி வந்தார். இன்றும் உருவாக்கி வருகின்றார். இனியும் உருவாக்குவார்.

ஓர் ஆசிரியர் தன் மாணவர்கள் என்ன செய்கின்றுர்கள் என்று எப்போதும் கண்காணித்துக் கொண்டு வருவது போல, அருட்சட்டமேற்ற அடியார்கள் தவறியும் குற்றம் புரியாமல் இருக்கக் கண்காணித்து வருகிறுர். அவர்களை அறியாமல் குற்றம் செய்து விட்டால் உடனே தண்டனை வழங்கி, குற்றத்தை உணரச் செய்து பாடம் புகட்டுகின்றுர். இவரது அருட்கருணைத் திறத்தினை எவ்வாறு பாராட்டுவது.

பச்சைநீர்ப் பழக்கம், மருந்து அருந்தாமை, இவைகளால், வறுமை, நோய் முதலியன போக்கும் புரட்சியும், பிரார்த்தனை செய்து கொள்ளாமை, ஜோதிடம், மாந்திரீகம் முதலியவற்றை நம்பாமை—இவற்றுல் மூடப் பழக்க வழக்கங்களைப் போக்கும் புரட்சியும், ஞானநிட்டை, உடல் பொருள் ஆவியை ஒப்படைத்து வாழ்தல் இவற்றுல் மன அமைதியையும் உண்டாக்கி, அமைதியான, ஆனந்தமான, தூய வாழ்வு வாழ வழிவகுத்தும் அருளிய இவர்தம் பெருங்கருணைத் திறத்தினை என்னென்று போற்றுவது.

கருணுமூர்த்தியாக, ஒப்பற்ற குருநாதராக, உயர்வழி காட்டும் ஆசிரியராக, தம் தவத்தின் பயனை அள்ளி அள்ளித் தரும் வள்ளலாக, அடியார்களுக்கு அபயம் அளிக்கும் அருந்திறலாளராக விளங்கும் இவ்வருட் கடலின் பெருமையை உணர்ந்து போற்றுவோமாக.

வாழ்க குருவின் பெருங்கருணை.
வாழ்க குருவின் அருட்சட்டம்

"சட்டத்தைப் பூரணமாக ஏற்று நடந்து வருவோமானல், அதன் பயனுகத் தூய நல்வாழ்வும், ஆண்டவன் பால் அசையாத அன்பும் வாய்க்கும். இவை வாய்த்து விட்டால், நாணித் தலைகுனிந்து, நடக்க அறியாத நங்கையாகிய மணமகளை, அவளையாளவந்த அன்பின் மணமகன், கைத்தலம் பற்றி, நித்திலப் பந்தருக்கு அழைத்துச் சென்று நித்திய மகிழ்ச்சி அளிப்பதுபோல, உடையவன் நமது கையைப் பற்றிக் கொண்டு நமக்கு வழிகாட்டிச் சென்று, முத்தியெனும் பேரின்பத்தைச் சத்தியமாய் அளிப்பான்."

-இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

இரெட்டியப்பட்டி சுவாமிகள் கண்ட ஒப்பற்ற நெறி

" அருட் சட்டம் "

சுவாமிகள் வகுத்த அருட் சட்டத்தின் சிறப்பான கொள்கைகள்

1. நாள் தவறு நீராட்டம்.

ஒவ்வொரு நாளும் விடியற்காலை 4-00 மணிக்குமேல் 5-00 மணிக்குள் தண்ணீரில் முழுகவேண்டும். தலையும் நனைய நீராட வேண்டும். ஆற்றுநீர் ஊற்றுநீர் சிறந்தது. அது கிடைக்காத போது குளத்து நீர் அல்லது கிணற்று நீரில் முழுகலாம்.

இந்தியாவில் இருடிகளும், முனிவர்களும் கடைப்பிடித்த உயர்ந்த நெறி இது. வைகறையில் அந்த நேரத்தில் எல்லா இடங்களிலும் உள்ள நீருக்கு கங்கையின் சக்தி உண்டாகிறது. மின்னோட்டம் போன்ற ஒரு தெய்விக சக்தியை அந்த நேரத்தில் தண்ணீரைத் தொடுபவர் உணரலாம். அத்தகு சக்தி உடைய நீரைத் தலையில் கொட்டுவதால் உடலில் உள்ள நோய் நீங்கும். வேறு பிணிகள் வாரா. தெய்வசக்தி ஓங்கும்.

2. வெந்நீர் வேண்டாம்.

குடிக்கவோ, குளிக்கவோ, எக்காரணம் கொண்டும் வெந்நீரைப் பயன்படுத்த லாகாது.

தண்ணீரைக் காய்ச்சுவதால், அதில் உள்ள ஜீவசக்தி அழிக்கப் படுகிறது என்பது சுவாமிகள் கொள்கை. எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போதும், வெந்நீரைப் பயன்படுத்தல் ஆகாது. எண்ணெயைக் காய்ச்சுவதும் கூடாது. மழை, தண்ணீராகப் பொழிவதால் உயிர்கட்கு வாழ்வமைகிறது. கடல் தண்ணீராக அமைந்துள்ளதால் எண்ணற்ற உயிர்கள் அதன்கண் வாழ்கின்றன. பயிர் வகைகளும் தாவரங்களும் தண்ணீரால் வாழ்வும் வளர்ச்சியும் பெறுவதைக் காணலாம்.

3. வழிபாடு.

நீராடி முடிந்ததும், விநாயகர் கோயிலுக்குச் சென்று மும்முறை வலம்வந்து, மனமுருகி வழிபட்டு வணங்கவேண்டும். (எந்த மதத்தினராயினும், தத்தமக்குரிய வழக்கப்படி வழிபாடு செய்யலாம்.) பின்னர் தண்ணீரில் திருநீறும், துளசியும் இட்டு உள்ளுக்குப் பருக வேண்டும்.

அன்றாட வாழ்வு அமைதியாகவும், சிறப்பாகவும் ஒழுக்கத்துடனும் அமைய இவ்வழிபாடு உதவி செய்கிறது. தீர்த்தம் திருநீறு அருந்துவதால் உடல்நலமும், உளநலமும், அருள் நலமும் உண்டாகும்.

4. ஒருவனே தெய்வம்.

உலகெலாம் படைத்துக் காக்கும் ஒரு பரம்பொருளைப் பல மதத்தினர் பல உருவங்களில் வழிபட்டுப் பயன் அடைகின்றனர். ஆனால் பரம்பொருள் ஒருவரே என்ற தீர்மானமான எண்ணம் கொள்ளவேண்டும். எந்த மதத்தினையும் நிந்தித்தல் கூடாது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த நோக்கம் உலகில் வளர்ந்து, மதப்பூசல் அடியோடு தொலைய இந்தக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது.

5. பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.

புலாலுண்ணல், பொய்பேசல், கள் குடித்தல், சூதாடுதல், திருடுதல், புகைபிடித்தல், புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்களைப் பயன்படுத்துதல், பொல்லாரோடு உறவாடுதல் முதலியன ஆகாது.

உயர் நாட்டம் கொண்ட அனைத்து ஞானிகளும் மகான்களும் இப்பஞ்சமா பாதகங்களை நீக்கவேண்டும் எனக் கூறியுள்ளது கருதத்தக்கது.

அருட்சட்டம் மேற்கொள்வோர் தூய்மையான மரக்கறி உணவையே புசிக்க வேண்டும். மாமிச உணவை அடியோடு தவிர்க்க வேண்டும். சைவ நல்லுணவே சத்வ குணத்தை உண்டாக்கும். சன்மார்க்கத்தில் கூட்டுவித்து, தெய்வ நலம் வளரச் செய்யும் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

6. மருந்து அருந்தாமை.

எந்நோய் வரினும், எத்துயர் வரினும், எத்தகைய சிக்கல் ஏற்படினும், ஒரு மருத்துவரையோ, ஒரு மனிதரையோ தஞ்சம் என்று அடையாது, எல்லாம் வல்ல இறைவனையே தஞ்சம் எனப் பற்றி, உறுதியாக நின்று உயர் பயன் பெறவேண்டும்.

"வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய்" எனவும் வினையினால் சனிக்கும் இத்தேகம்' எனவும் பெரியோர் கூறிய வண்ணம் வினையைத் துய்க்க, அதாவது அனுபவித்துத்தீர்க்க நோய் வருகின்றது. அந்நோயை நாம் தடுக்க முயல்வது நன்றன்று.

வைத்தியனாலும், மருந்தினாலும் நோய் நீங்குமென்றால், அவ்வைத்தியனையும் மருந்துகளையும் படைத்த வள்ளலான இறைவனால் அந்நோயை நீக்க இயலாதா என்று சிந்தித்தல் வேண்டும்.

தீரா நோய் எனும் பிறவி நோயையும் தீர்த்தருளவல்ல இறைவன் ஆரா நல்லமுதாகி அகம் புறமும் இருந்து காத்து அருளும் அருமையை அறிந்த பின்பும் நோயினை நீக்க ஒரு மருந்தையும் மருத்துவனையும் நாடுவதென்றால் இவ்வறியாமையை நீக்க யாரால் இயலும்? இறையருள்தான் அவர்களைத் திருத்தி ஆளவேண்டும் என அண்ணலார் அருளுவர்.

7. பிணிவந்தால் செய்ய வேண்டியவை.

நோயுற்றபோது காலை, மாலை இருவேளையும் பச்சை நீரில் மூழ்கித் திருநீறு பூசி, திருநீறும் துளசியும் இட்டதீர்த்தம் அருந்தி மனமுருகி இறையருளை நாடி அவனருள் துணையால் நோய் நீக்கம் பெற்றுப் பயனடைய வேண்டும்.

விடம் தீண்டியபோதும், வெட்டு ரணம் ஏற்பட்டபோதும், மகப்பேறு காலத்தும் நீராட்டம், தீர்த்தம், திருநீறு இவற்றைக் கொண்டே பயனடைதல் வேண்டும்.

8. நம்போல் உயிரை நாடாமை.

வைத்தியம், ஜோதிடம், மாந்திரிகம், இவைகளை நம்பி ஏமாறாமல், மருந்து, மணி, மந்த்ரம் முதலியன மருவாமல்,

'எல்லாம்வல்ல கடவுளே கதி, என்ற பரிபூர்ண நம்பிக்கையோடு, தளராத நெஞ்சத்துடன் இறைவன் திருவருள் நாடி, அனைத்து இடுக்கண்களையும் வென்று நற்பயன் பெறவேண்டும்.

நமக்கு எத்தகைய சூழ்நிலை ஏற்படினும், நம்போன்ற உயிரை நாடாமல், இறையருளை நாடிப் போற்றி நலம் பெற்று உய்தல் வேண்டும் என அருளினர் அண்ணலார்.

9. பிரார்த்தனை செய்து கொள்ளாமை.

இந்தத் தீது அகன்றால், இந்த நன்மை கை கூடினால் இன்னது செய்கின்றேன் என்று தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கத்தைக் கைவிடவேண்டும். எப்பொழுதும் நமக்கருள் புரிந்து நம்மைப் பேணும் இறைவன் நம்மிடமிருந்து எப்பொருளை எதிர்பார்க்கின்றான் என்றால், ஈடிணையில்லாத அன்பொன்றையே என உணரலாம்.

வேண்டத்தக்கது அறிபவனாகிய இறைவன் நம்மிடம் வேண்டுவது உயர் அன்பே.

10. வெள்ளி விரதம்.

சட்ட நெறியில் விரதம் மிக்க அவசியமாகும். திட்டமுடன் விரதமிருப்போரின் உடம்பிலுள்ள பிணிகள் தீர்ந்து போகும். உள்ளம் தெளிவுற்று உயிர் உரம்பெற்றோங்கும். உறுபசி பொறுக்கும் ஒருவன் உலகில் நேரும் துன்பம் எதையும் பொறுத்துப் பிறர்க்குணவிட்டு உயர்நிலையெய்திச் சுகிப்பான்.

எல்லா மதத்தினர்க்கும் வெள்ளிக்கிழமை சிறந்த நாளாக இருப்பதால், வெள்ளிக் கிழமையை விரதநாளாக சுவாமிகள் குறித்துள்ளார். சுவாமிகள் சிறந்த அடியவர் பலர்க்கு அவரவர் பக்குவத்திற்கேற்ப, பல விரதங்களை அருளி மேல் நிலைக்கு அழைத்துச் செல்கின்றார்.

11. ஞான நிட்டை.

நாள்தோறும் இறைவன் திருவருளை வேண்டி எந்தப் பிற எண்ணமும் இன்றி, அமைதியாக அமர்ந்து அருள்நிட்டை பேணி, ஆனந்தம் எய்தப் பழக வேண்டும் என்பது சுவாமிகள் கருத்து.

மனம் அறியாமையோடொன்றி உறங்குவதால் சக்தி மிகக் குறைகிறது. மனம் ஞானத்தோடொன்றி—அடங்கினுல் சக்தி வளர்ச்சியடைகிறது. மனம், வார்த்தை, செயல் அடங்கி ஞானமுறுதல் நிட்டையென்றும், ஞான நிட்டையால் பிறவிப் பிணி நீங்குகிறதென்றும் மேலோர் கண்டனர்.

உடையவன் திருவடியை உள்ளத் துன்னிக் கண்மூடிச் செயல் அடங்கி அமர்ந்திருந்தால் எவ்வுயிர்க்கும் நலம் பயக்கும் இறைவனருள் பயனளிக்கும்; முத்தியெனும் பிறவிப்பயன் அடையும் வழி இதுவே என்று சுவாமிகள் அருளியுள்ளார்கள்.

12. இறந்தவர்க்கு இரங்காமை

நாம் முன்பு செய்த வினையை நுகர்ந்து முடிக்கும்படி இறைவன் நமக்கு உடம்பு கொடுத்துள்ளான். வினை முடிந்த உடனே ஒரு கணமும் தாமதியாமல் உலக வாழ்வு முடிகிறது.

இவ்வுண்மையை உணராமல் இறந்தவர்க்காக வருந்துதல் இறைவனின் பெருங்கருணையையும் அறநேர்மையையும் மறத்தல் போலாகும்.

இறந்தவர் உடலைத் தீக்காப்பு செய்யாமல், மண்காப்பு (சமாதி) செய்ய வேண்டும், என்பது சுவாமிகள் கட்டளை.

13. அற மன்றம் அணுகாமை.

உலக விவகாரங்களில் சிக்கல்கள் நேரும்போது அறக் கடலாகிய இறைவனின் அருள் துணைநாடி, அறமுடிவைப்பெற முயல வேண்டுமே யன்றி, அறமன்றம் நாடி விவகாரங்களை விபரீதமாக வளர்த்துக் கொள்ளுதல் கூடாது. இறைவனிடம் உறுதி வளர்ந்திட இவ்வழி துணைபுரியும்.

சூழ்நிலை காரணமாக நாம் அறமன்றம் அணுகநேரின், உள்ளதை உள்ளபடி கூறிவிட்டுத் திரும்ப வேண்டும் என அண்ணலார் கூறுவர்.

14. உடல், பொருள், ஆவியை ஒப்படைத்து வாழ்தல்.

"சட்டம்" என்றால் என்ன? ஒரே ஒரு வார்த்தைதான். உடல், பொருள், ஆவி அனைத்தும் உனக்கே அர்ப்பணம் என

உடையவன் திருவடியில் ஒப்படைக்க வேண்டும்; அவ்வளவு தான் என சுவாமிகள் கூறுவார்கள்.

இறைவன், உயிர்கள் உய்யும் பொருட்டு உலகமெல்லாம் உண்டாக்கி, உயிர்களுக்கு உடம்பு கொடுத்து, கருவி கரணங்கள் யாவும் கொடுத்து, ஒவ்வோர் அணுவுள்ளும் கலந்து நின்று உயர்வுறுமாறு ஊக்கி, மடம்படும் உயிரை முத்தி நிலைக்கு உயர்த்துகின்ருன். ஆதலால் உடம்பு, பொருள், உயிர் அனைத்தும் இறைவனுக்கே உரியனவாகும்.

அவன் உடமையை அவனுக்கே அர்ப்பணித்து, அமைதி யோடு, ஆனந்தமயமான, அருள்மயமான வாழ்வு வாழ்ந்து வந்த நம் முன்னோர்களைப் போன்று நாமும் வாழ்வது இன்றைய உலகுக்கு மிக மிக இன்றியமையாததாகும்.

15. சட்டம் மீறினல் தண்டனை.

அடியவர்கள் சட்டநெறியினின்று தவறுகையில் அறிவுறுத்தித் திருத்தியும், இத்தகைய மறதியும், ஊக்க மின்மையும் கூடாதென உணர்த்தியும், இவ்வாறு நடந்தது தீதெனக் காட்டியும், நம்மைத் தண்டித்துத் திருத்துதல் இறைவனின் அருட் செயலேயாகும்.

திடீரென்று கையைத் திருப்ப முடியாமலோ, விரலை மடக்க இயலாமலோ இருக்கும்; வயிற்றில் கோளாறு தோன்றும்; தேள் கொட்டும்; மனிதரால் இடையூறு நேரும். இப்படியேதேனும் நேர்ந்தால், நம் தவறை உணர்ந்து மன்னிப்புக்கோரி வணங்கினல் தண்டனை நீங்கி நலம் உண்டாகும்.

ஜாதிமத பேதமின்றி எவரும் சட்டம் ஏற்கலாம். எத்தகைய அச்சமுமின்றி அருட்சட்டம் மேற்கொண்டால் வான் பொருள் வழி காட்டும்.

எல்லாரும் எளிது ஏற்கத்தக்கதாய், பொருட் செலவில் லாத ஒன்ருய், நல்லாற்றில் நடத்துவதாய், தவறிடின் தண்டனை தந்து திருத்துவதாய், எல்லா நலமும் ஈந்தருளும் இந்த அருட்சட்டம் பூவுலகில் மிகச் சிறந்த ஒன்ருகும்.

16. வேலைக்கு ஏற்ற கூலி.

உலகில் வாழும் உயிர்கள் சட்டம் முழுவதையும் பேணி முழுப்பயன் பெறவேண்டும் என்பதே சுவாமிகளின் திருவுள்ளம் ஆகும். ஆனால் உயிர்களின் வினை அவ்வாறு நடக்க இயலாவண்ணம் தடுக்கும். இதைச் சுவாமிகள் அறிவர். உயிர்கள் தம்மால் முடிந்தவரை சட்டத்தின் அம்சங்களைப் பின் பற்றி நடந்து வந்தால், உடையவன்பால் உறுதியுடன் உருகி முறையிட்டு வந்தால், ஒவ்வொன்றாகச் சட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் அநுட்டித்து முழுப் பயன்பெற உடையவன் திருவருள் கூட்டுவிக்கும் என சுவாமிகள் அருளுவர். உழைப்புக்கேற்ற ஊதியம் உண்டு எனப் புன்சிரிப்போடும் கூறி அருளுவர். அருட்சட்ட நெறியைப் பூர்ண அன்புடன், தளராத உறுதியுடன் அநுட்டிக்கும் அடியவர்கள் அவர் குடும்பத்திற்கு ஒளிவிளக்காய், ஊருக்கு மணி விளக்காய், நாடு முழுதுக்கும் அருட்ஜோதியாய் மிளிர்ந்து நலம் புரிவார்கள். வாழ்வில் சற்றேனும் அச்சமும் ஐயமும் இன்றி சாந்த முற்றோராய், உடையவன் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்த உளத்தோராய் இனிபிறவா முத்தி நிலையை எய்தினோராய் விளங்குவர்.

அருட்சட்ட அநுட்டானத்தில் சிறந்தவர் எய்தும் மூன்றாவது பெரும் பயன் உடையவனிடம் தளராத உறுதியாகும். இது வேறெந்த வகையிலும் பெற இயலாத அரும் பெரும் பொருளாகும். இப்பொருளே புனிதமான மெய்ப்பொருளை உணர்த்தி, அருள்வழிகாட்டி, உண்மையின்பம் அடையச் செய்யும். சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட அருட்சட்டம் எல்லா மதங்களின் சாரமாகும். இவ்வருட் சட்டச் செந்நெறியைத் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் கடைப்பிடித்து, தூய நல்வாழ்வாற்றி வருகின்றனர்.

சுவாமிகளின் வரலாற்றினையும், அருட்சட்ட விரிவினையும் மேலும் அறிந்து கொள்ள விழைவோர் 'செந்தமிழ் விளக்க வள்ளலார்', 'ஆட்சிச்சொற் காவலர்', 'செந்தமிழ் வித்தகர்', 'நற்றமிழ் நம்பி', 'தமிழ்ச்சுடர்', 'சாந்தசீலர்', 'சிவநெறிக்

காவலர்', 'நற்றமிழ் வித்தகர்' உயர்தவத் திரு. கீ. இராமலிங்கனார். எம். ஏ. அவர்களால் 1937-ல் எழுதப்பெற்ற 'வழிகாட்டும் வான்பொருள்' என்னும் நூலில் அறியலாகும்.

மேலும் விரிவு வேண்டுவோர் 'சற்குருதாசன்', உயர் தவத் திரு. பாலகவி. மி. கே. வேங்கடராமன் அவர்களால் இயற்றப் பெற்ற "கருணை மிகுவள்ளல் அருள் நிறை சரிதம்" என்னும் கவிதை நூலிலும் காணலாம்.

அனைவரும் போற்றி, அருள் நலம் பெறுக!

பாலகவி. **மீ. கே. வேங்கடராமன்** அவர்கள்

இயற்றிய நூல்கள்

குருபர வணக்கம்
சற்குருநாதர் திருவடிப் புகழ்ச்சி
சற்குரு நாமாவளி
மதுரைப் பரிபூர்ண விநாயகர் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பல்லாண்டு
திருக்கோயில் திருப்பணி முறையீடு
இரெட்டியப்பட்டி குருநாதர் அர்ச்சனை
அருட் ப்ரஸாதம்
குருநாதர் பிள்ளைத்தமிழ்
குருஅருள் திருவுந்தியார்
பேரின்பவேட்கை
குருஅருள் வேட்டல்
அருள்மணிப் பெட்டகம்
அருள்நெறி மாலை
அன்பின் ஒளி
அருட்சட்ட வழிபாட்டு முறை
அருட்சக்தி அன்னை வரலாறு
கருணைமிகு வள்ளல் அருள்நிறை சரிதம்
சமயப் பொது நெறி கண்ட சற்குருநாதர்
அன்பு வழிகாட்டும் அருளுபதேசங்கள்

விவரங்களுக்கு:

சற்குருதாசன் டிரஸ்ட்,
11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி,
பெரிய காஞ்சிபுரம்-631 502.
(செங்கற்பட்டு மாவட்டம்)

பிரார்த்தனை

அருளுருவம் தாங்கி அகிலத்தைக் காக்கும்
அண்ணலே!

பொய்யான என் உள்ளத்தில் தோன்றும்
பொய்யான எண்ணங்களையெல்லாம் நீக்கி
மெய்யான உன்னடியை விரும்பும்
மெய்யான எண்ணத்தைத் தருவீர்.

பேருக்காகவும் புகழுக்காகவும் எந்தச் செயலையும்
நான் செய்யாமல், உமது அருளைப் பருகும்
தாகமுற்று ஏங்குவேனாக.

நின் அடியார்களுக்குத் தொண்டு செய்யும்
சிறந்த பணியை இவ்வடிமைக்கு அருள்வீராக.

அவனிமேல் அருள்நெறி ஓங்க அணுவளவாவது
இவ்வடிமை பயன்படுமாக.

இறைவா! இறைவா! இறைவா!

கமலம் பிரஸ், காஞ்சிபுரம்.